விலை: 30
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 362 கார்த்திகை 07ஆம் நாள் வெள்ளிக்கிழமை 23 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM




வடமாகாண
**மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*

"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்."

– மிகைல் கோபர்ச்சேவ்–
(சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)

## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது
### சர்ச்சைகள், குழப்பங்கள் வரலாம்

கொழும்பு, நவ. 23
நாடாளுமன்ற அமர்வு இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிலையில், நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.
நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு அதிக உறுப்பினர்கள் ஒதுக்கப்படும் நிலையில், பெரும்பான்மையில்லாத » 25

## இரு வேறு விபத்துக்களில் இருவர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.22
யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த இரு வேறு விபத்துக்களில் இருவர் உயிரிழந்தனர். இந்த விபத்துக்கள் யாழ்ப்பாணம் நகரிலும், பொன்னாலைப் பாலத்திலும் நடந்துள்ளன.
யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் வீதியைக் கடக்க முயன்ற பெண்ணை வேகமாகப் பயணித்தி உந்துருளி மோதியது. படுகாய » 23

## தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு பெயர்களை முன்மொழிந்தது

கொழும்பு, நவ. 23
நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான இரண்டு பேரின் பெயர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிந்துள்ளது. இதற்கு முன்னரும் தெரிவுக் குழுவில் இடம்பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதி ராசா, த.சித்தார்த்தன் ஆகியோரின் பெயர்களையே கூட்டமைப்பு மீண்டும் முன் மொழிந்துள்ளது. » 25

# கறிவேப்பிலையாகக் கூட்டமைப்பை உபயோகின்றன சிங்கள அரசுகள்!

## கடுமையாகச் சாடுகின்றது ஜே.வி.பி. இணைந்து செயற்படவும் சம்மதம்

"கொழும்பு, நவ. 23
இலங்கையில் ஆட்சிப் பீடமேறிய சகல அரசுகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமது அரசியல் தேவைகளுக்காக மாத்திரமே பயன்படுத்தியுள்ளனர். அதன் பின்னர் அவர்களைக் கைவிடும் அல்லது ஏமாற்றும் நிலையே காணப்படுகின்றது.
சில விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்புக்கும் எமக்கும் கருத்து வேறுபாடு இருந்தாலும், எதிர்காலத்தில் கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்ற முடியும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தெரிவித்துள்ளது. » 25

## பிணையில் வந்தவருக்கு பொலிஸில் மீளவும் பதவி

கொழும்பு, நவ. 23
வெலிக்கடைச் சிறைச்சாலை படுகொலை சம்பவம் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பிணை அனுமதியில் வெளியே வந்துள்ள பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் » 25

## இடைக்கால கணக்கறிக்கை தோற்றாலும் அரசு கவிழாது
### மகிந்த அணி திட்டவட்டம்

கொழும்பு, நவ. 23
இடைக்கால கணக்கறிக்கை தோல்வியடைந்தாலும் அரசு கலையாது என்று அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
மகிந்த அரசு 2019ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான இடைக்கால கணக்க » 25

## நியமனம் வழங்குவதை உடன் நிறுத்த உத்தரவு
### மைத்திரி செயலகம் அவசரமாகப் பிறப்பிப்பு

கொழும்பு, நவ. 23
மறு அறிவித்தல் வரும்வரை அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு புதிய நியமனங்களை வழங்க வேண்டாம் என அரச » 25

## ஜே.வி.பி., கூட்டமைப்பின் ஆதரவு தேவை இல்லை
### அரசு கூறுகின்றது

கொழும்பு, நவ. 23
நாடாளுமன்றத்தில் எமக்கே பெரும்பான்மையுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு வழங்கத் » 25

## வாய்திறந்த ரஞ்சன் எம்.பியால் அனைவருக்குமே வாய்ப்பூட்டு!
### அவசர அறிக்கை விட்டார் ரணில்

கொழும்பு, நவ.23
ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்று தொடர்பாகத் தெரிவித்த கருத்தொன்று பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலை » 25

## தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு கடுமையாகத் தாக்கியது பொலிஸ்!
*மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு சமரசம் செய்யப் பொலிஸார் பிரயத்தனம்* » 05

## நாடாளுமன்றக் கலைப்பு தீர்மானத்தை மைத்திரி மீளப் பெறுமாறு கோரிக்கை
*அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா முன்வைப்பு* » 02

## தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுதலையாம்
### கூறுகிறார் சு.கவின் செயலர்

கொழும்பு, நவ. 23
தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு நடவடிக்கைகளை எதிர்வரும் ஜனவரி மாதத்திற்கு முன்னர் நிறைவுசெய்ய வேண்டும் என்று உரிய » 25

## மைத்திரிக்குத் தெரியாமலே நடந்ததாம் நிசாந்த மாற்றல்!
### அரச தரப்புக் கூறுகின்றது

கொழும்பு, நவ. 23
பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவை குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து இடமாற்றிய விவகாரத்துக்கும் அரச தலைவருக்கும் எவ்வித தொடர்பும் » 23

## டட்லியின் விருப்பப்படியே மைத்திரி செயற்பட்டாரா?
### உதயங்கவால் புதிய சர்ச்சை

கொழும்பு, நவ.23
மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அவரது சகோதரரே ஆலோசனை » 23


DFCC நிலையான வைப்பு
12% 6 மாதத்திற்கு வ.வி.வி 12.36%
11.5% 3 மாதத்திற்கு வ.வி.வி 12.01%
கவர்ச்சிகரமான வட்டிப் பரிசு
இப் பண்டிகைக் காலத்தில் நிலையான வைப்பிற்கு மிகச் சிறந்த வட்டி DFCC வங்கியிடமிருந்து. நீங்களும் இன்றே வந்து இவ் வெகுமதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
www.dfcc.lk
DFCC வங்கி

# மைத்திரி கொலைச் சதி விரைவில் பல தகவல்கள்

## தாயாசிறி தெரிவிப்பு



கொழும்பு, நவ. 23

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வதற்கான சதித்திட்டம் தொடர்பில் முக்கியத் தகவல்களை வெளியிடவுள்ளோம். விசாரணைகளின்போது முக்கிய சில தகவல்கள் கசிந்துள்ள நிலையில், அவை வெகு விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் என்று அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

காலனித்துவத்து ஆட்சியிலிருந்து இலங்கை 1972ஆம் ஆண்டே விடுபடுவதாக முதலாவது குடியரசு யாப்பில் எமது தலைவர்கள் அறிவித்துவிட்டனர். அதேபோல் 1978ஆம் ஆண்டு நாம் நிறைவேற்று அதிகாரம் மிக்க அரச தலைவரின் கீழ் அரசமைப்பை உருவாக்கிக்கொண்டோம். ஆகவே, மீண்டும் நாம் பிரிட்டன் சம்பிரதாயங்களை பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்றார். அலரிமாளிகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, அரசமைப்பின் 7ஆவது சரத்துக்கு அமைய நாம் இன்னமும் பிரிட்டன் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுடன் ஒன்றிணைந்துள்ளோம் எனக் கூறியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே தாயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு கூறினார். (5,10)

---

## ஐ.ம.சு.மு. தெரிவுக் குழுவுக்கு 7பேரை நியமிக்கவே முடியாது

### ராஜித விடாப்பிடி

கொழும்பு, நவ. 23

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அதிகளவிலான உறுப்பினர்களைப் பிரேரிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத குழு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பெரும்பான்மையைப் பெற முடியாது என்று நாடாளுமன்றச் செயலர் நாயகம் தெளிவாக கூறியுள்ளார். இந்த நிலையில் 12 உறுப்பினர்களைக்கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 உறுப்பினர்களை நியமனம் செய்ய முடியாது என்றார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கான ஏழு உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை ஆளும்கட்சியினர், நாடாளுமன்றப் பொதுச் செயலரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

---

## மக்கள் ஆதரவு உங்களுக்கு இருக்கிறதா?

### மைத்திரியைச் சீண்டும் மனோ



கொழும்பு, நவ. 23

தங்கத்தை உரை கல்லால் உரசிப்பார்ப்பது போல், மக்களிடம் சென்று வாக்கு கோரி, ஒக்ரோபர் 26க்கு பிறகு மேற்கொண்ட நடவடிக்கைகள் சரியானவையா? அவற்றுக்கு இந்த நாட்டு மக்கள் அங்கீகாரம் வழங்குகிறார்களா? தேடிப்பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் மைத்திரிபால சிறிசேனவுக்கு இப்போது கிடைத்திருக்கிறது. அரசமைப்பில் உள்ள கால அட்டவணையின்படி பதவியில் இருக்கும் அரச தலைவர், பதவிக்கு வந்து நான்கு வருடங்களுக்குப் பின்னர் முன்கூட்டியே ஒரு தேர்தலை நடத்தி, புதிய மக்கள் ஆணையைக் கோரும் உரிமையைக் கொண்டுள்ளார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஜனவரியில் அரச தலைவர் தேர்தலை நடத்தி புதிய மக்கள் ஆணையை தேடிப்பெற வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி யின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது;

நாம் பொதுத் தேர்தலுக்கு தயாராக இருக்கிறோம். ஆனால், அது நியாயமாக நடைபெற வேண்டும். இவர்களின் காபந்து அரசு பலத்தின் கீழ் அது நடைபெற முடியாது. பொதுவாக எல்லாத் தேர்தலுக்கும், தேர்தல் கால அட்டவணைகள் உள்ளன. அதன்படி பார்த்தால், பொதுத் தேர்தலை விட, அரச தலைவர் தேர்தலுக்குதான் இன்று இடம் இருக்கிறது. ஆகவே முடியுமானால், அவசியமானால், அரச தலைவர் தேர்தலுக்கு போங்கள்.

நீங்கள் இன்று இருக்கும் இடத்தில் உள்ள தலைமை ஆசிரியரின் மகன், தமது கட்சியிலே உங்களுக்கு அடுத்த அரச தலைவர் தேர்தலில் நியமனம் தருவதாக இருந்தால், அது உங்கள் நடத்தையிலேயே தங்கி உள்ளது என்று கூறுகிறார். பாடசாலை வகுப்புகளில் நமது மாணவர்களின் நடத்தை புத்தகம் இருப்பதை போன்று, நீங்களும் உங்கள் நடத்தையால், அதிக புள்ளிகள் பெற்றால்தான் உங்களால் அவர்களது 'ரிக்கெட்டை' வாங்கிப் போட்டியிட முடியும். மிளகாய் நிறமான சிகப்பு நிறத்துடன் கூடிய நட்சத்திரப் புள்ளிகளை நீங்கள் பெற்றால்தான், உங்களுக்கு நியமனம் தருவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

உங்களுக்கு ஏன் இந்த சிரமம்? அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் நீங்களே போட்டியிட வழிவகுக்கும் அரச தலைவர் தேர்தல் வருகிறது. உங்களால் முன்கூட்டியே அரச தலைவர் தேர்தலை நடத்து விக்க முடியும். நாங்களும் போட்டியிடுவோம். உங்களுக்கு நாம் உதவியும் செய்யலாம் - என்றார். (5)

---

## நாடாளுமன்றக் குழப்பத்துக்கு மகிந்தவே முழுக் காரணம்

### ஐ. தே. க. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனத்தில் அருந்திக்க பெர்னாண்டோவை அமரச்சொன்னது மகிந்த ராஜபக்சவே. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகரின் ஆசனத்தில் முதலில் ரத்ன தேரரரையே அமருமாறு மகிந்த ராஜபக்ச கோரியிருக்கின்றார். அவர் மறுத்ததையடுத்தே அருந்திக்க பெர்னாண்டோ அந்த ஆசனத்தில் அமர்ந்துள்ளார். இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் மகிந்த ராஜபக்சவின் வழிகாட்டுதலிலேயே இடம்பெற்றுள்ளன. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாததன் காரணத்தினால் தான் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள். அரசதலைவர் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும், ஜனநாயகத்தையும் உடைத்தெறிவதற்கு முற்படுவார்களாயின் ஐக்கிய தேசிய முன்னணியினராகிய நாம் அடுத்தவாரமளவில் முழுக்கொழும்பு நகரத்தினையும், அரச தலைவர் செயலகம், அரச தலைவர் இல்லத்தையும் முற்றுகையிடுவதற்குத் தயங்கமாட்டோம் - என்றார். (5,31)

---

## ரணில் ஆட்சிக்கு வருவதே பிரச்சினைகளுக்குத் தீர்வு!

### ஜெனிவாவில் எதிரொலிப்பு

கொழும்பு, நவ. 23

ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராகக் கொண்ட அரசை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதே நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு என்று ஜெனிவாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நேற்று வியாழக்கிழமை, இலங்கையில் இடம்பெற்ற அரசியல் விடயங்கள் தொடர்பில் விவாதம் நடைபெற்றது.

'மனித உரிமைகள் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைப் பாதுகாப்பதில் இலங்கை நாடாளுமன்ற வகிபாகம்' எனும் தலைப்பில் இடம்பெற்ற மாநாட்டில் மாற்றுக்கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து கலந்து கொண்டு மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தற்போதைய இலங்கை அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராகக்கொண்ட அரசை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதுடன், பொதுத்தேர்தல் ஒன்றுக்கு செல்வதாகும். 'அத்தோடு தற்போதைய அரசமைப்பு நெருக்கடியானது வலிந்து காணாமல் ஆக்கப்படுத்தல், சுயதணிக்கை, நீதிக்கு புறம்பான கொலைகள் போன்ற கடந்த காலத்தில் பரவலாக காணப்பட்ட கலாசாரத்துக்கு வழிகோலும் வகையில் இந்த நெருக்கடி நிலை காணப்படுகின்றது, என்று மாற்றுக்கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து கூறியுள்ளார். (5)

---

## மைத்திரி நாட்டை நாசமாக்குகின்றார்

### சமந்தா பவர் தாக்கு

கொழும்பு, நவ. 23

அதிகாரத்தின் ஊடாக நாட்டு மக்களின் நலனை சீர்குலைக்கும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருகின்றார் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நாட்டில் தொடர்ந்து வருகின்ற அரசியல் குழப்ப நிலை உள்நாட்டில் மாத்திரமன்றி பன்னாட்டுச் சமூக மட்டத்திலும் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே சமந்தா பவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசதலைவர் தொடர்ந்தும் நாட்டின் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றார் என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார். (5)

---

## நாடாளுமன்றக் கலைப்புதீர்மானத்தை மைத்திரி மீளப் பெறுமாறு கோரிக்கை

### அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா முன்வைப்பு



கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை மகிந்த ராஜபக்சவுக்கே இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மை இருப்பதாக தெரிவித்தாலும் இதுவரை அவர்கள் காட்டவில்லை. நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நிலைப்பாட்டை நீக்கிக்கொள்ளுமாறு அரச தலைவருக்குத் தெரிவிக்கின்றோம் என்று அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திர ஊடக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றது. அதனை நாங்கள் தேவை ஏற்படும்போது காட்டத் தயாராக இருக்கின்றோம். 120 உறுப்பினர்களுக்கும் அதிகமானவர்கள் எங்களுடன் இருந்தனர்.

என்றாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்க அரச தலைவர் நடவடிக்கை எடுத்ததால் மீண்டும் அவர்கள் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு இருந்த இடங்களுக்கே சென்றனர்.

ஆனால் தற்போது எங்களுக்குப் பெரும்பான்மை இருக்கின்றது. அதனால் நாடாளுமன்றத்தை கலைக்கும் நிலைப்பாட்டை நீக்கிக் கொள்ளுமாறு அரசதலைவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தலைமையில் அரசு அடுத்த இரண்டு வருடங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாமல் முன்னுக்குச் செல்லும். 2020ஆம் ஆண்டே நாடாளுமன்ற தேர்தலொன்றுக்குச் செல்வோம் - என்றார். (5)



# தீர்மானத்தை விவாதத்துக்கு எடுக்கவே விடமாட்டோம்

## இப்போதே எஸ்.பி.திசாநர்யக்கா போர்க்கொடி

கொழும்பு, நவ. 23

தலைமை அமைச்சரின் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை இடைநிறுத்தும் தீர்மானத்தை 29ஆம் திகதி விவாதத்துக்கு எடுப்பதற்கு அனுமதிக்கமாட்டோம். இவ்வாறு ஆளும் தரப்பு பிரதம கொரடா, எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீட்டை நிறுத்தும் தீர்மானத்தை முடிந்தால் தோறகடியுங்கள் என்று ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே எஸ்.பி.திசாநாயக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது, நிதி தொடர்பான தீர்மானத்தை சபை முதல்வரினாலோ அமைச்சர் ஒருவரினாலோ தான் கொண்டு வர முடியும். எதிரணிக்கு இவ்வாறான தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது. கடந்த தினங்களில் சட்டவிரோதமாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அமைச்சரவை கலைந்து விட்டதாக அறிவித்தார்கள். அதன் அடிப்படையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளனர். ஒழுங்குப் புத்தகத்தில் இந்தத் தீர்மானம் உள்ளடக்கப்பட்டாலும் அதனை விவாதத்துக்கு எடுப்பது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே முடிவு செய்யும். அந்தக் குழு விரைவில் நியமிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும்- என்றார். (5)

# நிதி ஒதுக்கீட்டை நிறுத்தும் தீர்மானத்தை முடிந்தால் தோற்கடியுங்கள்

## ரணில் சவால்

கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்தாமல் முடிந்தால் எதிர்வரும் 29ஆம் திகதி, தலைமை அமைச்சர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்தும் தீர்மானத்தைத் தோற்கடிக்குமாறு மகிந்த ராஜபக்ச அணியினருக்கு சவால் விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.



அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை. அதனால் தான் அவர்களின் உறுப்பினர்கள், வாக்கெடுப்பு நடத்துவதை ஒவ்வொரு முறையும் குழப்பி வருகிறார்கள். எந்தக் குழப்பத்தையும் ஏற்படுத்தாமல் எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வந்து தலைமை அமைச்சர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை நிறுத்தும் தீர்மானத்தின் மீது வாக்களிக்குமாறு அவர்களிடம் நான் சவால் விடுகிறேன்.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டால், அந்தக் கணமே அரசோ, அமைச்சரவையோ கிடையாது. அந்தச் செயலகங்களுக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டிய தேவை இல்லை, என்றும் அவர் கூறியுள்ளார். (5)

# சபாநாயகரின் பெயரில் போலிக் கடிதம்

## சி.ஐ.டி. விசாரணை!

கொழும்பு, நவ. 23

போலிக் கடிதம் தொடர்பாக சபாநாயகர் கரு ஜயசூரியவின் பணிப்புரைக்கமைய நாடாளுமன்றச் செயலர் நாயகம் விடுத்துள்ள முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றத்தடுப்புப் பிரிவு (சி.ஐ.டி.) பொலிஸ்மா அதிபரிடம் அனுமதி கோரியுள்ளது.

தலைமை நீதியரசர் நளின் ஜயலத் பெரேராவுக்கு சபாநாயகரால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டதாக கூறப்படும் போலியான செய்தி தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சபாநாயகரின் ஆலோசனையின் பேரில் நாடாளுமன்ற செயலர் நாயகம் தம்மிக தசநாயக்கவால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சபாநாயகர் கரு ஜயசூரிய, தலைமை நீதியரசர் நளின் ஜயலத் பெரேராவை கடிதம் ஊடாக தொடர்பு கொண்டதாக சமூக ஊடக வலைத்தளங்களில் வெளியாகி வரும் செய்திகளில் உண்மை இல்லை என்று சபாநாயகர் அலுவலகம் முன்னர் அறிவித்திருந்தது. (5)

மேல் மாகாணசபை

### இணைய தளங்களுக்கு கட்டுப்பாடு விதிப்பு

மேல் மாகாண சபை சபா மண்டபத்தில் உறுப்பினர்களின் தேவைக்காக அமைக்கப்பட்ட கணினிகளில் ஆபாச இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களை பார்வையிட முடியாதவாறு தடைசெய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேல்மாகாணசபையில் கடந்த திங்கட்கிழமை சில உறுப்பினர்கள் சபையில் இருந்த கணினியில் ஆபாசக் காட்சிகளை பார்வையிட்டனர். இதனையடுத்து ஆபாச இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களை சபா மண்டபக் கணினிகளில் பார்வையிட முடியாதவாறு தடைசெய்துள்ளதாக மாகாணத்தின் தலைமைச் செயலர் தெரிவித்தார். (5)

# இந்திய, அமெரிக்க தூதுவர்கள் பாதுகாப்புச் செயலருடன் பேச்சு

கொழும்பு, நவ. 23

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும், இந்திய துணைத் தூதுவரும், உயர்மட்ட அதிகாரிகளுடன் இணைந்து, பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோவைச் சந்தித்து தனித்தனியாகப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சந்திப்புகள், பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளன.

இந்தியத் துணைத் தூதுவர் கலாநிதி சில்பக் அம்புலே தலைமையிலான இந்தியத் தூதரக உயர் அதிகாரிகள், சிறிலங்கா பாதுகாப்புச்செயலர் ஹேமசிறி பெர்னான்டோவுடன் நடத்திய பேச்சுக்களின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகரும் கலந்து கொண்டார்.

அதேவேளை, புதிதாகப் பதவியேற்ற அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்சும், கடந்த திங்கட்கிழமை, பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோவைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க துணைத் தூதுவர் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றனர்.

ரணில் - மைத்திரி கூட்டு அரசுடன் அமெரிக்காவும், இந்தியாவும் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்தியிருந்தன.

தற்போது, ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களினால், இந்த உறவுகள், ஒத்துழைப்புகளின் நிலை கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

அமெரிக்காவும், இந்தியாவும், மகிந்த ராஜபக்ச அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளாத நிலையில், மைத்திரிபால சிறிசேனவினால் அண்மையில் நியமிக்கப்பட்ட பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோவுடன், இருதரப்பு பாதுகாப்பு உறவுகள், திட்டங்களின் எதிர்காலம் குறித்தே பேச்சுக்களை நடத்தியிருக்கின்றன. (5)

# அதிருப்தி அலையால் மகிந்த தரப்பு அதிர்ச்சி

## தேர்தலுக்கான போராட்டத்தில் இறங்குகிறது

கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத் தேர்தலை நடத்தக் கோரி, நாடெங்கும் போராட்டங்களை நடத்துவதற்கு மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

மகிந்த ராஜபக்ச தலைமையில் நடந்த கூட்டத்திலேயே இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதைய அரசியல் நிலமைகள் குறித்து, நாடெங்கும் கருத்தரங்குகளை நடத்தி விளக்கமளிக்கவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிரான மனுக்களின் மீது டிசெம்பர் 7ஆம் திகதி உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவுள்ளது.

இந்தத் தீர்ப்பு எவ்வாறானதாக வந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகும்படி, மகிந்த ராஜபக்ச கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அர்சியல் நெருக்கடிகளால், பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தி அலையைச் சமாளிப்பதற்காக, கூட்டங்களை நடத்தி விளக்கமளிக்கவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (5)

# நிசாந்தவின் இடமாற்றம் நிறுத்தப்பட்டது எங்களுக்கு பெரு வெற்றியே

## சாகல ரத்னாயக்க பெருமிதம்

கொழும்பு, நவ. 23

பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவை குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து இடமாற்றம் செய்வதற்கு வழங்கிய தடையுத்தரவே எங்களின் வெற்றி என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறப்பினர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

பல முறை நாடாளுமன்றத்தில் எங்கள் பெரும்பான்மையை நிறைவேற்றி விட்டோம். தேவைப்பட்டால் எதிர்காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரை மீண்டும் தலைமை அமைச்சராக்குவதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை எம்மால் நிரூபிக்க முடியும்.

முக்கிய வழக்குகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவை இடமாற்றம் செய்தார்கள். அதற்குஎதிராகநாம்பொலிஸ்ஆணைக் குழுவில் முறைப்பாடு பதிவு செய்தோம். தற்போது அவரது இடமாற்றம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இது எமக்குக் கிடைத்த பெரு வெற்றி என்றார். (5)

# மைத்திரிபாலவுக்கு எதிராக மக்களே வீதிக்கு இறங்குங்கள்!

## பேராசிரியர் சரத் விஜேசூரிய கொந்தளிப்பு

கொழும்பு, நவ. 23

அரசதலைவர்மேற்கொண்டசூழ்ச்சித்திட்டம்புற்றுநோய்போன்றுபரவியுள்ளது. அவரதுமோசமான ஆட்சிக்குஎதிராகபொதுமக்கள்வீதியில்இறங்கிஎதிர்ப்புத் தெரிவித்துப் போராட வேண்டும்.

நீதியானசமூகத்துக்கானதேசியஅமைப்பின் அமைப்பாளர் பேராசிரியர் சரத் விஜேசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற சத்தியாக்கிரகப்போராட்டத்தில்உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பைக் குப்பைக் கூடையில் வீசிவிட்டுநாகரிகமற்றமோசமான ஆட்சியை முன்னெடுக்க அரசதலைவர் எடுத்துவரும் முயற்சிக்கு அனைத்து மக்களும் வீதியில் இறங்கி எதிர்ப்பை வெளியிடவேண்டும். ஜனநாயகரீதியில் நாட்டை ஆட்சி செய்வதாக ஆட்சிபீடம் ஏறிய மைத்திரிபால சிறிசேன, குரோத ஆட்சிக்குத்தலைமைதாங்கும்அளவுக்குக் கொடூரமானவராக மாறியுள்ளார். மைத்திரிபால சிறிசேன தனக்குக் கிடைத்தமக்கள்ஆணையைநிராகரித்துள்ளார். அவருக்கு இப்பொழுது மக்கள் ஆணை கிடையாது. அவருக்கு வாக்களித்த 62 லட்சம் மக்களை குழியில் தள்ளும் அளவுக்கு, கடந்த 26ஆம் திகதி எடுத்த தீர்மானம் கொடூரமானது. இந்த நாட்டின் பிள்ளைகளது எதிர்காலத்தையே இல்லாதொழிக்கமுயற்சிக்கப்படுகின்றது.

ஜனநாயகம், வாழும் உரிமை மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றை அழிப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. சத்தியாக்கிரகப் போராட்டம் மைத்திரிபாலசிறிசேனவுக்கு ஒருசமிக்ஞையாக அமையும்.

விஹாரைக்கு சென்று மத வழிபாடுகளில்ஈடுபடுபவர்என்றால்மைத்திரிபால சிறிசேன நாடு அராஜகமாவதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். (4)

## ஐக்கிய தேசியக் கட்சியினர் மூன்றாகப் பிளவுபட்டுள்ளனர்?

### அரசியல் அவதானிகள் கருத்து

கொழும்பு, நவ. 23

சமகாலத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி மூன்றாகப் பிளவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக இந்தநிலை ஏற்பட்டுள்ளதாகக் கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. கட்சியின் ஒரு தரப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தலைமை அமைச்சர் பதவி கிடைக்க வேண்டும் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஒருபோதும், ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தலைமை அமைச்சர் பதவியை வழங்க மாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடியான நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தலைமை அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்று கட்சியின் பெரும்பான்மையானோர் விருப்பம் தெரிவித்துள்ளனர். இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கரு ஜயசூரியவுக்கு தலைமை அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்று இன்னும் ஒரு தரப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி மூன்று பிரிவுகளாகப் பிளவுபட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பநிலை, சர்ச்சைக்குரிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்குப் பெரும் நன்மையாக அமைந்துள்ளது. நாடாளுமன்று இன்று கூடவுள்ள நிலையில், மகிந்த ரணில் தரப்பினர் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை காரணமாக, மகிந்தவுக்குச் சாதகமான நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்மூலமாக மகிந்த ராஜபக்சவால் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தந்திரோபாயம் பெருவெற்றி பெற்றுள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (4)

## மகிந்த, ரணில் உட்பட 225 எம்.பிக்களையும் சிறையில் தள்ளுங்கள்

### விக்ரமநாயக்க எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, நவ. 23

மகிந்த, ரணில்உள்ளிட்ட225நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சிறையில் அடைக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அவர் நேற்றுக் கருத்து வெளியிடும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றில் இடம்பெற்ற சம்பவங்களைநோக்கினால்சபாநாயகர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களையும் சிறையில் அடைக்க வேண்டும். சட்டவிரோதமாகஒன்றுகூடுதல்என்றகுற்றச்சாட்டின் அடிப்படையில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கைது செய்ய முடியும். நிலையியற்கட்டளைகளின் அடிப்படையில்நாடாளுமன்றப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் நீதிமன்றம் ஆகியன வழங்கி வரும் பொருத்தமற்ற தீர்ப்பு களால் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப்பிரச்சினைக்குஅரசியல் ரீதியாகத்தீர்வுகாண்பதற்குதேர்தல் நடத்தப்படவேண்டும்என்றும்அவர் தெரிவித்தார். (4)




## புதிய அமைச்சரவையை மைத்திரி நியமிக்கட்டும்

### ஜே.வி.பி. ஆலோசனை

கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றில்நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, மீண்டும் அமைச்சரவையை நியமிக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதாகச் செய்திகள் வெளியாகினாலும், அதைக் கொண்டுவர நாட்டில் அமைச்சரவை ஒன்று இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரிபால சிறிசேனவுக்கு மகிந்த ராஜபக்ச வேண்டுமாயின், மீண்டும்சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளட்டும், நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் அதனை மீண்டும் நாடாளுமன்றத்தில் பார்த்து கொள்கிறோம். மகிந்தராஜபக்சவுக்கு ஆதரவாக 102 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்று கூறினார்கள். சரியானமுறையில்நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினால், அவர்களில் ஏழு, எட்டு பேர் நாடாளுமன்றத்துக்கு வர மாட்டார்கள். துமிந்த திஸாநாயக்க, பிரேமலால்ஜயசேகர, இந்திக பண்டாரநாயக்க ஆகியோர் நாடாளுமன்றம் கூடியமூன்றுதினங்களிலும் நாடாளுமன்றத்துக்கு வரவில்லை. இதனால், மகிந்த ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில்வரவுசெலவுத்திட்டம் ஒன்றை நிறைவேற்ற முடியாது. வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்றால், ஜனவரிமாதத்திலிருந்து அரச ஊழியர்களுக்குச் சம்பளத்தை வழங்க முடியாது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

## புதிய கட்சியை ஆரம்பிக்கும் தீவிர முயற்சியில் சந்திரிகா

கொழும்பு, நவ. 23

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் ஜனநாயக விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு, நாட்டை அழிவுப்பாதைக்குக்கொண்டு செல்கின்றனர்என்றுகருதும்முன்னாள் அரசதலைவர் சந்திரிகா குமாரதுங்க, புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிகிறது.

அரசியல்கட்சியாகவோ, அல்லது அரசியல்கட்சிகளின்கூட்டாகவோ அது ஆரம்பிக்கப்பட்டு, தற்போதைய ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மைத்திரி - மகிந்தவின் இணைவையும், அவர்களின் அண்மைய நடவடிக்கைகளையும் சுதந்திரக் கட்சியின் ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரசிக்கவில்லையென்று தெரிகிறது.

எனினும், சுதந்திரக் கட்சிக்குள்ளிருந்து மாற்றுக் குரல் வலுவாக உருவாகாததால் அவர்கள் தமது எதிர்ப்பை வெளியிடமுடியாதுள்ளனர்என்றுசந்திரிகாவிடம் பலர் முறையிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சுதந்திரக் கட்சியின்மத்தியகுழுஉறுப்பினர்களில்ஒரு பகுதியினரையும் இணைத்துக் கொண்டேஇந்தப்புதியஅரசியல்அணி உருவாகவுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

பொதுமக்கள் முன்னணியில் மகிந்த ராஜபக்ச இணைந்த சமயத்தில், சுமார் 30 வரையான சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர். ஏனையவர்கள்சுதந்திரக் கட்சியைவிட்டுவிலகமறுத்துவிட்டனர். இவர்களில்பெரும்பாலானவர்கள்சந்திரிகாவுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளனர் என்று தெரிகிறது. இவர்கள் சந்திரிகாவின் புதிய அணியில் இணையும் வாய்ப்பிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட சுமார் 50 வரையான சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சந்திரிகாவுடன் இணையலாமென்று ஊகிக்கப்படுகிறது. சிலதினங்களாக இதற்கானதீவிர பேச்சுகள் நடந்து வருகின்றன.

அரசதலைவர் தேர்தலில் தோல்வியடைந்ததும், மீண்டும் பதவிக்கு வருவதற்காக பொதுமக்கள் முன்னணி என்ற கட்சியின் பின்னணியில் மகிந்த செயற்பட்டு, சுதந்திரக் கட்சியிலிருந்து ஒரு தொகுதிஉறுப்பினர்களையும்இணைத்துக்கொண்டு, சுதந்திரக்கட்சிக்குஎதிராக செயற்பட்டிருந்தார். தற்போது மைத்திரி - மஹிந்த அணிகள் இணைந்திருந்தாலும், சுதந்திர க்கட்சியிலுள்ள முழு உறுப்பினர்களையும்முன்னணிக்குள் இழுத்தெடுப்பதற்காக பசில் ராஜபக்ச வலைவீசிவருகிறார்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றுவதற்காக, சுதந்திரக் கட்சியின் தற்போதைய நடவடிக்கைகளால் அதிருப்தியிலுள்ளவர்களையும் இணைத்து, புதிய அணியொன்றை உருவாக்க சந்திரிகா முயன்று வருகிறார். சந்திரிகாவின் இந்தப் புதிய முயற்சியால் சுதந்திரக்கட்சிக்கு புதிய தலைவலி ஆரம்பிக்கலாமென்று பலரும் எதிர்வுகூறியுள்ளனர். (4)

## சேதங்களை மதிப்பிடச் சென்றோர் திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றில் ஏற்பட்ட பொருள் இழப்புத் தொடர்பான மதிப்பீட்டுக்கு நேற்றுச் சென்ற குழுவினர் எதனையும் மதிப்பீடு செய்யாது திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றில்கடந்தவாரம்இடம்பெற்றஅமர்வில் ஏற்பட்ட பதற்றமான நிலை காரணமாக அரச சொத்துகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாகப் பொருள்சேதங்கள் ஏற்பட்டிருந்தன. சேத விவரங்களை மதிப்பிட காப்புறுதி நிறுவனக் குழுவினர் நேற்று அங்கு சென்றிருந்தனர்.

எனினும்குறித்தகாப்புறுதிநிறுவனத்தின்பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட சேத விவரத்தை ஆராயச் சென்றபோது, நாடாளுமன்றுக்கான பொருள்களைக் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்திடமே மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றுசுட்டிக்காட்டியுள்ளனர். அதனால், அந்தநடவடிக்கையை நாடாளுமன்றத்திடமே ஒப்படைத்துவிட்டுக்காப்புறுதிநிறுவனப்பிரதிநிதிகள்அங்கிருந்து சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு கடுமையாகத் தாக்கியது பொலிஸ்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு சமரசம் செய்யப் பொலிஸார் பிரயத்தனம்

யாழ்ப்பாணம், நவ. 23

தேசிய அடையாள அட்டையை எடுத்துச் செல்லவில்லை என்பதற்காக வீதியால் பயணித்தவரைக் கைது செய்த சுன்னாகம் பொலிஸார், தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு சித்திரவதை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதுபற்றிப் பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஏழாலையைச் சேர்ந்த பாலசிங்கம் பிரகாஸ் என்பவரே முறைப்பாடு செய்துள்ளார். குறித்த முறைப்பாடு தொடர்பில் மேற்படி இளைஞரைத் தொடர்புகொண்டு கேட்டபோது,

ஏழாலையில் கடந்த 19ஆம் திகதி இரவு 10.45 அளவில் வீடுநோக்கி கால்நடையாகச் சென்றுகொண்டிருந்தேன். அங்கு வந்த மைத்துனரின் முச்சக்கர வண்டியில் ஏறிப் பயணித்தேன். எனது வீட்டுக்கு மிக அண்மையாகப் பொலிஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். மைத்துனர் சகல ஆவணங்களையும் காண்பித்தார்.. இறுதியில் என்னிடம் அடையாள அட்டையைக் கோரினர். நான் அடையாள அட்டையை எடுத்துச் சென்றிருக்கவில்லை. அவ்வாறெனின் பொலிஸ் நிலையம் வருமாறு என்னை அழைத்தனர். எனது மைத்துனரும் கூடவே வந்தார். பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச் சென்று என்னைத் தலைகீழாகக் கட்டித் தூக்கினர். எனது மைத்துனரான பாலசிங்கம் - நிரஞ்சனை (வயது 29) என்பவரை அவர்களது சமையல் கூடத்துக்குள் கொண்டுசென்று அடைத்தனர்.

எங்கள் இருவரையும் பொலிஸார் காரணம் எதுவுமே கூறாது பலமாகத் தாக்கிச் சித்திரவதை செய்தனர். எங்களைத் திருடர்களா என்றும் எல்.ரீ.ரீ.ஈ இல் இருந்தனியா என்றும் கேட்டனர். 20ஆம் திகதி மாலையில் எந்தச் சட்ட நடவடிக்கையும் இன்றி விடுவிக்கப்பட்டோம். ஆனால் பொலிஸாரின் சித்திரவதை வேதனைகளைத் தாங்க முடியவில்லை. தெல்லிப்பழை மருத்துவமனையில் 20ஆம் திகதி சிகிச்சைக்குச் சென்றோம். மருத்துவ விடுதியில் தங்க வைக்கப்பட்டுச் சிகிச்சை வழங்கினர். நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டோம். மனித உரிமை ஆணைக்குழுவில் இது தொடர்பில் முறையிட்டுள்ளோம். தற்போது பொலிஸார் எங்களுடன் தொடர்புகொண்டு சமரசம் பேசுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் கேட்டபோது, "அவர்கள் வீதியில் மதுபோதையில் சென்றுகொண்டிருந்தனர். தமக்கு என்ன நடந்தது என்று தமக்குத் தெரியாது என்றே அவர்கள் கூறினர்" என்று தெரிவித்தனர். மருத்துவமனைத் தரப்பிடம் தொடர்புகொண்டபோது, இருவருக்கும் காயங்கள் காணப்படுகின்றன. சிகிச்சை வழங்கப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டது. (4,105,26)

# கஞ்சா வாங்கிவரவில்லை என்று கூறி இளைஞர்களைத் தாக்கினர் பொலிஸார்

## முல்லைத்தீவிலும் பொலிஸார் அடாவடி

முல்லைத்தீவு, நவ. 23

முல்லைத்தீவில் இளைஞர்கள் மீது முல்லைத்தீவுப் பொலிஸார் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

"கஞ்சா வாங்கித் தருமாறு பொலிஸார் எங்களிடம் வற்புறுத்திக் கோரினர். நாங்கள் வாங்கிக் கொடுக்கவில்லை. அதனாலேயே தாக்கினர்" என்று தாக்குதலுக்கு இலக்கானவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் முள்ளியவளை மாஞ்சோலைப் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

வீதியால் சென்ற இளைஞர்களை மறித்த முல்லைத்தீவு பொலிஸார், நீராவிப்பிட்டிப் பகுதிக்குச் சென்று கஞ்சா வாங்கிக்கொண்டு வாருங்கள். உங்களை நாங்கள் பிடிக்கின்றோம். பின்னர் விடுவித்து விடுவோம் என்று வற்புறுத்தினர். அதற்கு நாம் மறுத்துவிட்டோம். அதனாலேயே எங்கள் மீது தாக்குதல் நடத்தினர். பின்னர் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று வற்புறுத்திக் கள்ளச் சாராயம் விற்றதாகக் கையெழுத்து வாங்கிவிட்டுப் பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

அவர்கள் உடனேயே சட்டத்தரணியிடம் சென்று இது தொடர்பில் முறையிட்டு ஆலோசனை கேட்டுள்ளனர். காயங்களுடன் காணப்பட்ட அவர்களை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு சட்டத்தரணி அறிவுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு பூதன் வயல் பகுதியைச் சேர்ந்த 32, 27 மற்றும் 28 வயதுடையவர்களே பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் மூவரும் சேர்க்கப்பட்டனர். ஒருவரின் காதாலும் மூக்காலும் குருதி வடிந்ததால் அவர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். ஏனைய இவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மீது கசிப்புக் காய்ச்சினர் என்று பொய்க் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளதால் அது பற்றிய வழக்குக்காக எதிர்வரும் 26 ஆம் திகதி நீதிமன்றுக்கு வருமாறு முல்லைத்தீவுப் பொலிஸார் பணித்துள்ளனர் என்று பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

# அதிருப்தியடைந்தவர்கள் தற்போது விலகுகின்றனர்

## க.குமார் கூறுகிறார்

கிளிநொச்சி, நவ. 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்தவர்கள் தற்போது கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றனர். அவர்கள் வெளியேற வேண்டியசூழல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மாவீரர்களின் பெற்றோரை மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநாச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவர்கள் போன்றே நாம் 2009ஆம் ஆண்டு விலகியிருந்தோம். அவர்களின் நிலைப்பாடு தொடர்பில் தொடர்ந்து விமர்சித்து வந்த நிலையில் தற்போது பலரும் உணர்கின்றனர் - என்றார். வடக்கு கிழக்கு மக்கள் கல்வி உள்ளிட்ட விடயங்களில் முன்னிலையில் இருந்தார்கள். கொழும்புக்கு அடுத்த நகரமாக யாழ்ப்பாணம் காணப்பட்டது. இன்று நாம் கடைசியில் உள்ளோம். போருக்குப் பின்னர் 8 வருடங்களுக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டுமான அளவு அபிவிருத்தியைச் செய்திருக்கலாம் - என்று மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய இராச்சியத்தின் வீரத் தமிழர் முன்னணியின் ஏற்பாட்டில்அறம் செய் அறக்கட்டளையின் உதவியுடன் 'எமக்காக வாழ்ந்தவரை வாழ வைப்போம்' எனும் தொனிப்பொருளில் இது இடம்பெற்றது. சுமார் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். (4,6)

# கஜா புயல் காரணமாக ரூ.1,200 மில்லியன் இழப்பு

## கடல்த்தொழில் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த கஜா புயல் காரணமாக 1,200 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கடல்த்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் தெரிவித்தது.

கஜா புயல் வடக்கு மாகாணத்தில் பெரும் சேதங்களை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் திணைக்களம் மேற்கண்டவாறு தெரிவித்தது.

மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாத காரணத்தால் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கஜா புயல் காரணமாக அனைத்துக் கடற்றொழிலாளர்களும் 3 நாள்கள் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்திருந்தனர். இதனால் நாளொன்றுக்கு 400 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

# பாக்குகளைக் கடத்தினாரென்று சனத்ஜெயசூரிய மீது குற்றச்சாட்டு

## விசாரணையில் இந்தியப் பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23

பழுதடைந்த பாக்குகளைக் கடத்தினார் என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத்ஜெயசூரிய மீது இந்தியப் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் இந்திய ஊடகங்களில் வெளியாகிய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தியாவின் நாக்பூரில் பல மில்லியன் ரூபா பெறுமதியான பழுதடைந்த பாக்குகளை இந்திய அதிகாரிகள் கைப்பற்றினர். அவற்றுக்கும் சனத் ஜெயசூரியவுக்கும் தொடர்பிருப்பது இந்திய அதிகாரிகளின் விசாரணையில் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து மும்பாய் பொலிசுக்குச் சனத் ஜெயசூரிய அழைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் குறித்த கடிதமொன்றை இந்திய அதிகாரிகள் இலங்கை அரசுக்கு அனுப்பி. வைத்துள்ளனர். மேலும் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் இருவர் எதிர்வரும் 2ஆம் திகதி விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். இந்தோனேசியாவிலிருந்து இலங்கைக்குக்கொண்டு செல்லப்பட்ட பாக்கு இந்தியாவுக்குக் கடத்தப்பட்டுள்ளது என்று இந்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

"பாக்கு கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இலங்கையில் போலி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கை வீரர்கள் தங்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அனுமதிப் பத்திரத்தைப் பெற்று போலி நிறுவனங்களை உருவாக்கியுள்ளனர் என்பது விசாரணைகளில் தெரிவந்துள்ளது. இந்தோனேசியாவிலிருந்து நேரடியாகப் பாக்குகள் இறக்குமதி செய்யப்பட்டால் அவற்றிற்கு 108 வீத வரி செலுத்த வேண்டும். ஆனால் தென்னாசியா சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டால் அதற்கு வரியில்லை" என்று இந்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (4)


### வெற்றிலைக்கேணிப் பகுதியில்

# மேட்டுப் பயிர்ச்செய்கைக்காக அழிக்கப்படுகின்றன பனைகள்

வடமராட்சி, நவ. 23

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் மீள் குடியேற்ற அமைச்சின் 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நெற்பயிர்ச் செய்கையைமேற்கொள்ளவும், மேட்டுப்பயிர்களானதென்னை, மாபோன்ற மரங்களைநடவும்திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஆங்காங்கேஇருக்கும்பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழலியல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். "மேட்டுப் பயிர்ச் செய்கைக்காக பனங்காடுகள் பொறுப்பின்றி அழிக்கப்படுகின்றன. இந்தத் திட்டம் நல்லதொரு திட்டம். அதற்காக பனை மரங்கள் அழிக்கப்படுவதை ஏற்க முடியவில்லை" என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



இதுதொடர்பில்மருதங்கேணிபிரதேச செயலரைத் தொடர்புகொண்டு கேட்டபோது. "குறித்த பிரதேசம் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். இராணுவத்தின்கட்டுப்பாட்டில்இருந்துவிடுவிக்கப்பட்டபகுதியாகக்காணப்படுகின்றது. மக்களின் கோரிக்கைக்கு இணங்க நாம் அவர்களின் காணிகளைத் துப்பரவுசெய்துகொடுக்கின்றோம். அவர்கள் விரும்பும் பயிர்களைப் பயிரிடுகிறார்கள். அங்குள்ள சிறிய பனைவடலிகள் அழிக்கப்படுகின்றன. காணி உரிமையாளர்கள்தங்களின்காணிகளில்உள்ளவற்றை அழிக்கின்றனர். அவர்கள்விவசாயம்செய்யத்தேவையானநிலத்தைத் தயார் செய்கின்றனர்"-என்றார். (ம-8,160)



## சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் மதிப்பளிப்பு

கொடிகாமம், நவ. 23

அன்பு மற்றும் வாழ்க்கை அமைப்பின் அங்கத்தவர்கள், கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் மாணவர்களிடையே மகிழ்வூட்டல் நிகழ்வொன்றை கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை முன்னெடுத்தனர். காலை 10 மணியிலிருந்து நண்பகல் ஒரு மணி வரை இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

அன்புக்கும் வாழ்க்கைக்குமான இளைஞர் வலையமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிவராசா ஜெனிற்றாவின் ஏற்பாட்டில் அனுராத அபயக்கோன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-159)

## வலி. மேற்குப் பிரதேசத்தில் கம்பரெலிய நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், நவ. 23

கம்பரெலியதிட்டத்தின்கீழ் புதிய வேலைகளை ஆரம்பிக்க வேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ள நிலையில், திட்டங்கள்தயாரிப்புகுறித்தகாலத்துக்குள் நிறைவடைந்து சமர்ப்பிக்கப்பட்டதால் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் 'கம்பரெலிய' திட்டம் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

இதுபற்றிமேலும்தெரிவிக்கப்பட்டதாவது:

ஒவ்வொரு தேர்தல்த் தொகுதிக்கும் 100 மில்லியன் ரூபா அபிவிருத்தி வேலையாக 'கம்பரெலிய' திட்டம் அரசால் அறிமுகம் செய்யப்பட்டது. அந்தத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும்நாடாளுமன்ற உறுப்பினரின் வழிநடத்தலில் பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் பாடசாலைகளின் ஊடான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்வகையில் இந்தத் திட்டம் அமைந்திருந்தது. அதற்கு ஏற்ற வகையில்ஒவ்வொருதேர்தல்தொகுதிக்கும்நிதிஒதுக்கப்பட்டு கடந்த மாதம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்என்று அறிவுறுத்தப்பட்டது.

வேலைகள் நவம்பர் மாதம் ஆரம்பித்து டிசெம்பர் மாதத்துக்குள் நிறைவடைய வேண்டும். வலிகாமம் மேற்குப்பிரதேசசபையின் அபிவிருத்தித் திட்டங்கள்நாடாளுமன்றஉறுப்பினர் ஈஸ்வரபாதம்சரவணபவனின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டு உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. தற்போது அதற்கான ஒப்புதல்கள் கிடைத்து நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. 20க்கும்அதிமான வீதிகள் சபையின் கீழ் சீரமைப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் தலா 20 லட்சம் ரூபா வீதம் 14 வீதிகளை முதல் கட்டமாக சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒரு வீதி சீரமைக்கும் போது அந்த நிதியின் 3வீதம்நிர்வாகச்செலவுக்கும், திட்டம் சார்பான பெயர்ப் பலகையை காட்சிப் படுத்துவதற்கு 6 ஆயிரம் ரூபாவும் கழிக்கப்பட்டு இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ம-7)



நயினை மைந்தர்கள் குழுமத்தின் ஏற்பாட்டில் நயினாதீவு பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதார சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான, ஆங்கிலம் மற்றும் சித்திர பாட கருத்தரங்குகள் நயினாதீவு ஸ்ரீ கணேச இளநிலைப் பிரிவு வித்தியாலயத்தில் கடந்த மாதம் 27, 28ஆம் திகதிகளிலும் நவம்பர் மாதம் 3, 4, 17, 18ஆம் திகதிகளிலும் இலவசமாக நடைபெற்றன. (ம)

## சாவ. சந்தையில் கீரை 120 ரூபா!

சாவகச்சேரி, நவ. 23

சாவகச்சேரி சந்தையில் நேற்று கீரைப்பிடி ஒன்று 120 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

மழை காரணமாக சந்தையில் மரக்கறிகளின் விலைகள் பொதுவாக அதிகரித்தேகாணப்பட்டன. கீரைப்பிடிகளின் வரவு குறைவாக இருந்த போதிலும் அவை சாராசரியாக 50 ரூபாவுக்கே விற்பனைசெய்யப்பட்டன. இந்தநிலையில் கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு நேற்று ஒருபிடி கீரை 120 ரூபாவாகவிற்பனைசெய்யப்பட்டது. (ம-9)

## வீதி விளக்குகள் பொருத்தும் பணி

வடமராட்சி, நவ. 23

பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குள் வீதி விளக்குகள் இல்லாத பகுதிகளில் வீதி விளக்குகளைப் பொருத்தும் பணிகள் இலங்கை மின்சார சபையின் உதவியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன.

இதுவரை முதலாம் இரண்டாம் மூன்றாம் வட்டாரங்களின் வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் நிறைவுற்றுள்ளன என்று சபைத்தலைவர் அ.சா. அரியகுமார் தெரிவித்தார். இந்தப் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதால் சபையின் 12 வட்டாராங்களிலும் மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் இரண்டு வாரங்களுக்குள் நிறைவுறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-173)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கற்றல் வளநிலைய ஆக்கத்திறன் கண்காட்சி மண்டபத்தில் அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டு மாணவர்களின் ஆக்கங்களைப் பார்வை யிட்டனர். (ம-159)

## சாவ. நகரசபை உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் விநியோகம்

சாவகச்சேரி, நவ. 23

சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் உட்பட உறுப்பினர்களுக்குசபையால்உறுப்பினர்அடையாளஅட்டைகள் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்பட்டன.

சபைதெரிவுசெய்யப்பட்டுஆறுமாதங்கள்கடந்தநிலையில் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்காததால்தமதுநடவடிக்கைகளைமுன்னெடுக்கமுடியவில்லை என்று அவர்கள் சபை அமர்வுகளில் தெரிவித்ததையடுத்து அடையாளஅட்டைகள்வழங்குவதற்கானஏற்பாடுகள்முன்னெடுக்கப்பட்டுவந்தன.


இந்த நிலையில் தவிசாளரின் கையொப்பத்துடன் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள்கடந்த20ஆம்திகதி விநியோகிக்கப்பட்டன. (ம-9)

# தென்மராட்சியில் மீண்டும் தலைதூக்குகிறது டெங்கு

சாவகச்சேரி, நவ. 23

**தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஆறு மாதங்களாக குறைவடைந்து காணப்பட்ட டெங்கு, தற்போது மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. அண்மையில் பெய்த மழையை அடுத்தே டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார‌த் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது: டெங்குவின் தாக்கம் கடந்த மாதங்களைவிட அண்மைய மழையை அடுத்து அதிகரித்துள்ளது. கடந்த 2 வாரங்களில் 20 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் பொதுமக்கள் வழங்கிய பங்களிப்பின் பயனாக டெங்குவின் தாக்கம் குறைவடைந்திருந்தது. அவ்வாறான நடவடிக்கைகளில் மக்கள் தொடர்ந்து ஈடுபட்டால் டெங்குவின் அதிகரிப்பைக் குறைக்க முடியும். இதன்படி, பொதுமக்கள் தினமும் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளில் மழைநீர் தேங்கக் கூடிய நீரேந்து பொருள்கள் காணப்படின் அவற்றை அப்புறப்படுத்துவதுடன் குடியிருப்புகள் மற்றும் காணிகளில் மழை நீர் தேங்கும் இடங்கள் காணப்பட்டால் அவற்றை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)



## சத்சங்கம்

யாழ்ப்பாணம், நவ. 23

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் வழிபாடு, தியானம், பஜனை, ஆகியவற்றை உள்ளடக்கிய 'சத்சங்கம்' நிகழ்வு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலைய வழிபாட்டு மண்டபத்தில் நாளை பிற்பகல் 3.30 மணிமுதல் மாலை 6 மணி வரை இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம)



சாவகச்சேரி – மகிழங்கேணியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவத்தால் நேற்றுமுன்தினம் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான வாகனங்களின் உதவியுடன் இந்தத் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ம- 9,159)

## ஈருருளி திருட்டு

கொடிகாமம், நவ. 23

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தமிழ்த் தின விழா நடைபெற்றவேளை மாணவியொருவரின் ஈருருளி காணாமற் போயுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தமிழ்த்தின விழா சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கச்சாய் வீதியிலிருந்து சென்று நிகழ்வில் கலந்துகொண்ட மாணவி திரும்பிவந்து பார்த்த போது ஈருருளி திருட்டு போயிருந்தது. சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. (ம-159)



கலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை பசுபதி எழுதிய சூரபன்மன் வதைப் படலம் வெளியீடு செல்வச்சந்திநி முருகன் ஆலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன் கொண்டார். (ம)

## அதிபர்களுக்கு கூட்டம்


சாவகச்சேரி, நவ. 23

தென்மராட்சி கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 28ஆம்திகதிபுதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சிக் கல்வி வலயக் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் அறிவித்தார். (ம-9)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம், நவ. 23

மின்விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு, மறுகட்டமைப்பு வேலைகளுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் நாளைமறுதினம் சில இடங்களில் மின் தடைப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்தது.



நீர்வேலி, சிறுப்பிட்டி ஆகிய இடங்களிலேயே நாளைமறுதினம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை மின் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபை மேலும் குறிப்பிட்டது. (ம)

## விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம், நவ. 23

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் பண்டத்தரிப்பு தொழில் பயிற்சி நிலையத்தில் அடுத்த வருடத்துக்கான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மின்னிணைப்பு, அழகுக்கலை, சிகை அலங்கரிப்பு ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயிற்சிகளில் பங்குபற்றவுள்ளோர் பண்டத்தரிப்பு பிரான்பற்றில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9,159)

## நாம் பயிரிட்டு நாம் உண்போம் என்ற தொனிப்பொருளின் கீழ் தேசிக்கன்று வழங்கும் நிகழ்வு

கொடிகாமம், நவ. 23

விவசாய அமைச்சின் மாவட்ட விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில், 'நாம் பயிரிட்டு நாம் உண்போம்' எனும் தொனிப் பொருளில் தேசிக்கன்று வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி புத்தூர்ச் சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் மாவட்ட விவசாய பணிப்பாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி விவசாய அமைச்சர் அங்கயன் இராமநாதன், விவசாய அமைச்சின் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், விவசாய அமைச்சின் உதவி ஆணையாளர், சாவகச்சேரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், விவசாய அமைச்சின் பிரதி அமைச்சரின் செயலாளர், சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், தென்மராட்சி பிரதேச செயலக அதிகாரிகள், சாவகச்சேரி பிரதேச நகரசபை உறுப்பினர்கள், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் உட்படப்பலரும் கலந்துகொண்டனர். தென்மராட்சி பிரதேச 60 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 10 தேசிக்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவசாயக் கிணறு அமைப்பதற்கான காசோலை, வெங்காயக் கொட்டில் அமைப்பதற்கான காசோலை தேசிக்கன்றுகள் என்பனவும் வழங்கப்பட்டன. (ம-159)

## சாவ. மகளிர் கல்லூரியில் கட்டடங்களுக்கு அடிக்கல்

கொடிகாமம், நவ. 23

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்னும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இரு கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி ல. முகுந்தன் தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-159)

## முதியோர்கள் மதிப்பளித்தல்

வடமராட்சி, நவ. 23

வடமராட்சிப் பிரதேசத்தில் முதியோர்களை மதிப்பளிக்கும் திட்டத்தின் கீழ் தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமம், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த தலா 36 முதியவர்களுக்கும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 30 முதியவர்களுக்கும் தேவையான உடுபுடைவைகளை வழங்கியுள்ளது. இவை பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்ட முதியோர் தின விழாக்களில் வைத்து முதியவர்களுக்குக் கையளிக்கப்பட்டன. (ம- 173)

## செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 23

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சிறப்புச் செயற்குழுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தச் செயற்குழுக் கூட்டத்தில் பட்டமளிப்பு விழா, சைவநாதம் நூல் வெளியீடு, நிர்வாக உறுப்பினர்களின் குழுப்படம் எடுத்தல், 2019ஆம் ஆண்டுக்கான இளம் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்துச் செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (ம-9)

# வவுனியாவில் குளங்கள் வான்பாய்கின்றன பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை

## மாவட்டச் செயலர் தெரிவிக்கிறார்

வவுனியா, நவ. 23

**வவுனியாவில் பெய்து வரும் மழைகாரணமாக பாவற்குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. ஈரப்பெரியகுளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. எனினும் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்று வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம்.ஹனீபா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: வவுனியாவில் சில நாள்களாகப் பெய்துவரும் மழைகாரணமாக நீர்வரத்து அதிகரித்து குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. பாவற்குளத்தின் நீர்மட்டம் 16.11 அடியாக உயர்வடைந்துள்ளது. ஈரப்பெரியகுளமும் வான் பாய்கிறது. ஏனைய சில குளங்களும் வான்பாயத் தொடங்கியுள்ளன. மத்திய நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் காணப்படும் வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் 16.11 அடியாக உயர்வடைந்துள்ளது. இராசேந்திரங்குளம் 9.9 அடியாகவும், முகத்தான்குளம் 11 அடியாகவும் உயர்வடைந்துள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்யும் பட்சத்தில் சில நாள்களில் இவையும் வான்பாயக் கூடிய நிலை ஏற்படும்.

மத்திய நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள ஈரப்பெரியகுளம் 15.7 அடியாக உயர்வடைந்துள்ளது. வான் கதவுகள் திறக்கப்பட்டு 3 இஞ்ச் உயரத்தில் வான் பாய்கிறது.

வவுனியா வடக்கு மருதமடுக் குளம் 12.1 அடியாகத் தண்ணீர்மட்டம் உயர்வடைந்து வான் பாயத் தொடங்கியுள்ளது. பாவற்குளமானது 3 இஞ்ச் விவசாய நடவடிக்கைக்காக திறந்து விடப்பட்டுள்ளதால் சடுதியான நீர் அதிகரிப்பு ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தண்ணீர்மட்டம் அதிகரிப்புக் காரணமாக இந்தக் குளங்களின் கீழ் உள்ள மக்களுக்கோ, பயிர்ச்செய்கைக்கோ எந்தவிதப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை. இடர் ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் இடர் முகாமைத்துவ நிலையம் மாவட்ட மட்டத்தில் நடவ்டிக்கைகளை மேற்கொண்டுள்ளது - என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (4,110)



விசுவமடு லாலா ரஞ்சன் விளையாட்டுக் கழக மைதான திருத்த வேலைக்கென 25 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனின் இந்த வருட ஒதுக்கீட்டில் நிதி வழங்கப்பட்டது. (4,222)

# வீட்டுக்குள் புகுந்த 13 அடிநீள முதலை

## செம்மலையிலும் சம்பவம்

முல்லைத்தீவு, நவ. 23

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த 13 அடி நீளமான முதலை மடக்கிப் பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாரி மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் மழைவெள்ளத்துடன் கூடவே முதலைகளும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. குளங்களை அண்டியுள்ள பகுதிகளில் உள்ள குடியிருப்புகளிலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. கிளிநொச்சி, வடமராட்சிப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக இவ்வாறு முதலைகள் பிடிக்கப்பட்டுள்ளன. தற்போது முல்லைத்தீவிலும் பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் குறித்த முதலை வீட்டுக்குள் புகுந்துள்ளது.

விழித்துக்கொண்ட வீட்டின் உரிமையாளர் வனஜீவராசிகள் பாதுகாப்புத்திணைக்களத்துக்குத் தகவல் வழங்கினார். பின்னர் முதலை பிடிக்கப்பட்டுள்ளது. அதை அதிகாரிகள் வவுனிக்குளம் முதலைகள் சரணாலயத்துக்குக் கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இது போன்ற முதலைகள் நுழைந்தால் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, உரியதரப்பினரிடம் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (4,21,ரி3)





# துயிலுமில்லப் பணிக்குழுவினரிடம் 300 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி, நவ. 23

கிளிநொச்சி கனகபுரம் துயிலுமில்ல பணிக்குழுவிடம் 28 ஆயிரம் ரூபா பெறுமதியான மரங்கள் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

மரநடுகை மாதத்தை முன்னிட்டு மரக்கன்று வழங்கல் இரணைமடுக்குளகமக்காரர் அமைப்புகளின் சம்மேளனம் அவற்றை வழங்கின.

100 மாங்கன்றுகள், 100 பலாக்கன்றுகள், 100 மாதாளங்கன்றுகள் என்பனவே வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.





# மாவீரர் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் தீவிரம்

முல்லைத்தீவு, நவ. 23

தமிழர், தாயகத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள வீர மறவர்களுக்கான நினைவேந்தல் வேலைத்திட்டங்கள் அனைத்துப் பகுதிகளிலும் ஆரம்பித்துள்ளன.

முல்லைத்தீவு தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளுக்கான வேலைகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. முள்ளிவாய்க்கால், தேவிபுரம் துயிலுமில்லங்களுக்கான சுடரேற்றும் கம்பிகள் வளைக்கும் பணிகள், கொடிச் சீலைகள் தைக்கும் வேலைகள், கம்பங்கள் நடும் வேலைகள் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டிருந்தன. மாவீரர் குடும்பங்களைச்சேர்ந்த உறவுகள் இந்தப் பணிகளை முன்னெடுத்திருந்தனர். (21)

# அடிக்கல் நடும் நிகழ்வு

கிளிநொச்சி, நவ. 23

கிளிநொச்சி இராமநாதபுரம் மாவடிசிறிமாரி அம்மன் ஆலயத்தில் சுற்றுக்கொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கிராம அபிவிருத்தித் திட்டம் மூலமாக முன்மொழிவு செய்யப்பட்டு ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. சி.சிறிதரன் அடிக்கல் நட்டார். (4,21)



# சுயதொழிலை மேற்கொள்ள பணம், பொருள்கள் அன்பளிப்பு

அனுராதபுரம் தேவநம்பியதிஸ்ஸபுரத்தில் வசிக்கும் சிவகுமார் என்ற 3 பிள்ளைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அந்தக் குடும்பத்துக்கு சுயதொழில் பொருள்கள் வழங்கப்பட்டன.

குறித்த குடும்பத்தினரின் வேண்டுகோளின்படி புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் க.நந்தினி குறித்த பொருள்களையும் சிறுதொகைப் பணமும் வழங்கினார்.

வவுனியா ஈஸ்வரிபுரத்தில் வறுமையில் வாழும் பெண்ணுக்குச் சிறு கைத்தொழிலை மேற்கோண்டு வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான அனைத்துப்பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டன. தமிழ்விருட்சம் அமைப்பினூடாக அவை வழங்கப்பட்டன. (4,110)



# வவுனியா நகர சபையின் எழு நீ விழாவை புறக்கணிப்பதற்கு அகளங்கன் முடிவு

## நிகழ்வு பற்றிய கலந்துரையாடலுக்குக்கூட மூத்த கலைஞர்களுக்கு அழைப்பில்லை எனக் குற்றச்சாட்டு

வவுனியா, நவ. 23

**வவுனியா நகர சபையினர் இன்று நடத்தவுள்ள 'எழு நீ' விழாவைப் புறக்கணிக்கவுள்ளேன் என்று வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் தமிழ்மணி அகளங்கள் தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்று நடைபெற்ற மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா நகரசபை நடத்தவுள்ள எழு நீ விழா தொடர்பான கலந்துரையாடலுக்கு எனக்கோ, அருணா செல்லத்துரைக்கோ கடிதம் அனுப்பப்படவில்லை. அவ்வாறே மூத்த கலைஞர்கள் பலருக்கு எந்தவித தகவலும் சொல்லப்படவில்லை. கடிதம் அனுப்பப்பட்டது என்றால் இருந்தால் அது கிடைத்துள்ளதா என்று அறிந்திருக்கவேண்டும். அதுவே முறையானசெயற்பாடு. திட்டமிட்டே இந்த நிகழ்வுக்கு மூத்தகலைஞர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று நாம் உணர்கின்றோம். நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரை விருந்தினராக அழைக்கிறார்கள். உண்மையில் அவர் வவுனியாவுக்குப் பல துரோகங்களைச் செய்த வர். பொருளாதார மத்திய நிலையம், புதிய பேருந்து நிலைய விவகாரம், வவுனியாவுக்குக் கிடைத்த சிறந்த வளமான முன்னாள் சுகாதார அமைச்சரைப் பதவியிலிருந்து அகற்றியமை போன்ற பலதுரோகங்களை வவுனியா மண்ணுக்குச் செய்தவர்.

நாம் பல இளம் கலைஞர்களைத் தேடி வருவதுடன், மதிப்பளித்திருக்கிறோம். இளம்கலைஞர்களை மதிப்பளிப்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் இதன் பின்னால் அரசியல் இருக்கிறது.

நகரசபைத் தலைவருக்குரிய மதிப்பைப் பலர் வழங்குவதில்லை. வவுனியா நகரசபைத் தவிசாளரும் தனது பதவிக்குரிய மதிப்பைக் காப்பாற்றுபவராகத் தெரியவில்லை. ஒரு நகரத்தின் முதல்மனிதனாகத் தவிசாளர் இருக்கிறார். அப்படிஇருக்கும்போது பல கடிதங்களில் அவரது பெயரை இரண்டாவதாக இடப்படும் நிலை இருக்கிறது. இதற்குப் பின்னால் அரசியல் இருக்கிறது என உணர்வதால் இந்த நிகழ்வைப் புறக்கணிக்கவுள்ளேன் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அரசியல் கலப்பு உள்ளது என்று வவுனியா நகர சபையின் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருந்தனர். அதற்கு சபையின் தவிசாளரும் கருத்துரைத்திருந்தார். அதில், அகளங்கள், அருணா செல்லத்துரை ஆகியோரை கலந்துரையாடல் நிகழ்வுக்க அழைப்பு விடுத்தும் வரமறுத்துவிட்டனர் என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

முழு நாள்க் கருத்தரங்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ் மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது. 'நிகழ்வில் 'பாரதியாரும் அவர் வழி வந்த கவிஞர்களும்' என்ற தலைப்பில் உரைகள் இடம்பெற்றன. (4,110)



### வீதிக் குழியில் சரிந்தது முச்சக்கரவண்டி வெள்ளத்தில் மிதந்து சென்றன பாண்கள்

கிளிநொச்சி, நவ. 23

வீதியிலிருந்த குழிக்குள் முச்சக்கரவண்டிதடம்புரண்டதில், அதில் கொண்டுசெல்லப்பட்ட பல றாத்தல் பாண்கள் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகள் வெள்ளத்தில் வீழ்ந்து மிதந்தவாறு சென்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வீதி சீரின்மையால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்று அங்குள்ளவர்கள் குற்றஞ்சாட்டினர். அதனால் அவற்றைக் கொண்டு சென்றவருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி கிராமங்களிலுள்ள வீதிகளில் 90 வீதமானவை மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. இவ்வாறான வீதிகளால் நாளாந்தம் பல்வேறு தேவைகளுக்காகப் பயணம் செய்கின்ற பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே வீதிகளைச் சீரமைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. (4,214)

குழைபோட்டு மீன்பிடிக்க

### கண்டல்களை வெட்டியவருக்கு நீதிமன்று 5,000 ரூபா தண்டம்

மன்னார், நவ. 23

கடலுக்குள் இலைகுழைகளைக் கொண்டு கணவாய், மீன்களைப் பிடிக்க கடலோரத் தாவரங்களை அழித்த மீனவருக்கு நீதிமன்று 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

அவரிடமிருந்து பத்துக் கட்டு கண்டல் தாவரங்களும், கத்தியும் கைப்பற்றப்பட்டன.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவின் அச்சங்குளம் பகுதியிலேயே தாவரங்கள் அழிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் நேற்றுமுன்தினம் மன்னார் நீதிவான் மன்றில் பதில் நீதிவான் இம்மனுவேல் கயஸ் பல்டானோவிடம் முற்படுத்தப்பட்டார். குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அதனை யடுத்துத் தண்டம் விதிக்கப்பட்டது. (4,60)



### பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டன

கொடிகாமம், நவ. 23

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பொன் சபாபதி மண்டபத்தில் இது நடைபெற்றது.

டிசெம்பர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவ மாணவிகள் ஜெயந்தி நகரிலுள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் வழிபாடு செய்தனர். பின் கிறிஸ்தவ தேவாலயத்தில் வழிபாடு செய்தனர். பின்னர் அதிபர் ஆசிரியர்களின் ஆசியுடன் அனுமதி அட்டைகளை பெற்றுக் கொண்டனர். அதிபர் மற்றும் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆசியுடன் வாழ்த்தி அனுமதி அட்டையை வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (4,159)

### கட்டிவைத்தோ பட்டியில் அடைத்தோ கால்நடைகளைப் பாதுகாருங்கள்

#### வீதியில் இனி விடாதீர்கள் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் அறிவுறுத்து

புதுக்குடியிருப்பு, நவ. 22

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பவர்கள் தங்கள் கால்நடைகளை இரவு நேரத்தில் வீட்டில் கட்டிவைத்தோ அல்லது பட்டியில் அடைத்தோ வளர்க்கவேண்டும் என்று புதுக்குடி யிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.டி.சந்திரபால அற்பு றுத்தியுள்ளனர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைய நாள்களாகப் புதுக்குடியிருப்பு நகர் வீதிகளில் கட்டாக்காலி கால்நடைகளால் அதிகளவான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

பிரதேச சபையினர் நடவடிக்கை எடுத்தும் கால்நடைகள் கட்டுப்படுத்தப்படவில்லை. கால்நடைகளின் உரிமையாளர்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும் என்று பிரதேச சபையால் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய 20 ஆம் திகதி இரவு புதுக்குடியிருப்புப் பொலிஸார் 16 கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து பிரதேச சபையிடம் ஒப்படைத்துள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள். இரவு நேரங்களில் வீதிகளில் நிற்கும் கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபடவுள்ளனர். கால்நடை உரிமையாளர்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (4,ரி3)

### ஆடுகளைத் திருடினாரென்று ஒருவர் கைது: 2 ஆடுகள் மீட்பு



முல்லைத்தீவு, நவ. 23

ஆடுகளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணைகளிலிருந்து இரண்டு ஆடுகள் மீட்கப்பட்டுள்ளன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு விசுவமடு மேற்குப் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி வீட்டில் வளர்த்த ஆடுகளே காணாமற்போயுள்ளன. இது தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசுவமடு குமாரசாமிபுரத்தில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரிடம் நடத்திய விசாரணையிலிருந்து திருடப்பட்ட ஆடுகளில் இரண்டு மீட்கப்பட்டுள்ளன.

விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் அவர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (4,ரி3)

### தரம் 5 பரீட்சையில் வெற்றிபெற்ற கோம்பாவில் மாணவர் மதிப்பளிப்பு

முல்லைத்தீவு, நவ. 23

புதுக்குடியிருப்பு கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டுள்ளார்கள்.

வித்தியாலய அதிபர் சந்திரகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் நிகழ்வு இடம்பெற்றது. சிறப்பு விருந்தினராகப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உப தவிசாளர் க.ஜனமேஜயந் கலந்து கொண்டு சித்திபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி மதிப்பளித்துள்ளார். (4,ரி3)





# மக்கள் பேரவையிலிருந்து க.குமாரை வெளியேற்றவும்

## சித்தார்த்தன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

பொ கஜேந்திரகுமார் தனது சொந்த நலனுக்காகவும் தேர்தல் வெற்றிக்காகவும் மக்கள் இயக்கமான தமிழ் மக்கள் பேரவையைப் பயன்படுத்தத் துடிக்கிறார். அவரைப் பேரவையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவை மக்கள் இயக்கமே அன்றி அரசியல் கட்சியாகச் செயற்படமாட்டாது என்பதே அதன் ஆரம்ப கால நிலைப்பாடு . இதனையே முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் ஆரம்பம் தொடக்கம் கூறிவருகிறார்.

இருப்பினும் அதே முதல்வர் தற்போது ஓர் அரணியல் கட்சியை ஆரப்பித்த பின்பும் அதே இணைத்தலைவராகவே உள்ளார். அதுபோன்றே பல அரசியல் கட்சிகளும் பேரவையில் அங்கம் வகிக்கின்றோம்.

அப்படியிருக்க கஜேந்திரகுமார் மட்டும் பேரவையைக் குத்தகைக்கு எடுத்தவர் போன்று செயற்படக்கூடாது. செயல்படவும் முடியாது. அவ்வாறு செயல்பட தலைமை இடம்கொடுக்கவும் கூடாது. அவ்வாறு நிகழ்ந்தால் பேரவை ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் மாறிவிடும். எனவே எம்மைப் பேரவையிலிருந்து வெளியேற்றும் உரிமை கஜேந்திரகுமாருக்குக் கிடையாது.

இதன் காரணமாக எதேச்சையாகவும் பேரவையை சுய நலத்துக்காகவும் பயன்படுத்தும் கஜேந்திரகுமாரின் கட்சியை பேரவையிலிருந்து வெளியேற்ற வேண்டும். என்கின்ற தீர்மானத்தை நாம் அடுத்த பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

இதனைப் பேரவை நியாயபூர்வமாகப் பக்கச் சார்பின்றி ஆராய்ந்து உரிய தீர்வை முன்வைக்க வேண்டும். ஏனெனில் பேரவை ஆரம்பிக்கும்போது இருந்த அனைவருக்கும் அதில் அங்கம் வகிக்க உரிமை உண்டு. அரசியல் கட்சி போன்று இதனையும் குடும்ப சொத்தாகக் கருத முடியாது. கஜேந்திரகுமாருக்கு தமிழ் மக்கள் பேரவையில் என்ன உரிமை இருக்கின்றதோ அதே அளவு உரிமை அதில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் உண்டு. இருக்கவும் வேண்டும். அவ்வாறு இல்லையேல் அது மக்கள் இயக்கம் என்ற அந்தஸ்தை இழந்துவிடும்

அந்த வகையில் அடுத்த பேரவைக் கூட்டத்தில் இது தொடர்பான விடயங்களை முன்வைத்து நாம் தீர்வைக் கோருவோம். அதற்குக் கிடைக்கும் தீர்வைப் பொறுத்தே நீதி வெளிப்படும் - என்றார். (4,105)

# யாழ்ப்பாணம்– பொன்னாலை வீதியில் பயணிக்க முடியாதளவுக்கு கிடங்குகள்

## விரைவில் காப்பெற் வீதியாக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைச் சந்தி தொடக்கம் பொன்னாலை வரையான (ஏபி21) வீதி (கல்லுண்டாய் வீதி) கடும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. சுமார் 25 கிலோமீற்றர் தூரம் மிகவும் சிரமத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பண்ணை, நாவாந்துறை, காக்கைதீவு, அராலி, வட்டுக்கோட்டைச் சந்தி, பொன்னாலைச் சந்தி, காரைநகர் செல்லும் வீதியில் பொன்னாலைச் சந்திவரை உள்ள சுமார் 13 கிலோமீற்றர் வீதி நீண்ட காலமாகவே கடும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. வீதியால் பயணிப்போர் வீழ்ந்து எழும்பிப் பயணம் செய்யும் அவலநிலை தொடர்கிறது.

போர்க்காலத்தில் இருந்து அந்த வீதி சீரமைக்கப்படவேயில்லை. வீதியில் உள்ள கிடங்குகளுக்குத் தற்காலிகமான தீர்வாக தார்க்கலவை போட்டுச் சரிசெய்கிறது வீதி அபிவிருத்தி அதிகாரசபை. சிலநாள்களில் மீண்டும் அந்தக் கிடங்குகள் ஏற்பட்டுவிடுகின்றன.

அந்த வீதியில் பயணிக்கும் உந்துருளிகள் உட்பட வாகனங்கள் கடும் சேதங்களுக்கு உள்ளாகின்றன. பிரசவத்துக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்குச் செல்வோர், நோய்வாய்ப்பட்டுச் சிகிச்சைக்காக யாழ்ப்பாண நகருக்கு வரும் முதியவர்கள் எனப் பலரும் அவதிப்படுகின்றனர்.

வீதி அகலிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. வீதியின் அருகில் உள்ள மக்களிடம் பிரதேச செயலகம் காணிகளையும் கோரியிருந்தது. வீதி அளக்கப்பட்டு இருமருங்கிலும் கட்டைகள் அடிக்கப்பட்டன. இவை நடைபெற்று ஒரு வருடத்தைக் கடக்கிறபோதும் வீதி அபிவிருத்தி ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் தொடர்ந்தும் அவலங்களைச் சந்திக்க வேண்டிய நிலையே உள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து அந்த வீதியைச் சீரமைத்தால் பருத்தித்துறை பொன்னாலை, யாழ்ப்பாணம் என்று கரையோர முதன்மை வீதியாகக் காணப்படும். கரையோரப் போக்குவரத்துகளுக்கு மிகவும் சிறந்ததாக அமையும். காரைநகரில் உள்ள சுற்றுலாத் தளங்களுக்குச் செல்வோரும் அதிகமாக அந்த வீதியையே பயன்படுத்துகின்றனர்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க வேண்டுமானால் முதலில் அதற்கான பாதையைச் சீர்ப்படுத்த வேண்டும். கிளிநொச்சியிலுள்ள சுற்றுலாத்தளமான பூநகரி பறவைகள் சரணாலயம் பெரும் செலவில் சீரமைக்கப்பட்டும் அங்கு சுற்றுலாப் பயணிகள் செல்லாதமைக்குக் காரணம், குறித்த இடத்துக்குச் செல்லும் வீதி சீரின்மையே என்று கூறப்படுகிறது.

எனவே ஏபி - 21 வீதியை விரைந்து சரிசெய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையைத் தொடர்பு கொண்டு கேட்டபோது "குறித்த வீதி நேரடியாக சபையின் கீழ் வரவில்லை. அகலிப்புக்கான வேலைகள் நடைபெற்றுள்ளன. பருத்தித்துறை வரையான வீதி மொத்தம் 36 கிலோமீற்றர் நீளமானது. ஆனால் 12 கிலோமீற்றருக்கான திட்டமே வழங்கப்பட்டுள்ளது. இதனாலேயே தாமதப்படுகிறது. இது தொடர்பில் உரியவர்களிடம் பேசுவோம் என்று தெரிவித்தனர்.

குறித்த வீதி சீரமைக்கப்படவுள்ளது என்றும் நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெருநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ஆயிரத்து 400 மில்லியன் ரூபா நிதியில் சீரமைக்கப்படவுள்ளது என்றும், வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் இது யாழ்ப்பாணம், மானிப்பாய், சுழிபுரம் ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளை ஊடறுத்து முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் அண்மையில் தெரிவித்திருந்தார். (4,21)

# வீட்டுத் திட்டம் அமைக்க டிசெம்பர் மாதம் அடிக்கல்

வடக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தில் முதற்கட்டமாக 15 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. எதிர்வரும் டிசெம்பர் முதல் வாரத்தில் அவற்றுக்கு அடிக்கல் நடப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்த 50 ஆயிரம் வீட்டுத் திட்டங்களுக்கும் மேலதிகமாக 65 ஆயிரம் வீடுகளை அமைக்க மேலும் ஒரு திட்டத்தை இந்தவருட இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் தொடங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஈ.பி.டி.பியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (4)

*ருத்திராட்ச மாலை பெறுவதற்காகச் சென்ற பக்கதர்களால் ஏற்பட்ட நெரிசலில் அகப்பட்டுப் பலர் காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.*

*மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் கோவிலில் ஏகாதசருத்ர வேள்வி கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமானது.*

*இறுதிநாளான நேற்று ருத்திராட்ச மாலைகள் பக்தர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இதனைப் பெறுவதற்குப் பலர் முண்டியடித்துக் கொண்டு சென்றபோது நெரிசல் ஏற்பட்டுப் பலர் காயமடைந்தனர். அவர்களில் 17 பேர் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைகளுக்காக மூவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (4)*



# மாவீரர்களைச் சகலரும் நினைவு கூருவது அவசியம்

## மன்னார் நகர சபை தலைவர் வலியுறுத்து

தமிழ் மக்களின் விடுதலைக்காக உயிர் நீத்த மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் (நவம்பர் 21 27) ஆரம்பித்துள்ளது. அவர்களை நினைவு கூரவேண்டியது எமது கடமை என்று மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் 9 ஆவது அவர்வு நகர சபையின் சபாமண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவீரர்கள் என்பவர்கள் தங்களுக்காகவும், தமது குடும்பங்களுக்காகவும் உயிர் நீத்தவர்களல்ல.

எமது மண்ணுக்காகவும், எமது மக்களுக்காகவும் உயிர்நீத்தவர்கள். அவர்கள் மக்களையும் மண்ணையும் நேசித்தவர்கள்.

இரவு பகல் பாராது மழை வெயில் என்று சோராது களமுனைகளிலே போரிட்டு எமது மக்களுக்காக உயிர் நீத்தவர்கள். அவர்களை இந்தத்தருணத்தில் நினைவுகூர வேண்டியது எமது கடமை.

நாட்டில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது இரண்டு தலைமை அமைச்சர்கள் ஆட்சிசெய்துகொண்டு இருக்கின்றார்கள். நாடாளுமன்றம் கேலிக்கூத்தாக இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது.

உயரியசபையிலே எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றுகூடத் தெரியாமல் அங்கே அமர்வுகள் இடம் பெற்றுவருகின்றன–என்றார்.

அதைத்தொடர்ந்து தலைவர் சபை உறுப்பினர்களுக்கு பகிரங்க அறிவிப்பை விடுத்தார்.

**ஒலிப்பதிவு செய்வது தண்டனைக் குரிய குற்றம்**

சபையில் உள்ள உறுப்பினர்கள் எவரும் தமது அலைபேசிகளில் சபை உரையாடல்களை ஒலிப்பதிவு செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது. அது தண்டனைக்குரிய குற்றம். அத்துமீறி ஒலிப்பதிவு செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்று தெரிவித்தார்.

இதன்போது எழுந்த உறுப்பினர்களான எஸ்.ஆர்.குமரேஸ், செல்வக்குமரன் டிலான் ஆகியோர், நாங்கள் சபையில் ஆற்றுகின்ற உரையை ஏன் ஒலிப்பதிவு செய்யக்கூடாது என்று கேள்வியெழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த தவிசாளர், சபை அமர்வுகளின் போது உறுப்பினர்கள் ஒலிப்பதிவு செய்ய முடியாது. அதற்கான காரணத்தை எழுத்து மூலமாக வழங்கமுடியும். இனியும் ஒலிப்பதிவு செய்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

"பதிலை எழுத்து மூலமாகத் தரும்வரை நாங்கள் ஒலிப்பதிவுசெய்வோம்" என்று உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் கூறி அமர்ந்தார்.

"சபையில் ஒலிப்பதிவுசெய்தால் என்ன தண்டனையோ அதனை வழங்குங்கள். அதனை ஏற்கத் தயார்" என்று உறுப்பினர் செல்வக்குமரன் டிலான் கூறி அமர்ந்தார்.

மேலும் சில உறுப்பினர்களுக்கும் சபைத்தலைவருக்குமிடையே தொடர்ச்சியாகக் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. வேறு விடயங்கள் பற்றிக் கதைக்கப்படாது அமர்வு நிறைவுசெய்யப்பட்டது. (4,56)

### நாட்டின் தற்போதைய நிலைமையில்

# பொய்ப் பரப்புரைகளுக்குச் செவிசாய்க்காதீர் அராஜக அரசியலுக்கு முடிவு கட்டுங்கள்!

### பொதுமக்களிடம் கோருகிறது மன்னார் மாவட்ட குடிமக்கள் குழு

மன்னார், நவ. 23

அரசியலில் இருப்பவர்கள் தமது அரசியல் லாபங்களுக்காகவும் தமது இருப்பைத்தக்க வைப்பதற்காகவும் கூறும் பொய்ப் பரப்புரைகளுக்கும் போலித்தனமான கொள்கைகளுக்கும் செவிசாய்க்காதீர்கள். கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் நடந்தவைகளை நிதானத்துடனும் சீர்தூக்கிப்பார்த்து விழிப்புணர்வுடன் செயலாற்றினால் அராஜகமும் அநாகரிகமும் அநீதியுமான அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

இவ்வாறு மன்னார் மாவட்ட பொதுமக்கள் குழு கோரியுள்ளது. இது தொடர்பில் இந்தக் குழுவின் தலைவர் அருட்பணி அ.ஞானப்பிரகாசம் அடிகள் இந்தக் குழுவின் ஆளுநர் சபைஉறுப்பினர்களுடன் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:
சில வாரங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை அதன் பின்னர் ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான ஜனநாயக மறுப்பு. எதேச்சதிகாரச் சூழல் மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்களையும்சந்தேகங்களையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.
நாட்டின் மீது, அரசுமீது, ஜனநாயகத்தின் மீது வெறுப்பும் கசப்பும் விரக்தியான சூழலும் ஏற்பட்டுள்ளது. என்ன செய்வது என்று தெரியாது பொதுமக்கள் திகைத்து நிற்கின்றனர். மூன்றாண்டுகளுக்கு முன்னர் பலவித வாக்குறுதிகளையும் நம்பிக்கைகளையும்எதிர்பார்புளையும் தந்து மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியமைத்தவர்களால் நன்மைகளோ, நீதியோ தமிழ் மக்களுக்கு ஏற்படவில்லை.
அனைத்து வாக்குறுதிகளும் வெற்றுவாக்குறுதிகளாகிவிட்ட சூழலில் அச்சம்மிக்க சூழல் நாட்டின் பொறுப்புமிக்கவர்களால் வலிந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவைகளுக்கு மத்தியில் ஒவ்வொருதரப்பினரும் ஒருவர்மீது ஒருவர் மாறிமாறிப் பழி சுமத்துவதிலும் சேறடிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் தெரிவுசெய்த பிரதிநிதிகள் பொறுப்பற்றவர்களாக ஜனநாயக மறுப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான நாட்டின் அதியுயர் மன்றமான நாடாளுமன்றினுள் நடந்த வன்முறையும் அராஜகமான செயற்பாடுகளும் வேலியே பயிரை மேய்ந்த செயலாகிவிட்டது.
ஒரு நாட்டின் மிகபெரும் சக்தி மக்களே. மக்களின் எழுச்சியும் புரட்சியுமே நாட்டின் ஏற்றமும் விருத்தியுமாகும். இக்கட்டான சூழலில் பொதுமக்கள் நிதானத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் சிந்திக்க வேண்டிய நேரம் இது. ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்பதைப்போல பொதுமக்கள் உயரிய லட்சியத்துக்காக ஒன்றுபட்டால் உண்மையான மாற்றத்தை உருவாக்கலாம்.
நீதியும் சமாதானமும் சமத்துவமும் ஒளிமயமான எதிர்காலமும் உள்ள மாற்றத்தை உருவாக்க பொறுப்புணர்வுடனும் அமைதியுடனும் நிதானத்துட னும்விழிப்புணர்வுடனும் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (4.60)

## உறங்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், நவ. 23
வீட்டில் உணவு உண்ட பின்னர் உறக்கத்துக்குச் சென்றவர் காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் நேற்றுமுன்தினம் சடலம் மீட்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த விமலதாஸ் ஜோசப் (வயது -35) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டார்.
இது தொடர்பில் தெரியவருவதாவது.
மனைவியைப் பிரிந்து தனது தாயுடன் வசித்துவந்தார். இரவு உணவு உண்டதைத் தொடர்ந்து வாந்தி எடுத்துள்ளார். பின்னர் உறங்கச் சென்றுள்ளார். அவரது தாயார் நேற்றுமுன்தினம் காலை அவரை உறக்கத்தில் இருந்து எழுப்பியபோது எவ்வித அசைவும் இல்லாது இருந்துள்ளார். யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அவர் உயிரிழந்து விட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் விசாரணை நடத்தி சடலத்தை ஒப்படைத்தார். (4,8,106)

## தவறான முடிவெடுத்து மாணவி உயிர் நீத்தார்

யாழ்ப்பாணம், நவ. 23
வீட்டில் தொடர்ச்சியாக தொலைக்காட்சி பார்ப்பதை வெளிநாட்டில் உள்ள சகோதரன் கண்டித்தார் என்றுகூறி மாணவி தவறான முடிவு எடுத்து உயிர்நீத்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் அராலி தெற்கு வட்டுக்கோட்டையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கவாசகம் சாரு (வயது - 19) என்ற மாணவியே தவறான முடிவெடுத்தார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலையில் உயர்தரத்தில் அவர் கல்வி கற்றுவந்தார்.
மாணவியின் சடலத்துக்கு அண்மையில் கடிதம் ஒன்று மீட்கப்பட்டது. போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் விசாரணை நடத்தி சடலத்தை ஒப்படைத்தார். (4,8)

## மாற்றுத் திறனாளிகள் தின போட்டி முடிவுகள் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 23
பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நடத்திய போட்டிகளின் முடிவுகளை கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம் அறிவித்துள்ளது.
மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் அவர்களின் ஆரோக்கியமான வாழ்வியலை மேம்படுத்தும் நோக்குடனும் வருடாந்தம் மாணவர்கள், பொதுமக்களிடையே கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியப் போட்டிகளை கருவி நிறுவனம் நடத்திவருகிறது.
மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதலாம், 2ஆம், 3ஆம் இடங்கள் என்ற ஒழுங்கில் பெற்றிபெற்றோரின் பெயர்கள் வருமாறு,

**கவிதை**
பகீரதன் ஜெறோன் (யா /சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சுரேஸ் வினோதினி (வ/நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலம்), புனிதநாதன் வைசாலி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**கட்டுரை**
பரமானந்தரா சாதுளசிகா (யா/புற்றளை மகாவித்தியாலயம்), விஜயகுமார் இந்திரா (நோர்வூட் தமிழ் மகாவித்தியாலயம்), அபர்ணா கருணாகரன் (யா/வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலை).

**சிறுகதை**
சந்திரசேகரன் சிவாந்தினி (ம.மாகாணம் ஹவ/நோர்வூட் தமிழ் மகாவித்தியாலயம்), பி.யூலியாள் (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**ஓவியம்**
யோகரட்ணம் பானுஷியன் (யா/மத்திய கல்லூரி), கணேஸ் கார்த்திகா(யாஃவேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலை), மாதங்கி குபேரமூர்த்தி (யா/ இணுவில் இந்துக் கல்லூரி).

**பொதுமக்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில்,**

**கவிதை**
நடராசா இராமநாதன் (உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு), இராஜா ஜெயக்குமார் (சிவன் வீதி,உரும்பிராய் கிழக்கு), கிருஷ்ணன் குலசேகரன் (ஆதர் சிறிசேனமாவத்த, அப்புத்தளை).

**கட்டுரை**
திருமதி. பாஸ்கரன் சித்திரா (சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை, மானிப்பாய்), குணரத்தினம் துஸ்யானி (காளி கோயில் வீதி, கூமாங்குளம், வவுனியா), கந்தப்பு ஆனந்தக்குமாரசாமி (இலகடி வீதி, கரவைமத்தி).

**சிறுகதை**
பாலசுந்தரம் இரமணாகரன் (சன்நிதிவீதி, இடைக்காடு, அச்சுவேலி), புவித்திரா தேவராசா(தொடருந்து நிலையவீதி, வைரவபுளியங்கும், வவுனியா), இ.நவனீதன் (பிள்ளையார் கோயில் வீதி, சித்தாண்டி, மட்டக்களப்பு).

**ஓவியம்**
பரமேஸ்வரன் ததீஸ் (உடுவில் தெற்கு, புதுமடம்,மானிப்பாய்), உதயகுமார் இதயராஜ் (கலாசாலைவீதி,பாரதிபுரம், திருநெல்வேலி), மங்களகௌரி குலேந்திரன் (மங்களாவாசா இணுவில்மேற்கு) ஆகியோர் பெற்றுள்ளனர்.
வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை கல்லூரி வீதியில் அமைந்துள்ள பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.
மேலதிக விவரங்களை கருவி அமைப்பின் 201 205 4224, 076 638 5563 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என்று கருவி அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (4)

## தீக் காயமடைந்திருந்த இளம் தாய் சாவு

யாழ்ப்பாணம், நவ. 23
அடுப்பில் தீ மூட்டும்போது மண்ணெண்ணெய் போத்தல் தவறி வீழ்ந்து தீ பற்றியதில் காயமடைந்த இளம் குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.
சம்பவம் துணுக்காயில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த விஷ்வககுசன் ராதிகா(வயது 19) என்ற ஒரு பிள்ளையின் தாயே உயிரிழந்துள்ளார்.
கடந்த 17 ஆம் திகதி அவர் காயமடைந்தார். மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக கடந்த 19 ஆம் திகதி யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் விசாரணை நடத்தி சடலத்தை ஒப்படைத்தார். (4,8)

## தெல்லிப்பழை மருத்துவமனைக்கு வாகனம், பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குப் புதிய நோயாளர் காவு வண்டியும் மருத்துவ உபகரணங்களும் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.
ஐரோப்பிய யூனியனின் நிதிப் பங்களிப்பில் யுனிசெவ் நிறுவனம் ஊடாக இவை வழங்கப்பட்டன.
நோயாளர் காவு வண்டி 10 மில்லியன் ரூபா பெறுமதியானது. உபகரணங்கள் 46 மில்லியன் ரூபா பெறுமதியானவை.
இந்தப் பொருள்களுக்கான இறக்குமதி வரியை வடக்கு மாகாண சுகாதார அமைச்சு செலுத்தியது. சிசுக்களுக்கான உயிர்காப்பு கருவிகளும் அந்தப் பொருள்களில் அடங்குகின்றன.
இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு வடக்கு



மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன், யுனிசெப்பின் வடக்கு மாகாண தலைமை அதிகாரி ந.சுதர்மன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் சி.திருவாகரன், மருத்துவமனை அத்தியட்சகர், மருத்துவர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர். (4,105)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இப்படியும் ஏன் சிந்திக்கக்கூடாது?

இலங்கையில் அதிகாரத்திலிருந்த ஆட்சியை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலைத்தமை அரசமைப்புக்கு உட்பட்ட செயலா? இல்லையா? என்கிற நீதிமன்றத் தீர்ப்பு எதிர்வரும் 7ஆம் திகதி வரும் வரைக்கும் அரசியல் குழப்பங்கள் கொழும்பில் ஓய்வுக்கு வரும் அறிகுறிகள் எவையும் தென்படவில்லை. கிளித்தட்டு மறித்தது போன்று மாறி மாறி ஒருதரப்பை மறு தரப்பு இயங்கவிடாமல் செய்து இக்கட்டு நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் ஏதாவது ஒரு தரப்பு இறங்கிச் செல்லும் நிலையை ஏற்படுத்த முடியுமா? என்று முயன்று கொண்டிருக்கின்றன.

அதன் ஒரு கட்டமாக அரச தலைவரால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெறத் தவறிய மகிந்த ராஜபக்சவின் தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கான நிதியை முடக்குவதற்கான தீர்மானவரைவு ஒன்று ஏற்கனவே நாடாளுமன்றத்துக்கு நகர்த்தப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து தற்போது ஏனைய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்தும் தீர்மான வரைவும் நேற்று நாடாளுமன்றச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நள்ளிரவுச் சூழ்ச்சி மூலம் தமது ஆட்சியைக் கலைத்த மகிந்தவின் ஆட்சியை நிதி முடக்கத்தின் மூலமாகச் செயற்படவிடாமல் தடுத்து நெருக்கடியை உருவாக்குவதன்மூலம் மீண்டும் நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிரூபிக்க ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகின்றது.

இதற்கொரு காரணமும் இருக்கின்றது. ஆட்சியமைப்பதற்குத் தேவையான 113 ஆசனங்களின் ஆதரவு இல்லை என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னால் உள்ள சிக்கல். ஆனால், மகிந்தவை எதிர்ப்பதற்கு அதனிடம் 120 ஆசனங்களுக்கும் மேலான ஆதரவு இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் மகிந்தவை எதிர்ப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்குத் தயக்கம் காட்டவில்லை. ஆனால் ஐ.தே.க. ஆட்சியமைப்பதற்கு ஜே.வி.பி. ஆதரவளிக்க முடியாது என்று அறிவித்துவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, கடந்த மூன்று வருடங்களில் தமிழர்களுக்காக எதையுமே செய்யாத ரணிலுக்கு ஆதரவளித்துவிட்டுத் தமிழ் மக்களை எப்படி எதிர்கொள்வது என்கிற திரிசங்கு நிலையில் தள்ளாடுகின்றது.

எனவே மகிந்தவுக்கான எதிர்ப்பை மீண்டும் மீண்டும் வெளிக்காட்டுவதன் மூலம்தான் தனக்குப் பெரும்பான்மை இருப்பதாக ஐ.தே.கவால் வெளிப்படுத்த முடியும். அதனால் மகிந்த ஆட்சியின் செயல்பாடுகளை முடக்கும் வகையிலான தீர்மானங்களை ஒவ்வொன்றாகத் தேடியெடுத்து அது அடுத்தடுத்துக் கொண்டுவரும் என்பது திண்ணம்.

இந்த இரு தரப்பினரதும் கிளித்தட்டு விளையாட்டில் நாடு கெட்டுக் குட்டிச்சுவராவது குறித்து இவர்கள் யாருக்கும் கவலை இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இந்த விவகாரம் இப்போதைக்கு முடிவடையும் என்றும் எதிர்பார்க்க முடியாது. இத்தகையதொரு நிலையில் சுதந்திரக்கட்சி மற்றும் ஐ.தே.கட்சி தவிர்ந்த ஏனைய சிறு கட்சிகள் அனைத்தும் இணைந்து புதியதோர் ஆட்சியை நிறுவுவது குறித்து ஏன் சிந்திக்கக்கூடாது? அத்தகைய ஆட்சிக்கு குறித்த இரு கட்சிகளில் ஏதாவது ஒன்றின் ஆதரவைக் கேட்டுப்பெறுவதன் மூலம் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்து அடுத்து வரும் ஒன்றரை வருட காலத்துக்கு உண்மையான மாற்று ஆட்சி ஒன்றை நிறுவுவது குறித்துச் சிந்திக்க வேண்டும், அதிலும் குறிப்பாகத் தமிழ், முஸ்லிம் தலைவர் ஒருவரின் தலைமையில் ஆட்சியை ஏன் அமைக்கக்கூடாது? அதற்கான வரலாற்று வாய்ப்பாக ஏன் இதனை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பன குறித்துச் சகல அரசியல் தரப்புகளும் சிந்திக்க வேண்டும். இந்தச் சிக்கலைச் சுமுகமாகக் கையாள்வதற்கான வாய்ப்பை அது வழங்கக்கூடும்.



# நாடும் வீடும் படும்பாடு!

## மக்கள் பங்களிக்கின்ற நேரடி ஜனநாயகம் குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டும்

செ. உமாசுதன்

ஜனநாயக நாடு என்று உலகப் பொதுமையுள் மார்தட்டிக்கொள்கின்ற இலங்கை எப்போதும் போல அதிகார மேலாண்மையின்பால் நின்று, ஒப்புரவற்ற சாக்கடை அரசியல் சலங்கையைக் கட்டிக்கொண்டு ஊழித் தாண்டவம் ஆடத் தொடங்கியுள்ளது. சட்டவாக்கச் செயற்பாட்டை முழுமையாகக் கொண்டுள்ள சட்டத்துறையும், சட்டங்களை நடைமுறை செய்கின்ற நிர்வாகத் துறையும், மறைமுக ஜனநாயகமாக அந்தரிக்கின்ற, வினைத்திறனற்ற கட்சிகளின் தொழிற்பாடும், மக்கள் நலன் சார்ந்த செயலூக்கம் இன்றி அங்கலாய்த்து நிற்கின்றன. இதன்வழிப்பட்டு நாடும் வீடும் பெரும் பாடுகள் சுமந்து, தூய ஜனநாயகம் இன்றித் தத்தளிக்கின்றன.

### மக்களின் மனம் அறியாத ஜனநாயகம்

உண்மையில் நாட்டில் உள்ள குடிமக்கள், அரசியல் திட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கும், சட்ட உருவாக்கத்தில் பங்கு பற்றுவதற்கும் பயன்படுத்துகின்ற 'தொடக்க உரிமை' மறுப்பும், அதுபற்றிய அறிவும், தெளிவும் இன்றிய நிலையின் வெளிப்பாடுதான் நாட்டின் இன்றைய நிலைக்கும், இந்த நிலையைப்போன்று மக்கள் எதிர் நோக்குகின்ற ஜனநாயகத்தை மழுங்கடிக்கின்ற இன்னம்பவற்றுக்குக் காரணமோ என எண்ணத் தோன்றுகிறது. அதுவிதமே தேர்தல் மூலம் தெரிவு செய்த பிரதிநிதியைப் பதவியில் இருந்து விலகும்படி அல்லது அவரது காலம் முடிவடைவதற்கு முன்பாக மீண்டும் தேர்தல் நடத்தும் படி மக்கள் கோரிக்கை முன்வைக்கலாம். 'திருப்பியழைத்தல்' என்று குறித்துரைக்கப்படும் இந்த உரிமையின் ஊடே, வாக்காளர்கள் தமது பிரதிநிதியின் செயற்பாடு தமது விருப்புக்கு மாறாக உள்ளது என எண்ணும் போது அவரைப் பதவியில் இருந்து விலகும்படி கட்டாயப்படுத்தலாம் என்பதையும் இந்த இடத்தில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### ஜனநாயகம் பற்றிய தெளிவற்றவர்கள்

இந்த நிலையிலே இலங்கையிலுள்ள சிறுபான்மையினரும், விதிவிலக்காக இலங்கையின் குடிமக்களாகப் பெரும்பான்மையினர் என்று கூறித் தங்களை அடையாளத்துவம் கொள்கின்ற சிங்கள மக்களும் ஜனநாயகம் என்றால் என்ன என்பது பற்றித் தெளிவு பெற வேண்டியவர்களாக உள்ளனர். சமூகப் பொதுமையுள் அறிஞர்கள் என்று குறித்துரைக்கப்படுகின்றவர்கள் பட்டறிவின் நிலையுள் இருந்து வெளிப்படுத்தியுள்ள வரையறைகளின் வழி, பகுத்தறிவோடு இந்தத் தெளிவைப் பெற முயற்சிக்க வேண்டும். குறிப்பாக ஆபிரகாம் லிங்கன் சுட்டுவது போன்று ஜனநாயகமானது, 'மக்களுடைய, மக்களிலாலான, மக்களுக்கான அரசாக' இருக்க வேண்டும். அதேபோன்று டைசி எடுத்துரைக்கும் படியான ஒரு அரச முறைமையாக, 'அரசை ஆளும் அதிகாரம் சட்டரீதியாக சமூகத்திலுள்ள எல்லா அங்கத்தவர்களிடமும் முழுமையாக கையளிக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட வர்க்கம் அல்லது வர்க்கங்களிடம் ஆளும் அதிகாரம் வழங்கப்படாது இருக்க வேண்டும். அடக்குமுறை மேலாதிக்கத்தையும், இனப் பாகுபாட்டையும், உரித்துடையவர்களுக்கான உரிமை மறுப்பையும் ஆதாரபூர்வமாகச் செய்து வருகின்ற இலங்கை அரச கட்டமைப்பிலும் இந்த மாற்றத்தைக் கண்டுகொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதை யாரும் மறுப்பதற்கில்லை.

### தமிழ்த் தலைவர்களின் பட்டறிவுகூடப் பயன்படவில்லை

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளைப் பூர்வீகத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களின் 60 வருடகால உரிமை மீட்புப் போராட்டக் களம் பல்வேறுபட்ட அனுபவப் பட்டறிவுகளைத் தந்துள்ளது. அறவழி, ஆயுத வழிமுறைப் போராட்டங்கள் உரிமை வேட்கையையும், இன விடுதலை உணர்வையும் தியாகத்தின் வழி ஒருமுகப்படுத்திச் சுதந்திரத்துக்கான வழிநடத்தலை ஆத்மார்த்தமாகத் தந்தபோதிலும், ஜனநாயக நீரோட்ட (தமிழ் அரசியல் பிரதி நிதித்து வங்கள்) வழிமுறைகள் தமிழ் மக்களுக்கான பொருத்தமான வழிநடத்தலை இதுவரைத் தந்துகொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் ஜனநாயக நீரோட்டத்தின் ஆரம்பங்களின் வழி முளைவிட்டுத் தற்போது முதிர்ச்சி நிலை பெற்றுள்ளது என்று கருதப்படக்கூடிய அரசியல் 'ஞான' நிலைகள் கூட நிதானமின்றி அந்தரித்துக்கொண்டே தான் இருக்கின்றன. தமிழர்களை வழிநடத்திய அற, ஆயுத வழிமுறைப் போராட்டங்கள் என்கின்ற உயரிய தியாகங்களில் குளிர்காய்கின்ற, அதன் மீது சாய்ந்துகொண்டு ஓய்வெடுக்கின்ற, ஒன்றிலிருந்து இன்னொன்றாகப் பிரிகின்ற, ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவுகின்ற நடத்தைக் கோலங்களையே வெளிப்படுத்தி நிற்கின்றன.



### மக்களின் எழுச்சியாலேயே ஜனநாயகம் சாத்தியம்

மேற்குறிப்பிட்டவற்றைத் தமிழ் மக்களில் எவரும் மறுத்துரைப்பதற்கில்லை

என்பது சமூகப் பிரதிபலிப்பாக இருக்கிறது. எனவே, டைசி குறிப்பிட்ட மாற்றங்களைக் கண்டுகொள்ள வேண்டுமெனில், அது மக்களால் மட்டுமே சாத்தியமானதொன்றாகும். அவ்வாறெனில் மக்கள்ஒருமித்தசிந்தனையோடு எழுச்சிபெற வேண்டும்! தியாக தீபம் திலீபன் மொழிந்தது போல 'மக்கள் புரட்சி' ஒன்று நிகழ வேண்டும்! இது சாத்தியமா? சாத்தியமாக வேண்டும். ஏனெனில் ஜனநாயகம் என்பது இறுதியானதும், ஆரம்பமானதுமான அதிகாரத்தை மக்களிடமே கொண்டுள்ளது. ஜனநாயகத்தில் குறிப்பிட்ட வர்க்கமோ அல்லது வர்க்கங்களோ முதன்மை யானதாகக் கருதப்படக்கூடியன அல்ல. முழுச் சமூக அமைப்பும் ஜனநாயகத்தில் மிகவும் உயர்ந்த நிலையிலேயே இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். இலங்கையின் இன்றைய அரசியல் கள நிலவரங்கள் இந்த அறிவுரையையே எடுத்தியம்பி நிற்கின்றன.



**நல்லாட்சி நாறிப்போயுள்ளது அரசமைப்பிலும் வழுக்கள்**

தமிழ் மக்களைக் கொன்றொழித்த, இனப்படுகொலைகள் கேட்பாரின்றி நடந்தேறிய 2009ஆம் ஆண்டுகளின் பின்பான காலத்தின் நல்லிணக்கக் கரங்களும், நல்லாட்சி வடிவங்களும் சிதைவடைந்துள்ளன. தமிழ் மக்களுக்குத் தீர்வு என்ற மாயை நம்பிக்கை இனிப்பைத் தந்த மைத்திரி மற்றும் ரணில் கூட்டின் எல்லைகளும் தகர்ந்து போயுள்ளன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட கொடுங்கோலன் என்று பல தரப்பினராலும் சித்திரிக்கப்பட்ட மகிந்தவை ஆட்சி அதிகாரத்தில் இருந்து கீழிறக்கிப் புதிய மாற்றத்தைக் காண்பதற்குத் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கான செயலுறுதி பிடிமானமற்றுப் போயுள்ளது. அரசமைப்பின் புதிய மாதிரியான (19ஆவது சட்டத்திருத்தம்) திருத்தங்களில் தன்னிச்சை மாற்றங்களுக்கான அடிகள் வெளித்துருத்தி நின்று வழுவோடும், பிழைகூறலோடும் அரச மேலாண்மைகளை வழிநடத்தி நடத்தைப் பிறழ்வுகளை அதிகமாகத் தந்துள்ளது.

**அரசமைப்புக்கு முரணான செயலும் நாடாளுமன்ற ஜனநாயக மீறலும்**

அரசமைப்புக்கு முரணான விதத்தில் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி, மகிந்த ராஜபக்சவை மைத்திரிபால சிறிசேன தலைமைஅமைச்சராகநியமித்துள்ளார். ஆனாலும் பதவி நீக்கத்தை ஏற்க மறுத்து ரணில் விக்கிரமசிங்க தானே தலைமை அமைச்சர் என்று கூறி வருகிறார். இதனிடையே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது திணறி வரும் மகிந்த ராஜபக்ச, திட்டமிட்ட முறையில் நாடாளுமன்றச் செயற்பாடுகளைக் குழப்பி வருகிறார். அரச தலைவரைக் கைப் பொம்மையாக்கிக் காரியங்களை ஆற்றி வருகிறார். குறிப்பாக நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளும் விதமாக அரசிதழ் வெளியீட்டை மேற்கொள்ளச் செய்து, ஜனவரி மாதத் தொடக்கத்தில் தேர்தலை நடத்துவதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருந்தபோதும் உயர் நீதிமன்று அதற்கு இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியுள்ளது. கடந்த வாரத்தில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவும், அவரது அரசுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கெண்டுவரப்பட்டு அவை நிறை வேற்றப்பட்டுள்ளன. ஆனாலும் முடிவு என்பது இதுவரை கண்டுகொள்ளப்படவில்லை. தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியின் பின்பான ஒவ்வோர் நாடாளுமன்ற அமர்வுகளின் போதும் கலகங்களும், கூச்சல் குழப்பங்களும், கையில் கிடைக்கின்ற பொருள்களை வீசி எறிகின்ற முரட்டுத் தனமும் உறுப்பினர்களின் விசேடத்துவமான கீழ்மைக் குணங்களாக வெளிப்பட்டு நிற்கின்றன.

தவிர அரசமைப்புக்கு ஒவ்வாத விதமாக உருவாக்கப்பட்டுள்ள மைத்திரி-மகிந்த கூட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வழி பெரும்பான்மையை நிரூபித்துள்ள ரணில் தரப்பின் நிலைப்பாட்டை ஏற்க மறுத்துள்ளது. சபாநாயகரின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சிக்கின்றனர். சண்டித்தனம் புரிகின்றனர்.

**இலங்கை அரசின் இரைமீட்டல்களை உணர வேண்டும்**


இந்த நிலையிலே இலங்கையில் குடிகொண்டுள்ள ஜனநாயகம் என்பது சகிப்புத் தன்மையை முதன்மைப்படுத்துவதாகத் தெரியவில்லை. அதிலும் தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் சுதந்திரமும் சமத்துவமும் தீர்வின்றி அல்லாடிக்கொண்டே இருக்கிறது.

மக்கள் சம்மதம் இன்றிய தீர்மானங்களும், மக்கள் அபிப்பிராயம் இன்றிய, நீண்ட விவாதம் இன்றிய முடிவுகளும் வினைத்திற னற்றுச் சர்வாதிகார ஆட்சியின்பால் அடங்கியே தத்தளிக்கின்றது ஜனநாயகம். இது குறித்துத் தமிழர் பிரதிநிதித்துவங்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஐ.நா மனித உரிமைகள் சபையில் முன்மொழியப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசியல் தீர்வு சம்பந்தமான அறிக்கை சமர்ப்பிப்பு, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளை விடுவித்தல், காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்கான அலுவலகத்தின் செயற்றிறன், போர்க் குற்றங்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு அமைத்தல், பன்னாட்டு விசாரணைகளுக்கு அரசை வழிப்படுத்தல் என ஒப்புக்குக் கதையாடிக் கொண்டும், பன்னாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து இது குறித்து மீண்டும் மீண்டும் இரைமீட்டிக் கொண்டும் இருப்பதால் எந்தவித பலனும் கிடைத்துவிடப் போவதில்லை என்பதை ஆத்மார்த்தமாக உணர்ந்துகொள்ள இவர்கள் தலைப்பட வேண்டும். தற்போதுள்ள மறைமுக ஜனநாயகத்தின் மக்கள் பிரதிநிதிகளாக எந்தவிதத்தில் தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பது தொடர்பில் ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வேண்டும். மாறாகக் கதிரைச் சூட்டில் ஆசுவாசம் கொண்டு அதிகாரங்களிடம் மண்டியிட்டுக் காலத்தைக் கடத்த முயற்சிக்கக்கூடாது.

**தமிழ்மக்களின் பொறுமையின் அருமையை உணரவேண்டும்**

தமிழ் மக்கள் கொண்டுள்ள பொறுமையின் அருமைத் தன்மை பற்றி அறிந்துகொண்டவர்களாகப் பணி செய்யத் தலைப்பட வேண்டும். இல்லையேல் நவீன ஆபிரிக்காவில் ஓரளவுக்காவது காணப்படுவதாகச் சொல்லப்படுகின்ற நேரடி ஜனநாயகம் குறித்து மக்கள் சிந்திக்கத் தலைப்படுவர். மக்கள் நேரடியாக அரசியலில் பங்குகொண்டு சமூக அபிவிருத்தி குறித்தும், தமிழர்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் குறித்தும் திட்டமிடல்களை மேற்கொண்டு அதன்வழி பயணிக்க எத்தணிப்பர். மக்கள் விருப்பையும், கட்டுப்பாட்டையும் கொண்டிருக்காத பிரதிநிதித்துவங்களையும், தற்போதுள்ள கீழ்த்தரமான அரச நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராடுவதற்குக் கிளர்ந்தெழுவர் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

தமிழ் மக்களைக் கொன்றொழித்த, இனப்படுகொலைகள் கேட்பாரின்றி நடந்தேறிய 2009ஆம் ஆண்டுகளின் பின்பான காலத்தின் நல்லிணக்கக் கரங்களும், நல்லாட்சி வடிவங்களும் சிதைவடைந்துள்ளன. தமிழ் மக்களுக்குத் தீர்வு என்ற மாயை நம்பிக்கை இனிப்பைத் தந்த மைத்திரி மற்றும் ரணில் கூட்டின் எல்லைகளும் தகர்ந்து போயுள்ளன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட கொடுங்கோலன் என்று பல தரப்பினராலும் சித்தி ரிக்கப்பட்ட மகிந்தவை ஆட்சி அதிகாரத்தில் இருந்து கீழிறக்கிப் புதிய மாற்றத்தைக் காண்பதற்குத் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கான செயலுறுதி பிடிமானமற்றுப் போயுள்ளது.



## ஆசிரியருக்கான கடிதம்


# மிருக நேயத்தை வதைத்தல்

யாழ்ப்பாணம்-பண்ணைப் பகுதியில் உள்ள இறைச்சிக் கடைகளில் கொல்லப்பட்ட விலங்குகளின் உடல்களை அவ்வாறே தொங்கவிட்டுக் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த வழியால் செல்லும் கொல்லாமையை விரும்புவோருக்கு இந்தக் காட்சி மனச் சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. எனவே வீதியால் செல்வோருக்குத் தெரியாதவாறு இந்த இறைச்சிக் கடைகளை மறைப்பு இடுதல் நாகரிகமாகும். குறிப்பாக நயினாதீவு அம்மன் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களுக்கு மாட்டு இறைச்சியின் தரிசனம் பண்ணை வீதியில் உள்ளமை மிகவும் வேதனைக்குரியது. உரியவர்கள் மனித நேயத்துடன் செயற்படுவது அவசியமாகும். மாமிசம் உண்பவர்களுக்கு அவற்றைக் காட்சிப்படுத்தியிருப்பது மற்றவர்களைப் பாதிக்கச் செய்வதாக அமைகின்றது. வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் காட்சிப்படுத்தக்கூடிய விதத்தில் விற்பனையாளர்கள் செயலாற்றுவது சிறந்ததாகும். அனைத்து மக்களும் பயணிக்கின்ற வீதிக்கு அமைவாக இறைச்சிக்கடைகள் அமைப்பதைத் தவிர்க்க வேண்டும் அல்லது அவை அனைவருடைய பார்வைக்கும் எட்டாதவாறு மறைப்பிடுதல் வேண்டும். வீதியால் செல்பவர்களுக்குக் காட்சிப்படுத்தல் என்பது ஒரு வகை வதையே. மற்றவர்களைப் புண்படுத்தும் இந்த நாகரிகம் தவிர்க்கப்பட வேண்டும். இது குறித்து யாழ்ப்பாண மாநகர சபையும் உரிய மறைப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

***மருத்துவர் சி.யமுனாநந்தா.***

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



குவாட்டமலா நீதிமன்றம் தீர்ப்பு

# 171 கொலைகளைச் செய்த இராணுவச் சிப்பாய்க்கு 5 ஆயிரத்து 160 ஆண்டுகள் சிறை

குவாட்டமலா சிற்றி.நவ.23

குவாட்டமலா நாட்டில் 1982ஆம் ஆண்டு ஒரு கிராமத்திலுள்ள 171பேர் சாகடிக்கப்பட்டனர். இந்த வழக்கில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு 5 ஆயிரத்து 160 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து குவாட்டமலா சிற்றி நீதி மன்றம் நேற்றைய தினம் தீர்ப்பளித்துள்ளது.

36 ஆண்டுகள் நடந்த குவாட்டமாலவின் உள்நாட்டுப் போரில் 2இலட்சம் மக்கள் சாவடைந்தனர். 1996ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. இந்தப் படுகொலையில் ஈடுபட்ட இராணுவத்தினரில் முக்கியமானவர் முன்னாள் இராணுவச்சிப்பாய் சான்டோலோபஸ். இவர் மீது 171பேரைக் கொலை செய்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. முன்னாள் இராணுவச் சிப்பாய் சான்டோ லோபஸ். அமெரிக்க இராணுவத்தில் பயிற்சி பெற்றவர். உள்நாட்டுப் போரைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட 'கைபில்' பிரிவைச் சேர்ந்தவர். உள்நாட்டுப் போர் முடிந்த பின் அமெரிக்காவில் பதுங்கி இருந்த சான்டோ லோபஸ் கைது செய்யப்பட்டு குவாட்டமாலவுக்கு நாடு கடத்தப்பட்டு அவர் மீது வழக்கு நடந்து வந்தது. இந்த வழக்கில் கவுதமேலா சிட்டி நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது. அதில், 171 பேரைக் கொலை செய்த சான்டோ லோப ஸுக்கு ஒவ்வொருவரையும் கொலை செய்தமைக்காக தலா 30 ஆண்டுகள் வீதம் 5ஆயிரத்து 130 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், குழந்தைகளை இரக்கமின்றிக் கொன்றதற்காகக் கூடுதலாக 30 ஆண்டுகளும் என எல்லாமாக 5 ஆயிரத்து 160 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த நாட்டுச் சட்டப்படி அதிக பட்சமாக ஒருவருக்கு 50 ஆண்டுகள் மட்டுமே சிறைத்தண்டனை விதிக்க முடியும் என்ற நிலையில், முதல் முறையாகப் மிகப்பெரிய அளவில் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

மத்திய அமெரிக்காவில் மெக்சிகோ நாட்டுக்குத் தென் பகுதியில் அமைந்துள்ள சிறிய நாடு குவாட்டமலா. அங்கு உள்நாட்டுப் போர் நடந்து வந்தது. 1982ஆம் ஆண்டில் அந்த நாட்டின் சர்வாதிகாரி எப்ரெயின் ரியாஸ் மான்ட் ஆட்சியில் இருந்தபோது உள்நாட்டுப் போர் உச்சத்தை அடைந்தது. எக்ஸில் மாயா இனத்தவர்களைக் கொன்று குவிப்பதற்குச் சர்வாதிகாரி எப்ரெயின் ரியாஸ் மான்ட் உத்தரவிட்டார். 1982ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டாஸ் எரிஸ் எனும் நகரில் கொரில்லாக்கள் பதுங்கியிருப்பதாக இராணுவத்துக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அங்கு சென்றவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஏனென்றால், சில நாள்களுக்கு முன் இராணுவத்தினர் 19 பேரைக் கொன்று அவர்களின் ஆயுதங்களைக் கொரில்லாப் படையினர் எடுத்துச் சென்றிருந்தனர். இதனால், இராணுவத்தினர் கடும் ஆத்திரத்தில் இருந்தனர்.

கொரில்லாக்கள் பற்றிய விவரத்தை டாஸ் எரிஸ் நகர மக்கள் வெளியிடாத காரணத்தால், அந்த நகர வீடுகளில் இருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் என அனைவரையும் வெளியே இழுத்து வந்து இராணுவத்தினர் சுட்டுச் சாகடித்தனர்.


மேலும் சாகடிக்கமுன் பெண்களையும், சிறுமிகளையும் வன்புணர்வு செய்து சிதைத்த னர். இந்தச் சம்பவத்தில் 201 பேர் கொல்லப்பட்டனர். நாட்டின் சர்வாதிகாரியான எப்ரெயின் ரியாஸ் மான்ட் மீது இனப்படுகொலைக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்து வந்த நிலையில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் சாவடைந்தார்.

# பிளாஸ்ரிக்கின்

## உள்ளெடுத்ததால் அதிர்ச்சியில் உறைந்த

ஜகார்த்தா.நவ.23

பிளாஸ்ரிக்கின் அன்றாடப் பயன்பாடு அ
ரித்து விட்டது. இலகுவில் அழிந்தபோக
(உக்காத அல்லது மக்கிப் போகாத) இந்தப் பிளா
ரிக் பாவனையால் விளைகின்ற நன்மைகளு
தீமைகளும் பலவாக இருக்கின்றன. பகுத்த
வுள்ள மனித இனத்துக்கு இந்தப் பிளாஸ்ரிக்கி
பக்கவிளைவுகளை எதிர்நோக்கவேண்டியிரு
பதில் சிறிதளவேனும் பாதிப்புக் குறைவாக இரு
பினும் இதன் மூலமான பாதிப்பு என்பது தவிர்க
முடியாததுவே. இந்தநிலையில்தான் கிட்டத்த
6கிலோ நிறைகொண்ட பிளாஸ்ரிக் கழிவுகள
உட்கொண்டதாகக் கருதப்படுகின்ற திமிங்கில
ஒன்று இந்தோனேசியாவின் வகாடோபி என்சி
தேசியப் பூங்காவில் கரை ஒதுங்கியிருக்கிறது





இந்தோனேசியாவின் சுலா வெசி மாகாணத்தில் உள்ளது வகா டோபி தேசியப் பூங்கா. இங்குள்ள கடற்கரையில் கடந்த திங்கட் கிழமை எண்ணெய்த் திமிங்கலம் (ஸ்பெர்ம் வேல்) ஒன்று இறந்து கரை ஒதுங்கியுள்ளது. அது 31அடி நீளம் இருந்தது. அந்த திமிங்கலத்தைச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆய்வு செய்தனர். அப்போது, திமிங்கலத்தின் வயிற்றுக்குள் 115 பிளாஸ்ரிக் கப், 25 பிளாஸ்ரிக் பை, பிளாஸ்டிக் போத்தல்கள், கிழிந்த தார்ப் பாய்த் துண்டுகள், பாதணிகள் போன்ற குப்பைகள் கிடந்தன. எல்லாமாக 6 கிலோ வரையான பிளாஸ்ரிக் கழிவுகள் இருந்ததைப் பார்த்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# 'இன்ரெர்போலின்' புதிய தலைவராக தென் கொரியாவைச் சேர்ந்த கிம் ஜோங்யாங்




சியோல்.நவ.23

பிரான்ஸ்சைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பன்னாட்டுக் குற்றவாளிகளைக் கண்டறிந்து கைது செய்வதற்கான பொலிஸ் அமைப்பான 'இன்ரெர்போலின்' புதிய தலைவராகத் தென் கொரியாவைச் சேர்ந்த கிம் ஜோங்யாங் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 'இன்டெர்போல்' அமைப்பின் 194 உறுப்பு நாடுகளின் வருடாந்தக் கூட்டம் துபாயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இன்டெர்போல் தலைவராக, தற்போது அதன் இடைக்காலத் தலைவராக இருக்கும் கிம் ஜோங்யாங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போது 'இன்டெர்போல்' துணைத் தலைவராக இருக்கும் ரஷ்யாவை சேர்ந்த அலெக்சாண்டர் ப்ரோகோப்சுக், தலைவர் பதவிக்குப் போட்டியிட்டிருந்தார். என்றாலும் ரஷ்ய அதிபர் புடினை விமர்சிப்பவர்களுக்கு எதிராக இவர் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தக் கூடும் என்று மேற்கத்திய நாடுகள் அச்சம் தெரிவித்தன. இந்த நிலையில் மேற்கத்திய நாடுகள் மற்றும் அமெரிக்கா ஆதரவுடன் கிம் ஜோங்யாங் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இன்டெர்போலின் தலைவராக இருந்த மெங் ஹாங்வே கடந்த செப்டம்பர் மாதம் தனது தாய் நாடான சீனா சென்றிருந்தபோது, அங்கு காணாமல்போனார்.

பிறகு ஊழல் மோசடி முறைப்பாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடம் விசாரணை நடந்து வருவதாகவும் சீனா கூறியது. இந்த நிலையில் மெங் ஹாங்வேயின் எஞ்சிய பதவிக்காலமான 2ஆண்டுகளுக்கு (2020ஆம் ஆண்டு வரை) கிம் ஜோங்யாங் பதவி வகிப்பார்.

பீஜிங்.ந
சீனாவி
வந்தம



# ின் ஆபத்தை அறிவீர்!

## தால் உயிரிழந்தது திமிங்கலம்
## ந்தனர் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்



டு அதிக
போகாத
் பிளாஸ்
மைகளும்
பகுத்தறி
ஸ்ரிக்கின்
னடியிருப்
ாக இருப்
தவிர்க்க
ட்டத்தட்ட
ிவுகளை
ிங்கிலம்
ி என்கிற
க்கிறது.




திமிங்கிலத்தின் இறப்புக்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் உறுதிபடத் தெரிவிக்கின்றனர். அதிர்ச்சி அடைந்துள்ள அவர்கள் கடலில் பிளாஸ்ரிக் கழிகள் சேருவதைத் தடுப்பதற்கு உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர். இதுகுறித்து கடல்வாழ் உயிரினங்கள் பாதுகாப்பு அமைப்பான 'டபிள்யூ. 10டபிள்யூ.எவ். இந்தோனேசியா' வைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர் திவி சுப்ரப்தி கூறும்போது, "திமிங்கலத்தின் இறப்புக்குப் பிளாஸ்ரிக் கழிவுகளும் காரணமாக இருக்கலாம்"





என்றிருக்கிறார்.

கடலில் பிளாஸ்ரிக் கழிவுகள், குப்பைகள் கொட்டப்படுவதைத் தடுப்பதற்கு இந்தோனேசிய அரசு உடனடியாகக் கடும் நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தி உள்ளனர். சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தோனேசியாதான் கடலில் அதிக குப்பைகளைக் கொட்டும் நாடாக இருக்கிறது. இதனால் 'குப்பை அவசர நிலை'யை கடந்த ஆண்டு இந்தோனேசிய அரசு அறிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்தத் திமிங்கில இறப்பிலிருந்து ஏனைய உலக நாடுகளும் பிளாஸ்ரிக்கைக் கடலில் கொட்டுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள்.



# பெற்றோல் பாரவூர்தி தீப்பிடித்ததில் 6 பேர் சாவு

ஹனோய்.நவ.23

வியட்நாமில் பெட்றோல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று திடீரெனத் தீப்பிடித்து, அருகில் உள்ள வீடுகளையும் தீக்கிரையாக்கியுள்ளது. இதில் 6 பேர் சாவடைந்துள்ளனர்.

வியட்நாம் நாட்டின் தெற்கு மாகாணமான பின் புவோக் மாகாணத்திலுள்ள சோன் தான் மாவட்டத்தில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. பெற்றோல் நிரப்பிய பாரவூர்தி பயணித்துக் கொண்டிருக்கும்போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் தாறுமாறாக ஓடியுள்ளது. கற்கள் ஏற்றிவந்த மற்றொரு பாரவூர்தியுடன் மோதியுள்ளது. பின்னர் வீதியோரம் உள்ள மின்கம்பத்தில் இடித்ததில் குடைசாய்ந்தது. இதனால் அதில் இருந்த பெற்றோல் வீதியில் கொட்டித் தீப்பிடித்தது. இதன் காரணமாக வீதியோரத்தில் இருந்த 16 வீடுகள் தீப்பற்றி எரிந்தன. வீட்டுக்குள் தூங்கிகொண்டிருந்தவர்கள் அலறியடித்து வெளியேஓடிவந்தனர். சிலர் தீயில் சிக்கிக்கொண்டனர். பின்னர் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உள்ளிட்ட 6 பேர் சாவடைந்துள்ளனர். வியட்நாமில் இந்த ஆண்டில் முதல் 10 மாதங்களில் 3ஆயிரத்து 770 தீ விபத்துகள் மற்றும் வெடிவிபத்துகள் ஏற்பட்டுள்ளதாகவும், இதில் 91 பேர் உயிரிழந்ததாகவும் தீயணைப்புத்துறையினரின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

### கென்யாவில் சந்தைப் பகுதியில் துப்பாக்கிச்சூடு

# துப்பாக்கி முனையில் பெண் ஊழியர் கடத்தல்

நைரோபி.நவ.23

கென்யாவில் வணிக மையத்தில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 5 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் இத்தாலியைச் சேர்ந்த பெண் ஊழியரை துப்பாக்கிதாரிகள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளனர். ஆபிரிக்க நாடான கென்யாவில், கிலிப்பி நகரில் உள்ள ஒரு சந்தைத் தொகுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அங்கு நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி இரவு 8 மணிக்குத் துப்பாக்கி ஏந்திய இனம்தெரியாத நபர்கள் வந்தனர். அவர்கள், அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். இதில் 5 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களில் 3 பேர் குழந்தைகள். அவர்களைச் சுட்டு வீழ்த்திய அந்த நபர்கள், அங்கிருந்து 23வயதான ஒரு பெண்ணைத் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர். அந்தப் பெண், இத்தாலியைச் சேர்ந்தவர் என்றும், தொண்டு அமைப்பு ஒன்றில் சேர்ந்து பணியாற்றி வந்தார் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதின் பின்னணி என்ன, தாக்குதல் நடத்திய நபர்கள் யார் என்பது பற்றி உடனடியாக எதுவும் தெரியவரவில்லை. ஆனால் இதைப் பயங்கரவாதத் தாக்குதல் என்று கருதிப் பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.



# மாணவர்கள் மீது கார் மோதல் 5 மாணவர்கள் சாவு

பீஜிங்.நவ.23

சீனாவில் வீதியைக்கடந்த மாணவர்கள் மீது அதிவேகமாக வந்த மகிழுந்தி மோதியதில் 5 மாணவர்கள் சாவடைந்துள்ளனர். சீனாவின் வடகிழக்கு மாகாணமான லியோனிங் மாகாணத்தின் ஹூலுடாவ் நகரில் உள்ள ஆரம்பப்பள்ளியின் அருகிலேயே இந்தச்சம்பவம் நடந்துள்ளது. வழக்கம் போல் மாணவர்கள் பாடசாலைக்கு வந்துகொண்டிருந்தனர். அப்போது, எதிர்முனையில் இருந்து வந்த மாணவர்கள், பள்ளிக்கு வருவதற்காக வீதியைக் கடந்து வந்தனர். மாணவர்கள் வரிசையாக வீதியைக் கடந்தபோது, அந்த வழியாக அதிவேகமாக வந்த மகிழுந்து, மாணவர்கள் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட 5 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளனர்.




18 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தவறான பாதையில் மகிழுந்து வந்ததால் மாணவர்கள் மீது மோதியதாக கூறப்படுகிறது. மகிழுந்து ஓட்டுநர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.



# நவம்பர் 29இல் 2.0

சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் இயக்குநர் சங்கர் மிகவும் பிரமாண்டமாக இயக்கி வரும் திரைப்படம் '2.0'.
இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து ஒரு வருடமாகியுள்ள நிலையில், கிராப்பிக்ஸ் பணிகள் காரணமாக படத்தின் வெளியீட்டுத் திகதி தாமதமாவதாகப் படக்குழுவினர் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் பிரமாண்ட இயக்குநர் ஷங்கர், '2.0' படத்தின் வெளியீட்டுத் திகதியை அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார். இதன்படி '2.0' திரைப்படம் இம்மாதம் 29 'திகதி வெளியாகும் என்று அறிவித்துள்ளார்.



## வரவு – செலவுத் திட்ட வாசிப்பு

*சபாநாயகர் அவர்களே,*

- 2019 ஆம் ஆண்டில் மொத்த மிளகாய்த்தூள் உற்பத்தியை அதிகரிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.
- 'றெஸ்லிங்' விளையாட்டுக்கு ஒரு வருட வரி விலக்கு அளிக்கப்படும்.
- சொங்கோல் தூக்க முடியாத அளவுக்கு பாரமானதாக மறு சீரமைக்கப்படும்.
- அனைவருக்கும் அப்பம் இலவசமாக வழங்கப்படும்.
- சபா நாயகர் ஆசனத்தை சுற்றி மின்சார வேலி அமைக்கப்படும்.
- விதானைமார் அனைவரும் 'விதாயக' நிலைக்குப் பதவி உயர்த்தப்படுவர்.
- 'வடிவேல் நெகும' திட்டத்தின் கீழ் தவளைகள் சரணாலயம் உருவாக்கப்படும்.
- அரச வானொலியின் ஆறு மணிச் செய்தியில் இன்றைய தலைமை அமைச்சர் யார் என்பது பற்றிய அறிவிப்பு தினமும் அறியத்தரப்படும்.
- எறிதல் , தடுத்தல் மற்றும் உடைத்தல் அமைச்சு தலைமை அமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கொண்டு வரப்படும்.
- அண்டடேக்கரை சபா நாயகராக நியமிக்க குழு அமைக்கப்படும்.
- இறுதியாக அங்கொடை மருத்துவமனை, நாடாளுமன்றம் என்பவற்றுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.



நான் சிறிசேனா இல்லடா! புலிசேனா...!!

## நயவஞ்சகர் ஆட்சி

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின் ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திர கட்சியும் மாறி மாறி ஆட்சிக்கு வந்து இந்த நாட்டில் எதை உருப்படியாகச் செய்திருக்கிறார்கள்
பிரேமதாசா – குடும்ப ஆட்சி
பண்டாரநாயக்கா – குடும்ப ஆட்சி
ராஜபக்ச – குடும்ப ஆட்சி
கடந்த முப்பது வருட காலமாக இலங்கை பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையாமல் இருந்ததற்குக் காரணம் பயங்கரவாதம் என்று புழுகினார்கள். அதை சில நயவஞ்சகர்கூட்டமும் சரி என்றே வரலாறாக்கியது . ஆனால் தற்போது போர் முடிந்து 10 ஆண்டுகள் முடிவடைந்திருக்கிறது. இன்னும் பேரினவாதம், யார் ஆட்சி செய்வதென்ற போட்டியில் மல்லுக்கட்டி நிற்கிறது. இதற்கிடையில் எம்மில் பலரும் ரணில் நல்லவர் என்றும் மகிந்த நல்லவர் என்றும் கூப்பாடு போட்டே காலத்தை விழிப்பின்றி அழித்து வருகிறோம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | 8 | | 6 | |
| 7 | | | | | | | 1 | |
| | | 9 | | | | | | |
| | | | | | 1 | 5 | | 7 |
| | 6 | | | | 4 | | | |
| | | | | | | 6 | | 9 |
| | 2 | | | | | | 8 | 4 |
| | | | | 7 | | | | |
| | | 5 | | 4 | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 4 | 6 | 2 | 1 | 9 | 5 | 3 |
| 9 | 5 | 1 | 3 | 4 | 8 | 2 | 6 | 7 |
| 2 | 3 | 6 | 9 | 5 | 7 | 8 | 1 | 4 |
| 4 | 2 | 3 | 8 | 6 | 9 | 1 | 7 | 5 |
| 5 | 6 | 9 | 7 | 1 | 2 | 4 | 3 | 8 |
| 7 | 1 | 8 | 4 | 3 | 5 | 6 | 2 | 9 |
| 6 | 4 | 7 | 1 | 9 | 3 | 5 | 8 | 2 |
| 1 | 8 | 5 | 2 | 7 | 4 | 3 | 9 | 6 |
| 3 | 9 | 2 | 5 | 8 | 6 | 7 | 4 | 1 |

## சுடோக்கு

எண் விளையாட்டு

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்ட பணிகளை நிறைவேற்ற கூடுதல் முயற்சி தேவைப்படும். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதுமானதாகும்.

**இடபம்:** சிறு செயல் கூட பன் மடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் கவனத்துடன் பணிபுரிவீர்கள். இலக்கு நிறைவேறி மேலதிக பணவரவை பெற்றுத் தரும்.

**மிதுனம்:** செயல்களில் அன்பின் குணம் நிறைந்திருக்கும். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் பின்பற்றுவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**கடகம்:** சிலர் உதவுவது போல பாசாங்கு செய்வார். சொந்த உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் உள்ள தாமதம் படிப்படியாக சீராகும்.

**சிங்கம்:** சொந்த பிரச்னையை பிறரிடம் பேசவேண்டாம். கூடுதல் உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் இருந்த தாமதம் சரியாகும். பயன்தராத பொருள் வாங்க வேண்டாம்.

**கன்னி:** திட்டமிட்ட செயல் ஒன்றை நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் மனமுவந்து பாராட்டுவர். தொழில் வியாபார நடைமுறையில் இருந்த சிரமம் விலகும்.

**துலாம்:** சமயோசிதமாக செயல்படுவீர்கள். நல்ல விஷயங்களை பேசுவதில் ஆர்வம் வளரும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும்.

**விருச்சிகம்:** சுய தேவை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள்வீர்கள். இதனால் சிலரது அதிருப்திக்கு உட்பட நேரிடலாம். கவனம் தேவை.

**தனுசு:** புதியவர்களை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்திக்காக கூடுதல் மூலதனம் தேவைப்ப[illegible]. வெளியூர்ப் பயணத்தில் மாற்றம் ஏற்படும்.

**மகரம்:** நல்ல எண்ணத்தினால் செயல்களில் கூடுதல் நன்மை கிடைக்கும். நன்றி மறந்தவரை பெருந்தன்மையுடன் மன்னிப்பீர்கள்.

**கும்பம்:** செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். நிதானமும் அக்கறையும் அவசியம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**மீனம்:** குடும்ப பெரியவர்களின் சொல்லுக்கு மதிப்பு மரியாதையும் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள்.



நாட்டில ஆயிரம் பிரச்சினை நடந்துகிட்டு இருக்கு... நீ நயன்தாராவ நினைச்சு பிறந்த நாள் கொண்டாடிட்டு இருக்கா....

## சிரிக்க சிந்திக்க

1. உலகில் முதன் முதலில் 'தூள்ப் போர்' நடந்த நாடாளுமன்றம் எது?

   இலங்கை நாடாளுமன்றம்


2 .சபாநாயகருக்கு தண்ணீர் ஊற்றி வரவேற்கும் நிகழ்வு நடைபெற்றது?

   இலங்கை

3. நாடாளுமன்றத்தில் கத்தி என்[illegible] கதாயுதம் பயன்படுத்திய வீரன்யார்?

   தேவ மன்ன பெரும

## வழிகாட்டுவோம்





# மின்மினியும் குரங்குகளும்

ஒரு வனத்தில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன. அது ஒரு குளிர்காலம். குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை. "கொஞ்சம் நெருப்புக் கிடைத்தால் சருகுகளைப் போட்டுத் தீ மூட்டிக் குளிர் காயலாம்" என்று குரங்குகள் கூறின. நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்தபோது ஒரு மின்மினிப் பூச்சி 'பளிச் பளிச்' என்று மின்னியவாறு பறந்து சென்றது. இதனைக் கண்ட ஒரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது. மற்றக் குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூழங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சி மீது போட்டன.

பின்னர் நெருப்பு கொழுந்து விட்டு எரியும் என எதிர்பார்த்த எல்லாக் குரங்குகளும் குப்பையைச் சூழ அமர்ந்து கொண்டன.

ஆனால் குப்பையோ எரிவதாக இல்லை. இப்போது குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன. இந்தக் குரங்குகளின் கோமாளித் தனத்தைக் கவனித்துக் கொண்டிருந்த புறா ஒன்று 'கலகல' என்று சிரித்தபடி மரத்திலிருந்து இறங்கி வந்து தரையில் அமர்ந்தது. பின்னர் குரங்குகளை நோக்கி "நண்பர்களே! மின்மினிப் பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்டுவதற்கு வீண் முயற்சி எடுக்கிறீர்கள். நீங்கள் எப்படி வாயினால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிலிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையை விட்டு விடுங்கள்" என்று அறிவுரை கூறிற்று. "உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக் கொண்டு உன் வேலையைப் பார்" என்று கூறி விட்டுக் குரங்குகள் மறுபடியும் குப்பையை வாயால் ஊதி தீ உண்டாக்குவதற்கு முயற்சி செய்தன. குரங்குகளின் அறியாமையை எண்ணி மேலும் அவர்கள் மேல் இரக்கப்பட்டுத் திரும்பத் திரும்ப அவைகளுக்கு அறிவுரை கூறிக் கொண்டிருந்தது. புறாவின் இந்த அறிவுரைகள் குரங்குகளுக்கு மேலும் எரிச்சலை ஊட்டின. புறாவின் அறிவுரைகள் தமக்குப் பெரும் தொல்லை எனக் கருதிய குரங்குகள் கோபமுற்றுப் புறா மீது பாய்ந்து அதனைப் பிடித்துத் தரையில் மோதிக் கொன்று போட்டன.

**முட்டாள்களுக்குப் புத்தி கூறுவதிலும் பார்க்க மௌனமாக இருப்பதே மேல். நான்கு முட்டாள்கள் நடுவில் ஓர் அறிவாளியின் பேச்சுப் பயனற்றது.**

# சீனா





1. மிகப் பழமையான நாகரிகம்கொண்ட நாடு. கடந்த 20 ஆண்டுகளில் வேகமாக மாற்றங்களைச் சந்தித்த நாடும் இதுவே.
2. பட்டாசு, பட்டு, தேநீர், பட்டம், ஐஸ்கிறீம், காகிதம், காந்தத்தால் ஆன திசைகாட்டி போன்றவை இங்கே கண்டுபிடிக்கப்பட்டதால், 'கண்டுபிடிப்புகளின் நாடு' என்றும் அழைக்கப்பட்டது.
3. பரப்பளவில் உலகின் மூன்றாவது பெரிய நாடு. மக்கள் தொகையில் முதல் இடத்தில் இருக்கும் நாடு.
4. உலக அதிசயங்களில் ஒன்றான சீனப்பெருஞ்சுவர் இங்கே இருக்கிறது.
5. 1949ஆம் ஆண்டு பொதுவுடமைக் கட்சி வெற்றி பெற்று. மக்கள் குடியரசு நிறுவப்பட்டது.
6. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாகப் பொருளாதாரத்தில் உறுதித்தன்மை உடைய மிகப் பெரிய நாடு.
7. பாண்டா இந்த நாட்டின் தேசிய விலங்கு.
8. 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் இங்கு நடைபெற்றன.
9. இந்த நாட்டின் தேசத் தந்தை மா ஓ சேதுங்
10. கிழக்கு ஆசியாவிலுள்ள இந்த நாட்டின் மிகப் பெரிய நகரம் ஷாங்காய்.



# வெற்றி பெற சுலபமான வழிகள்

- முக்கியத்துவம் வாய்ந்த செயல்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- உடற்பயிற்சி செய்யுங்கள்.
- தேவையில்லாதபோது இணையம், கைபேசியைத் துண்டித்து விடுங்கள்.
- முடியாது என்ற பதிலைக் கனிவாகச் சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள்.
- அதிகாலையில் தூக்கத்திலிருந்து எழுவதற்கு முயற்சி செய்யுங்கள்.
- போதுமான அளவு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.
- பிறர் உங்களைப் பற்றிக் கூறும் குறைகளைக் காதில் போட்டுக் கொள்ளாதீர்கள்.
- தினமும் தியானப் பயிற்சியில் ஈடுபடுங்கள்.

# நரி மேற்கொண்ட சதி

ஒரு மரத்தின் அடியில் பழம் ஒன்று கிடந்தது. அதைச் சுவைத்த நரி "ஆகா! மாம்பழம் இவ்வளவு தித்திப்பாக இருக்கிறதே" என்று மகிழ்ந்து மரத்தை அண்ணாந்து பார்த்து அங்கு நிறையப் பழங்கள் இருப்பதைக் கண்டு மேலும் மகிழ்ந்தது. நரிக்கு அந்தப் பழங்களைச் சுவைக்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. அப்போது மரத்தில் ஒரு காகம் இருப்பதை அது அவதானித்தது.

நரிக்கு அதன் தந்திரப்புத்தி வேலை செய்தது. காகத்தைப் பார்த்து "தங்கம் போன்று பொன்னி றமாக இருக்கும் அன்புக் காகமே! நல்ல மயிலின் அழகும், குயிலின் குரலும் கொண்டு விளங்குகிறாயே" என்று தொடர்ந்து புகழ்ந்து தள்ளியது.

இதனைக் கேட்ட காகம் மகிழ்ந்து, "உத்தமமான குலத்தில் பிறந்திருப்பதால் உனக்கும் என் அருமை பெருமை எல்லாம் தெரிந்திருக்கிறது. பாவம் நடந்து வந்த களைப்பும் அயர்வும் உன் முகத்தில் தெரிகிறது. வயிறு நிறையப் பழங்களைச் சாப்பிடு" என்று சொல்லி மாம்பழங்களை நரிக்கும் கிடைக்கும்படி கொத்திக் கீழே போட்டது. நரியோ "இப்போது என்ன நாம் சொல்லிவிட்டோம். மயில், குயில் என்று புகழ்ந்து பேசினோம். அவ்வளவு தானே. அதற்கு எம்மை உத்தமகுலம். பசிக்கு மாம்பழம் என்று காகம் அமர்க்களப்படுத்திவிட்டதே" என்று எண்ணியவாறு அந்த மாம்பழங்களைச் சுவைத்துச் சாப்பிட்டது. *(இப்படித்தான் காரியம் ஆகக் காக்கா பிடிக்கிறார்கள் சிலர். ஆனால் இவையெல்லாம் நிரந்தரமான வெற்றியைத் தராது)*



# இடியும் மழையும்

கேள்வி கேட்டுப் பதில் பெறுவதில் சோக்ரட்டீஸ்க்கு விருப்பம் அதிகம். அவருடைய அணுகுமுறையாகவே அது இருந்தது. நண்பர்கள் கிடைத்தால் விடாமல் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பது அவரது பழக்கம். ஒருநாள் அவர் நண்பர் ஒருவருடன் வீட்டுவாயிற்படியில் நின்று நேரம் போவதே தெரியாமல் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார். அவரது மனைவி அவரை வீட்டுக்குள் வரும்படி கூச்சல் போட்டு அழைத்தார். அதையும் பொருட்படுத்தாமல் அவர் தன் நண்பருடன் பேசிக் கொண்டே இருந்தார்.

பொறுமையிழந்த மனைவி ஒரு வாளியில் தண்ணீரைக் கொண்டு வந்து அவருடைய தலையில் கொட்டினாள். நண்பர் திகைத்துப் போய் அவரைப் பார்த்தார். ஆனால் சோக்ரட்டீஸ் அப்போதும் பொறுமை இழக்காமல் சிரித்துக் கொண்டே "என்ன நண்பரே ஆச்சரியப்படுகிறீர்கள்? இடி இடித்த பின்னர் மழை பெய்வது தானே இயற்கை" என்றார்.

### ஓம் ஸ்ரீ சாயிராம்

# அமைதியையும் ஆனந்தத்தையும் நிலைநாட்டுவதற்காக உதித்தவர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா

இ.கணேசமூர்த்தி

*'பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம்*
*தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே'*

அ – 4, சு 8. பகவத் கீதை

"சாதுக்களை காப்பதற்கும் துஷ்டர்களை அழிப்பதற்கும் தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் யுகந்தோறும் வந்துதிப்பேன்" என்று கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் தனது அவதார நோக்கை வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னைய யுகங்களில் சாதுக்களும் துஷ்டர்களும் வெவ்வேறாக இருந்தார்கள். அப்போது துஷ்டர்களை அழித்துச் சாதுக்களைக் காப்பது இலகுவாக இருந்தது. இந்தக் கலியுகத்தில் ஒவ்வொருவருள்ளும் தர்மமும் அதர்மமும் கலந்திருப்பதால் எல்லோரையும் அழிக்கமுடியாது. என்பதால் எல்லோரையும் உன்னத மார்க்கத்தில் வாழவைக்கவேண்டியுள்ளது. இது இலகுவானதல்ல. இதற்குக் கிட்டத்தட்ட 300 வருடங்கள் எடுக்கும். ஆகவே பரபிரம்மம் மூன்றுள தடவை அடுத்தடுத்து அவதாரம் எடுக்கவேண்டியுள்ளது என்று பகவான் சத்திய சாயி பாபா கூறியுள்ளார். இதன்படி இரண்டு அவதாரங்கள் சீரடி சாயி பாபா. சத்திய சாயி பாபா நிகழ்ந்துவிட்டன. இன்னும் சில வருடங்களில் மூன்றாவது அவதாரமான பிரமேசாயி பாபா தன்னை வெளிப்டுத்துவாரெனவும் பகவான் சத்திய சாயி பாபா கூறியுள்ளார்.


**பகவான் சத்திய சாயி பாபாவின் அவதரிப்பு**

பகவான் சத்திய சாயி பாபா இந்தியாவிலுள்ள ஆந்திர மாநிலத்தில். புட்டபர்த்தி என்ற பின் தங்கிய சிறு கிராமத்தில் திங்கட்கிழமை 23ஆம் திகதி நவம்பர் மாதம் 1923 ஆம் ஆண்டு அவதரித்தார். தனது அவதாரம். சாதாரண பிரசவம் அல்ல. இது பிரவேசம் என்று அவரும் தாயாரான ஈஸ்வரம்மாவும் உறுதிப்படுத்தினார்கள். இவர் பிறப்பதற்கு முன்பும் பிறந்த பின்பும் பல அற்புத நிகழ்வுகள் நிகழ்ந்தன. தனது பாடசாலைப் படிப்பையும் குடும்பத்தையும் 14ஆவது வயதில் (20.10.1940) துறந்து தான் சத்திய சாயி பாபா என்று அறிவித்து மக்களுக்குப் பணி செய்யத் தொடங்கினார். சிறுவயதிலும் பாடசாலைக் காலத்திலும் வெகு சிலரே இவர் தெய்வீகமானவர் என்பதில் நம்பிக்கை கொண்டார்கள். இவர் தெய்விகமானவர் என்பதை இவரது அற்புதங்களும் லீலைகளும் மகிமைகளும் ஓரளவுக்கு மக்களைக் கவர்ந்தன. பின்னர் மிகவும் ஆழமான அருளுரைகள் மூலமும் வாஹினி தொடர் பதிப்புகள் மூலமும் பலரைக் கவரத் தொடங்கினார்.

**போதனைகள் பரப்பும் நிறுவனப்படுத்தல்**

தனது தெய்வீகத் தன்மையை பல இடங்களில் ஒரே சமயத்தில் தென்பட்டு எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர், எங்கும் உள்ளவர் என்பதை உலகில் பல பாகங்களில் பலருக்கு வெளிப்படுத்தியுள்ளார். போதனைகள் திரிவு படுத்தப்படாமலிருப்பதற்காகவும் எங்கும் பரப்புவதற்காகவும் சத்திய சாயி பன்னாட்டு நிறுவனத்தை ஆரம்பித்தார்.

அதற்குரிய யாப்பு. சகல விதிமுறைகள் நிர்வாக அமைப்பு யாவற்றையும் கொடுத்துள்ளார். தனது பெயரைப் பயன்படுத்தி நிதி வசூலிக்கக் கூடாதென்று வலியுறுத்தியுள்ளார். இந்த நிறுவனம் சகல நாடுகளிலும் இயங்கிவருகின்றது. ஐந்து அடிப்படை மனித விழுமியங்கள் மூலமாகத் தன்னலமற்ற சேவை புரிந்து தெய்வீக நிலையை அடைவதையே நோக்காகக் கொண்டுள்ளது. இதன் தலைமையகம் புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்தில் அமைந்துள்ளது. பக்தர்கள் இங்கே தங்குவதற்கும் ஆன்மிக சாதனைகள் செய்வதற்கும் சகல வசதிகளுமுண்டு.



**சத்திய சாயி பாபாவின் போதனைகள்**

- மனிதன் உலகைத் திருத்தமுடியாது. ஆனால் தன்னைத் திருத்தமுடியும். இவ்வாறு ஓரளவு எண்ணிக்கையான மனிதர்கள் திருந்தினால் உலகம் தானாகவே திருந்தும்.
- மனிதன் தெய்வீகமானவன். உள்ளிருக்கும் தெய்விகத்தை வெளிக்கொணரவே நான் அவதரித்துள்ளேன். அதாவது தெய்விகமான சத்தியம்ரூபவ் தர்மம். சாந்தி. பிரேமை. அகிம்சை ஆகிய குணங்கள். உணர்வு. எண்ணம். சொல். செயலில் வெளிக்கொணரவேண்டும்.
- படைப்புக்கள் எல்லாமே தெய்வீகமானவை. மனிதனின் பார்வையில் குறையுள்ளதால் படைப்பில் பன்மையையும் தீமையையும் காண்கின்றான்.
- எல்லா மதங்களும் ஒரே கடவுளைத் தான் அடைய வழிகாட்டுகின்றன. எல்லா மதங்களும் உன்னதமானவை. அவனவன் தான்பிறந்த மதத்திலேயே மிகச் சிறந்தவனாக வாழ வேண்டும். இவரின் போதனைகளில் அனைத்து மதக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது.
- மனிதனின் மனதைத் தூய்மையாக்குவதற்கு தன்னலமில்லாத சேவையை எந்தநேரமும் எங்கும் கடைசிவரையும் செய்யும்படி வலியுறுத்துகின்றார். 'அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய்' 'எப்போதும் உதவி செய், ஒரு போதும் தீங்கு செய்யாதே' என்பதே இவருடைய போதனைகளின் சாராம்சமாகும்.

**கல்வித் திட்டத்தில் மாற்றம் வேண்டும்**

பரந்த அளவில் விரைவில் மனிதனின் போக்கை மாற்றவேண்டுமாகில் கல்வித் திட்டத்தைச் சீரமைக்கவேண்டும். நடைமுறையிலுள்ள கல்வி முறையும் முன் உதாரணமாக நடக்காத பெற்றோரும், சமூகத் தலைவர்களுமே தற்போதுள்ள கலாசாரச் சீரழிவின் காரணம் என்று சொல்லியுள்ளார். தற்போதைய கல்வி, பரீட்சையில் சித்தியையும் தொழில் வாய்ப்பையுமே நோக்காகக் கொண்டுள்ளது. இந்தக் குறையைத் தீர்ப்பதற்குச் சத்திய சாயி.கல்வித் திட்டத்தை உலகமெங்கும் பரப்புவதற்காகச் செயல்முறையிலீடுபட்டார். இந்தக் கல்வித் திட்டத்தில் ஆன்மிகக் கல்வியுடன் உலகியற் கல்வியும் இணைக்கப்பட்டுள்ளன. எவ்வாறு செயற்படுத்த வேண்டுமென்று பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகமொன்றையும் ஆரம்பித்துக் கடந்த 30 வருடங்களாகச் செய்து காட்டியுள்ளார்.

அவரின் மாணவர்களே அவரது சொத்து என்றும் அவர்கள் அறிவுத்திறன், செயற்திறன். மனித உன்னதம் ஆகியவற்றில் மற்றைய மாணவர்களைவிட முன்னிலையில் உள்ளார்கள். இதை உணர்ந்த பல அரசுகள் (இந்தியா, தாய்லாந்து, சம்பியா, ஆஸ்திரேலியா) இந்தக் கல்வித் திட்டத்தை மெச்சி அங்கீகாரமும் வழங்கியுள்ளன. இங்கே ஆசிரியரே முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்றும் பல பயிற்சிகளும் அளிக்கப்பட்டு மையமாக வைக்கப்பட்டுள்ளார்.

**எல்லாவற்றிலும் இறைவனைக் காண்**

பகவானின் சேவைத் திட்டங்களில் பெரிய குடிநீர்த்திட்டங்கள், கிராமிய எழுச்சித் திட்டங்கள் அடங்கியுள்ளன. கடவுளை அடைவதற்காகச் சுவாமி பக்தி. கர்ம, ராஜ. ஞான என்று பல மார்க்கங்கள் இருந்தாலும் தான் பிரேம மார்க்கத்தையே விரும்பி முன்வைத்துள்ளதாகக் கூறியுள்ளார். பக்தர்களுக்குப் பகவான் கொடுத்த புத்திமதி 'எல்லாவற்றிலும் இறைவனைக் காண், எல்லாம் இறைவனே என்பதை உணர்வாயாக' என்பதாகும். சுவாமி அளித்த கடைசித் தரிசனம் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் சுவாமி தனது கைகளைக் கூப்பி சகல திசைகளிலுமுள்ள பக்தர்களுக்கு வணக்கம் செலுத்தினார். அவர் எப்போதுமே பக்தர்களில் தன்னைக் காண்பதாகக் கூறியுள்ளார். 24ஆம் திகதி ஏப்பல் மாதம் 2011ஆம் ஆண்டு மகா சமாதி அடைந்தார். அவருடைய சேவைத் திட்டங்கள், கல்வி நிறுவனங்கள், பிரசாந்திநிலைய ஆச்சிரமம் எல்லாம் முன்போலவே திறமையுடன் செயற்படுகின்றன. அவரின் சமாதியில் தலைவைத்து வணங்கினால் அவரது தரிசனத்துக்குச் சமன். இப்போதும் சூட்சும ரூபத்தில் பரபிரம்ம நிலையில் உலகெங்கும் தரிசனம் கொடுக்கின்றார். இதைப் பல இடங்களில் படத்திலோ அல்லது கதவிலோ அல்லது மேசையிலோ விபூதியால் 'நான் ஓர் இடமும் போகவில்லை. நான் எங்கும் உள்ளேன்' என்று எழுதிக் காட்டியுள்ளார். இந்தப் பூரண அவதாரத்தை மனதில் வைத்து முக்தி பெறுவோமாக.

**'சமஸ்த லோகா சுகினோ பவந்து'**

**ஜெய் சாயிராம்**

***கட்டுரையாளர்***
***வைத்தியக் கலாநிதி, யாழ்ப்பாணம்.***

# T.P.Hunt Memorial Art Gallery

## புதிய சித்திர வகுப்புக்கள் ஆரம்பம்

ஓவியம் கற்கும் மாணவர்கள் தமது சித்திர வரைதல் ஆற்றலை மேம்படுத்தும் முகமாகச் சிறந்த கவின்நிலைகளை உள்ளடக்கியதாகவும் சகல வசதிகளுடன் கூடியதுமான வகுப்பறைகளையும், காட்சிக்கூடத்தையும் கொண்டு வடமாகாணத்தில் முதன்முதலாக சித்திரப் பயிற்சி நெறி வகுப்புக்கள் எமது ஓவியக்கூடத்தில் ஆரம்பமாகவுள்ளது என்பதை பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

எமது ஓவியக்கூடத்தில் முன்பள்ளி (வயது 4) தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான புதிய சித்திர வகுப்புக்கள் 01.12.2018 முதல் ஆரம்பமாகவுள்ளன. பாடசாலைகளில் சித்திரப் பாடம் கற்கும் மாணவர்கள் மற்றும் சித்திரக் கலையில் ஆர்வம் உள்ள மாணவர்கள் தங்களின் பதிவுகளை நாளை (24.11.2018) சனிக்கிழமை மாலை 3.30 தொடக்கம் மேற்கொள்லாம் என்பதைத் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

**T.P.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடம்,**
**27, தேவாலய வீதி, சாவகச்சேரி.**
**T.P: 021 468 1613, 077 583 4845, 077 188 1758**
**e.mail: tphuntgallery18@gmail.com**

(IN/8480)(11,17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மாதன் சின்னராசா

திதி:- அபரபக்க பிரதமை

உயிருடன் உருவம் தந்து
உவகையுடன் உருவாக்கிய தந்தையே
அன்பாய் எமைக்காத்து பாசமாய் வளர்த்தெடுத்து
பண்புடன் வாழ ஆளாக்கிய தெய்வமே அப்பா
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு அகலாது அப்பா.

**அன்னாரின் ஆத்ம சாந்திக்காக**
**ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

என்றும் உம் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
**மகேசன் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.**

தோற்றம் 19.07.1951 மறைவு 04.12.2017

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 07 . 04 . 1950

மறைவு 24 . 10 . 2018

### அமரர் கனகரத்தினம் சண்முகநாதன் MJF, JP

(Lion shan லயன் சண்)
(உரிமையாளர், Jeyasunjan Construction)

நாளை (24.11.2018) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நந்தவனம்"
ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

மனைவி (நந்தா)
மகன் (தஞ்சயன்)
077 722 3219

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் திரு.இராசையா ஜனதன் அவர்களின் தாயார்

**இராசையா யோகேஸ்வரி**

அவர்கள் கடந்த 18.11.2018 அன்று காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021 493 1111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி பரமகுரு



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரிபரமகுருநேற்று (22.11.2018) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கம்மா-தம்பதியரின் அன்பு மருமகளும் பரமகுரு (CTB நடத்துனர்) அன்புமனைவி யு ம் காலஞ்சென்ற பால கிருஸ்ணன் மற்றும் பாலேஸ்வரன், கௌரிமாலா ஆகியோரின் அன்புச்சகோதரியும் நிமலதாஸ், சுதர்ஜனா, கௌரிபாலன் ஆகியோரின் அன்புத் தாயும் விஸ்வலிங்கம் பாஸ்கரனின் (கட்டப்பிராய்) அன்புமாமியும் சிவகுரு, சரஸ்வதி, பஞ்சலிங்கம், தியாகலிங்கம், கனகம்மா, மீரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிரிசிகா, அபிராம் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சு. பரமகுரு ( கணவர் 077 126 7187)**
**வி.பாஸ்கரன் (மருமகன் 076 153 2361)**

**தகவல் : குடும்பத்தினர்.**



### தம்பையா இரத்தினசபாபதி

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், சிங்கராஜ வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இரத்தினசபாபதி நேற்று 22.11.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மகனும் செல்வராணியின் அன்புக்கணவரும் அருளானந்தம் கனகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் மங்கையற்கரசி (கனடா), சிவசுப்பிரமணியம் (லண்டன்), இராசதுரை காலஞ்சென்றவர்களான மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் தியாகராஜா, யோகராஜா, தேவராஜா காலஞ்சென்றவர்களான புஸ்பராஜமணி, முத்துமணி, சற்குணராஜா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் ரஜேஸ் (பிரான்ஸ்), ரூபினி (ஆசிரியை, யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), சோபினி ஆகியோரின் அன்புத்தந்தையும் றஜித்தா (பிரான்ஸ்), குமாரபரன் (ஆசிரியர், யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை), மணிவர்ணன் ( உரிமையாளர், வாணி றெக்ஸ், நியூ போத்தீஸ் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் அஸ்வின், அக்ஷயா, சௌமியா, நுகேஸ், அபிஷனா, வர்ஷா, கஜந், அக் ஷா, ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.11.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில்அவரின்இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காகசெம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிங்கராஜ வீதி,**
**கல்வியங்காடு,**
**நல்லூர் வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் : மணிவர்ணன் (வாணி றெக்ஸ்)**
**மணிவர்ணன் - 077 748 8093, 021 223 0299**
**றஜேஸ் - 0033 630345928,**
**குமாரபரன் - 077 607 9018**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.கனகரெத்தினம் நவநீதன்**
(கலைஞானச்சுடர்) - நாச்சிமார் கோயிலடி

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையால் **20.11.2018** அன்று **" கலைஞானச்சுடர்"** விருது வழங்கப்பட்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :-**
திரு.திருமதி ச.உமாசுதன்
குடும்பத்தினர்.

## 28 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கூட்டுறவாளர்
**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.சங்க. சமாசம்)

தோற்றம்
06.10.1927

மறைவு
23.11.1990

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 28 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோப்பாய் பிராந்தியம்**

## மரண அறிவித்தல்



பிறப்பு 13 • 09 • 1944

இறப்பு 21 • 11 • 2018

**திருமதி மகேஸ்வரி கிருஷ்ணபிள்ளை**

யாழ்ப்பாணம், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், பூந்தோட்டம் சாந்த சோலை வீதி, 5 ஆம் ஒழுங்கை, மகாறம்பைக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கிருஷ்ணபிள்ளை 21.11.2018 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி நாகம்மா, நமசிவாயம் சின்னத்தங்கம் மற்றும் கந்தையா சண்முகவடிவேல் (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், ரவி (நோர்வே), ரகு (நோர்வே), ரஜனி, சுரேஸ், சிவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், நிதி (நோர்வே), உதயா (நோர்வே), யோகராசா, மோகனா, நடராசா, விக்கினேஸ்வரன், துரை, மகேஸ்வரி, ரஜனி, கருணாகரன், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், துஷ்யந்தன், ஜனகன், அபிஷா, பானுஜன், தர்சிகா, லாவண்ஜா, நிசாந், அபிசேக், மேனன், அபிதா, றெபேக்கா, சானுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2018) வெள்ளிக் கிழமை மாலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**5 ஆம் ஒழுங்கை,**
**சாந்தசோலை வீதி,**
**மகாறம்பைக்குளம், வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 886 0992**

## 2019 ஆம் ஆண்டிற்கான மீன் சந்தை/இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் மாந்தை மேற்கு பிரதேசசபை

மேற்படி விடயமாக 16.11.2018 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் கீழ் வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

முதலாவது பந்தி - மாந்தை மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட மீன் சந்தை / இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 01.01.2019 தொடக்கம் 31.12.2019 வரை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இல 09 - அதிகூடிய கேள்வித்தொகையை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படும் அதிகூடிய தொகையை சமர்ப்பித்தவர் குத்தகையை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்வி தாரரின் கேள்வித்தொகை திருப்திப்படகூடியதாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.

**தவிசாளர்,**
**மாந்தை மேற்கு பிரதேச சபை,**
**அடம்பன்.**

**23.11.2018**

(IN 8440)(14.17)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா கந்தசாமி**
(ஓய்வுநிலை அதிபர் S.L.P.S - I)

மலர்வு
23.11.1941

உதிர்வு
27.11.2015

திதி:- அபரபக்க பிரதமை

பண்பின் பிறப்பிடமே அன்பின் உறைவிடமே
பாசமுடன் எம்மை வாழ வைத்த அப்பாவே
பிறந்தநாள் நினைவலைகள் நெஞ்சில் மோத
மறைந்த இந்நாளில் மலர்தூவி வணங்குகின்றோம்

**நீங்காத நினைவலைகளுடன்**
**குடும்பத்தினர்.**

முதலாம்கட்டை, புலோலி மத்தி,
பருத்தித்துறை.

(NE/860)(11,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 • 09 • 1932

இறப்பு 16 • 11 • 2018

**றொபேட் நீக்கிலஸ் இராசசிங்கம்**
**R.N.Rajasingam**

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், தற்போது றொறன்ரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட றொபேட் நீக்கிலஸ் இராசசிங்கம் கடந்த 16.11.2018 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றொபேட் - தங்கமணி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான பிலிப் - சபினா (தங்கம்) தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சபினாபுகழ்வதியின் அன்புக் கணவரும், மரினோ, நிமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாஜினி, சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யோசுவா, சாரா, மாசா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மேரிராசமணியின் (மலர்) அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (24.11.2018) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

**அன்னாரின் ஆத்ம சாந்திக்கான திருப்பலிகள் -**

இன்று (23.11.2018) வெள்ளிக்கிழமை மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயம்
காலை - 7.15 மணி

நாளை (24.11.2018) சனிக்கிழமை - யாழ்.மரியன்னை பேராலயம் -
காலை 5.30 மணி

நாளை (24.11.2018) சனிக்கிழமை - யாழ்.அடைக்கல அன்னை ஆலயம்
காலை 5.45 மணி

நாளை (24.11.2018) சனிக்கிழமை - திருமுழுக்கு, புனித யுவானியார் ஆலயம்
காலை 5.50 மணி

நாளை (24.11.2018) சனிக்கிழமை - குழந்தை யேசு அருளாச்சிரம ஆலயம்
காலை 6.00 மணி

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காகத் திருப்பலியில் கலந்து செபிக்குமாறு வேண்டுகின்றோம்.

**இல.8, க[illegible] ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

(CS/21366)(11,17)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**021 222 9051, 077 900 9391**

## தேங்காய் விற்பனைக்கு

தோலுடன் தேங்காய் மொத்தமாக விற்பனைக்குண்டு.

**077 921 3835**

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

(CS 18781/15/17)

## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற நோய்களுக்கு நிரந்தர தீர்வு

பிரபல ஹோமியோபதி நிபுணரின் சேவை மக்களுக்காக

**யாழ்ப்பாணத்தில் - 24.11.2018 (நாளை)**
**பரந்தனில் - 01.12.2018**

**தொடர்பு - 077 444 1082**

(CS 31089/15/18)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சுப்பர் மார்க்கட் ஒன்றுக்கு கணினி பற்றிய அடிப்படை அறிவுள்ள ஆண்கள் வேலைக்குத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு :- 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.**

**077 220 5906**

## வகுப்புக்கள்

அச்சுவேலியில் **Spoken English &** சிங்களம் அடிப்படை அலகிலிருந்து எழுத, வாசிக்க, பேச்சுப் பயிற்சியுடன் மிகக் குறுகிய காலத்தில் தனியாக / சிறு குழுவாக கற்பிக்கப்படுகின்றது.

**Lect - By - SKB - மனோகரன் J.P**
**077 725 4627,**
**தீர்த்தாங்குளம், அச்சுவேலி.**

## தையல் மெசின் திருத்திக்கொடுக்கப்படும் (குறைந்த செலவில்)



தையல் மெசின் திருத்துதல்
தையல் மெசின் சேவிஸ்
புதிய மேசை மாற்றுதல்
உதிரிப்பாகங்களும் மாற்றிக்கொடுக்கப்படும்.

**நல்லைக்குமரன் பல்பொருள் வாணிபம்**
**பலாலி வீதி, தம்புரோக்கு அருகில்**
**14 A, அம்மன் வீதி. 077 666 9905**




# தேசிய கல்வி நிறுவகத்தின் வணிகக் கல்விப் பாடத்தின் தமிழ்மொழி மூலமான புதிய ஆசிரியர் வழிகாட்டி நூலில் காணப்படும் குழப்பங்கள், தவறுகள் மற்றும் பாதிப்புக்கள்

வடிவேல்முருகன் தர்மதாசன்

**ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய பார்வை**

நேற்றைய தொடர்ச்சி...

Economic Order Quantity என்ற ஆங்கிலப் பதத்துக்குரிய தமிழ்ச் சொல் **சிக்கனக் கட்டளைத் தொகை** அல்லது **சிக்கனக் கட்டளைக் கணியம்** என்பதாகும். ஆனால், இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 13.5, 13.6, 13.7, 17.4 இன் 89, 92, xxii, 95, 96, 97, 278 ஆம்பக்கங்களில் **பொருளாதாரக்கட்டளைக்கணியம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Stockout Cost என்பதற்குரிய தமிழ்ச்சொல் **சரக்கிருப்பற்ற நிலையிலான கிரயம்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 13.6 இன் 93 ஆம் பக்கத்தில் **முறையற்ற கிரயம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Positioning என்பதற்குரிய தமிழ்ச் சொல் **நிலைப்படுத்தல்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.1 இன் xxiv, 109, 110 ஆம் பக்கங்களில் **உருவாக்குதல்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Brand என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **பண்டக்குறி** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டங்கள் 14.1, 14.4, 14.6, 14.7, 14.10, 18.2 இன் xxiv, xxvii, xxlv, 109, 110, 111, 112, 127, 139, 140, 141, 142, 144, 146, 157 ஆம் பக்கங்களில் **சின்னம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Relationship என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **உறவுமுறை** அல்லது **தொடர்புடைமை** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.1, 14.2 இன் xxiv, 106, 109, 120 ஆம் பக்கங்களில் தொடர்பு எனவும் தொடர்புமுறை எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Performance Marketing என்பதற்குரிய தமிழ்ச் சொல் **செயற்றிறன் சந்தைப்படுத்தல்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.2 இன் 120 ஆம் பக்கத்தில் **செயலடைவுச் சந்தைப்படுத்தல்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Product Mix என்ற இந்தப் பதத்துக்குரிய தமிழ்ச் சொல் **உற்பத்திப்பொருள் கலவை** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.5 இன் 135 ஆம் பக்கத்தில் **உற்பத்திக் கலவை** எனப் பயன்படுத்தப்பட் டுள்ளது.

Product Line என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **உற்பத்திப்பொருள் வரிசை** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.5 இன் 136 ஆம் பக்கத்தில் **உற்பத்தி வரிசை** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Basic Product என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச்சொல் **அடிப்படை உற்பத்திப்பொருள்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.5 இன் 136, 138 ஆம் பக்கங்களில் **அடிப்படை உற்பத்தி** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Expected Product என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப்பொருள்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.5 இன் 136, 138 ஆம் பக்கங்களில் **உத்தேச உற்பத்தி** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Augmented Product என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **விருத்தியாக்கப்பட்ட உற்பத்திப்பொருள்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச்சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.5 இன் 137, 138 ஆம் பக்கங்களில் **மேம்படுத்தப்பட்ட உற்பத்தி** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Potential Product என்ற பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச்சொல் **எதிர்கால உற்பத்திப்பொருள்** அல்லது **சாத்திய உற்பத்திப்பொருள்** என்பதாகும். ஆனால், இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.5 இன் 137, 138 ஆம் பக்கங்களில் **சாத்தியப்பாட்டு உற்பத்தி** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Brand Name என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **பண்டக்குறிப் பெயர்** அல்லது பண்டப் பெயர் என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச்சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.6 இன் 141 ஆம் பக்கத்தில் **சின்னப் பெயர்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Brand Mark என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச்சொல் **பண்டக்குறி அடையாளம்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.6 இன் 141 ஆம் பக்கத்தில் **சின்னக் குறியீடு** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Label, Labelling ஆகிய ஆங்கிலப் பதங்களுக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் **சுட்டுத்துண்டு, சுட்டுத்துண்டிடல்** என்பவையாகும். ஆனால் இவற்றுக்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 14.7 இன் xxvii, 146 ஆம் பக்கங்களில் பிழையாக **விபரத்துண்டு, விபரத்துண்டிடல்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Personalselling என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **தனியாள் விற்பனை** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டங்கள் 14.10, 17.5, 18.2 இன் xxviii, 156, 157, 282, 302 ஆம் பக்கங்களில் **தனிப்பட்ட விற்பனை** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Main Board, Dirisavi Board, Default Board ஆகிய ஆங்கிலப் பதங்களுக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் **பிரதான பட்டியற் திரை, திரிசவிப் பட்டியற் திரை, மீறுவோர் பட்டியற் திரை** என்பவையாகும். ஆனால் இவற்றுக்கான தமிழ்ச் சொற்களாகத் தேர்ச்சி மட்டம் 15.7 இன் 195, 196 ஆம் பக்கங்களில் **பிரதான பலகை, திரிசவிப் பலகை, மீறப்பட்ட பலகை** எனப் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

share Warrent என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **பங்கு ஆணைப் பத்திரம்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் **சொல்லாக்கத்** தேர்ச்சி மட்டம் 15.8 இன் xxxii ஆம் பக்கத்தில் **பங்கு உத்தரவுப் பத்திரம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Job Design, Job ஆகிய ஆங்கிலப் பதங்களுக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **வேலை வடிவமைப்பு, வேலை** என்பதாகும். ஆனால் இவற்றுக்கான தமிழ்ச்சொற்களாகத் தேர்ச்சி மட்டங்கள் 16.1, 16.2, 16.4, 16.8 இன் xxxiii, 208, 209, 210, 211, 212, 213, 214, 219, 242, 243 ஆம் பக்கங்களில் **தொழில் உருவாக்கம், தொழில்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Job Analysis என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச்சொல் **வேலைப் பகுப்பாய்வு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டங்கள் 16.1, 16.2, 17.5 இன் xxxiii, 208, 209, 210, 211, 221, 281, 282 ஆம் பக்கங்களில் **தொழிற் பகுப்பாய்வு** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Induction என்ற ஆங்கிலப் பதத்துக்குரிய தமிழ்ச் சொல் **அறிமுகப்படுத்தல்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 16.1 இன் 208 ஆம் பக்கத்தில் **தொழிலில் அமர்த்தல்** எனப் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Employee Movement என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **ஊழியர் அசைவு அல்லது ஊழியர் நகர்வு** என்பவையாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 16.1 இன் 208 ஆம் பக்கத்தில் ஊழியர் மாற்றம் எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Disciplinary Manage ment என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **ஒழுக்காற்று முகாமைத்து வம்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டங்கள் 16.1, 16.6, 16.9 இன் xxxvii, 208, 233, 245, 246, 247 ஆம் பக்கங்களில் ஒழுக்க முகாமைத்துவம் எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.



Job Description, Job Specification ஆகிய ஆங்கிலப் பதங்களுக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் **வேலை விவரணம், வேலை குறித்துரைத்தல்** என்பவையாகும். ஆனால் இவற்றுக்கான தமிழ்ச் சொற்களாகத் தேர்ச்சி மட்டம் 16.2 இன் xxxiii, 209, 210, 211, 212, 213, 214 ஆம் பக்கங்களில் **தொழில் விபரம், தொழில் நியமம்** எனப் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Job Posting, Job Advertising ஆகிய ஆங்கிலப் பதங்களுக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் **வேலை அறிவித்தல் (உள்ளக ஆட்சேர்ப்பின்போது பயன்படுத்தப்படுவது), வேலை விளம்பரப்படுத்தல் (வெளியக ஆட்சேர்ப்பின் போது பயன்படுத்தப்படுவது)** என்பவையாகும். ஆனால், இவற்றுக்கான தமிழ்ச்சொற்களாகத் தேர்ச்சி மட்டம் 16.4 இன் 219, 222, 224, 225 ஆம் பக்கங்களில் **தொழில் அறிவித்தல், வெளியக ரீதியான அறிவித்தல்** எனப் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Referrals என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச்சொல் **ஊழியர் சிபாரிசுகள், பரிந்துரைகள்** என்பவையாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொற்களாகத் தேர்ச்சி மட்டங்கள் 16.4 இன் 222 ஆம் பக்கத்தில் **உள்ளக ரீதியான ஊழியர்கள் அறிமுகப்படுத்தல்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Practicaltest என்ற ஆங்கிலப் பதத்துக்குரிய தமிழ்ச்சொல் **செய்முறைப் பரீட்சை** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டங்கள் 16.5 இன் xxxv, 227, 228 ஆம் பக்கங்களில் செயற்பாட்டுப் பரீட்சை எனவும் **செயல்முறைப் பரீட்சை** எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Appointing என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **நியமனம் செய்தல்** அல்லது **இணைத்துக் கொள்ளுதல்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டங்கள் 16.6 இல் xxxv, 230, 231 ஆம் பக்கங்களில் **ஆட்சேர்ப்பு** எனப் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Probationary period என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **தகுதிகாண் காலம்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 16.6 இன் xxxv, 230, 231, 233 ஆம் பக்கங்களில் **தகைமை காணும் காலம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Grievances என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச்சொல் **மனக்குறைகள்** அல்லது **மனத்தாங்கல்கள்** என்பவையாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டங்கள் 16.6, 16.8 இன் xxxvii, 233, 241, 242, 244 ஆம் பக்கங்களில் **குறைகள்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Compensation Management என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **கொடுப்பனவு முகாமைத்துவம்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 16.7 இன் xxxvi ஆம் பக்கத்தில் **முகாமைத்துவம்** என மட்டும் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

On the Job Training என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **வேலையின் போதான பயிற்சி** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 16.7 இன் 239 ஆம் பக்கத்தில் **தொழிலில் ஈடுபடும் போதான பயிற்சி** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுரையாளர்,
முதுநிலை விரிவுரையாளர், துறைத் தலைவர்
முகாமைத்துவக் கற்கைகள் துறை
முகாமைத்துவ பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

(தொடரும்)



# உருளைக்கிழங்கு முட்டை ஆம்லெட்



**தேவையான பொருள்கள் :**
முட்டை : 4
உப்பு : தேவையான அளவு
கொத்தமல்லி : சிறிதளவு
பச்சை மிளகாய் : 4
உருளைக்கிழங்கு : 2
கறிவேப்பிலை
வெங்காயம் : 1
வெண்ணெய் : சிறிதளவு

**செய்முறை :**
வெங்காயத்தை நீளவாக்கில் மெலிதாக நறுக்கி கொள்ளவும். ப.மிளகாய், கொத்தமல்லியைப் பொடியாக நறுக்கி கொள்ளவும். உருளைக்கிழங்கைத் தோல் நீக்கி மெலிதாகச் சீவி, எண்ணெயில் போட்டு வறுத்துக் கொள்ளவும்.
முட்டையை உடைத்துப் பாத்திரத்தில் ஊற்றி, உப்புக் கலந்து நன்றாக அடித்து கொள்ளவும்.
இதில் நறுக்கிய வெங்காயம், வறுத்த உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, கறிவேப்பிலை சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும். அடிப்பிடிக்காத பாத்திரத்தை அடுப்பில் வைத்து வெண்ணெய் போட்டு சூடானதும் அதில் உருளைக்கிழங்கு முட்டை கலவையை ஊற்றிச் சுற்றி சிறிது வெண்ணெய் போட்டு ஆம்லெட் போல் வேக விடவும்.
இப்பொழுது ஒரு பக்கம் நன்றாக வெந்ததும் திருப்பிப் போட்டு வேக விட்டு எடுத்துத் தட்டில் வைத்து முக்கோணமாகக் கேக் வெட்டுவது போல் வெட்டிப் பரிமாறவும்.
சுவையான உருளைக்கிழங்கு முட்டை ஆம்லெட் தயார்.




## இது புதுசு

பாத்திரங்கள் கழுவுவதற்கான சவர்க்கார பிரஸ்கள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 700 ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# ஏன் உணவுக்குழாய் பாதிக்கப்படுகிறது?

வாயில் உணவை மெல்லும் போதே, 25 சதவிகிதம் சமிபாட்டுச் செயல்பாடு நடக்கத் தொடங்கிவிடும். உணவுக்குழாயில் எந்தவித அமிலச் சுரப்பிகளும் கிடையாது. இரைப்பையைத் தவிர, எங்கு ஹைட்ரோகுளோரிக் அமிலம் பட்டாலும், அது உணவுக்குழாயை அரிக்கத் தொடங்கும். இதனால், நெஞ்சு எரிச்சல் ஏற்படும்.
புகை, மது, சூடாகச்சாப்பிடுதல், சாப்பிடாமலேயே இருத்தல், தண்ணீர் குடிக்காமல் இருத்தல், புளிப்பு, உப்பு, காரம் அதிகமாகச் சாப்பிடுதல், குளிர்பானங்கள், ஐஸ்க்ரீம், சூடான பால்தேநீர், தேநீர் குடித்தல் போன்றகாரணங்களால்உணவுக் குழாய் பாதிப்படைகிறது.






**மாத்திரைகளால் ஏற்படும் விளைவுகள்**
நெஞ்சு எரிச்சல் பிரச்சினைக்கு, நவீன மருத்துவத்தில் ஜெல் மருந்து, ஆன்ட்டாசிட் போன்ற மாத்திரைகளைத் தருகின்றனர். இந்தமருந்துகள்குறிப்பிட்டநேரத்துக்கு மட்டுமே வேலை செய்யும். தொடர்ந்து எடுத்துவந்தால், ஒரு கட்டத்தில் அமிலத்தை சுரக்காமலேயே(HCL SECRETION) செய்துவிடுவதுதான் இந்த மருந்துகளின் மிகப் பெரிய பக்கவிளைவு. மேலும், பசியின்மை, மஞ்சள் காமாலை, சமிபாட்டுப்பிரச்சனை போன்றவையும் ஏற்படலாம்.

**உணவுக்குழாயைப் பாதுகாத்தல்**
1. காலை எழுந்ததும் தண்ணீர் குடிக்கும் பழக்கம் ஆரோக்கியத்தின் ஆரம்பம். இது, நம் உடலில் வாதம், பித்தம், கபத்தை சமன்படுத்த உதவும். காலை எழுந்தவுடன்திடமானஉணவைச்சாப்பிடுவதுகூட உணவுக் குழாயைப் பாதிக்கலாம்.
2. மணத்தக்காளிக் கீரை, மாதுளை, வாழை, பால், தண்ணீர்விட்டான்கிழங்கு, பரங்கிக்காய், பூசணி, வெண்பூசணிலேகியம், பிடிகருணை, சீரகத் தண்ணீர், வெந்தயம்போன்றவற்றைஎடுத்துக்கொள்ள வேண்டும்.
3. நீர்ச்சத்து மற்றும் நார்ச்சத்து காய்கறிகள், கனிகள், கீரைகள், சுத்தமானதண்ணீர்ஆகியவை உணவுக்குழாய் பிரச்சினையைச் சரிசெய்யும்.


**உணவுக்குழாயைப் பாதுகாக்க 5 வழிகள்!**
★ உணவைஎப்போதும்மென்றுதின்னும்பழக்கம் அவசியம்.
★ காலை எழுந்ததும் ஒரு கிளாஸ் நீர் அருந்த வேண்டும்.
★ சீரகநீர்பருகுவதால், உணவுக்குழாய்தொடர்பான பிரச்சினை வராது.
★ நீர், நார்ச்சத்து உணவுகளைப் பிரதானமாகச் சாப்பிடுவது நல்லது.
★ சாப்பிட்டவுடன் படுக்கக் கூடாது. குறைந்தது ஒன்றரை மணி நேரமாவது இடைவெளி வேண்டும்.

"காலையில்இஞ்சி...நண்பகல்சுக்கு...மாலை கடுக்காய்... ஒரு மண்டலம் உண்ண வயோதிபனும் வாலிபன் ஆவானே" என்ற சித்தரின் வாக்குப்படி, காலையிலே உண்ணும் உணவுதான், உணவுக்குழாய்க்கு நாம் கொடுக்கும் முதல் உணவு.
**கற்றாழை:** காலையில் முதல் உணவாகப் பருகும்போது, இதில் உள்ள கொலஜன் மற்றும் ஃபைபர், புண்களைக் குணமாக்கிவிடும். எரிச்சல் உணர்வைநீக்கும். ஆண்டிகேன்சர் மற்றும் ஆண்டி டியூமராக கற்றாழை செயல்படுகிறது.
**வெள்ளரி:** வெள்ளரியில் உள்ள நீர்ச்சத்து, நார்ச்சத்து, உடலில் உள்ள நச்சுக்களை அகற்றும். உணவுக்குழாய்தொடர்பானப் பிரச்சனையைச் சரிசெய்யும்.
**இஞ்சி:** இதில் உள்ள ஃபினாலிக் காம்பவுண்ட்ஸ், உணவுக்குழாய் மற்றும்வயிறு தொடர்பான புற்றுநோய்களை வரவிடாமல் செய்யும். உமிழ்நீர் சுரக்க உதவும். உணவுச் சமிபாட்டுச் செயல்பாடு எளிதாகும்.



# உணவு அருந்தியதும் தண்ணீர் குடிக்கக் கூடாது

உணவு அருந்திய பிறகு அதிக அளவு தண்ணீர் குடிக்கும் பழக்கம் பலருக்கு உண்டு. அதிக தண்ணீர் குடித்தால் மட்டுமே நாம் சாப்பிட்ட உணவு சமிபாடடையும் என்ற எண்ணம் மிகத் தவறானது.
உலகளவில் உள்ள ஊட்டச்சத்து நிபுணர்களும் உணவு சாப்பிட்ட உடனேயே தண்ணீர் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகின்றனர். இது குறித்து நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் மூலம் நம் உணவு சமிபாடடையும் திறன் தடை செய்யப்பட்டு உடலில் உள்ள இன்சுலின் நிலை அதிகரிக்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.
"நாம் சாப்பிடும் உணவு சமிபாடடைய குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகும். உணவுக்கு முன் தண்ணீர் அருந்துவதால் சீக்கிரமே உணவு சமிபாடடைந்துவிடும். இது உடலுக்கு நல்லது அல்ல. அதே போல உணவு சாப்பிடும்போதே தண்ணீர் குடிப்பதும் சரியான நடைமுறையல்ல. இதனால் பெருங்குடல் விரிவடைய வாய்ப்புக்கள் உண்டு. அதுமட்டும் இல்லாமல் உணவுக்கு பிறகு உடனே தண்ணீர் குடித்தால் உடனே பசி எடுக்க ஆரம்பித்துவிடும். அத்தோடு சேர்த்து குடல் வீக்கம் அடையும் வாய்ப்புகள் இருக்கின்றது.
உணவுக்கு முன்னும் பின்னும் தண்ணீர் குடிப்பதைத் தவிர்த்து விட்டு, உணவு சாப்பிடுவதற்கு அரை மணி நேரம் முன் தண்ணீர் குடிக்க வேண்டும். அதே போல உணவுக்குப் பின்னரும் அரை மணி நேரம் கழித்து தண்ணீர் குடிப்ப தையே பலர் வலியுறுத்துகின்றனர். இதுவே பெருங்குடலுக்கும் நன்மை பயக்கும்.



அதிர்ஷ்ட கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 442
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.11.22
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,315,250/-
வெற்றி இலக்கங்கள்
30 33 38 63 L

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1520
சீட்டிழுப்பு திகதி 22.11.2018
வெற்றி இலக்கங்கள்
34 35 52 59 A
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 21, 762, 868/=

# 28 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கூட்டுறவாளர்
அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.சங்க. சமாசம்)

தோற்றம் 06.10.1927

மறைவு 23.11.1990

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 28 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராணி பொன்னுத்துரை

பிறப்பு 20.09.1952 — இறப்பு 04.12.2017

திதி: பிரதமை தேய்பிறை (23.11.2018)

ஈராறு மாதங்கள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டகலவில்லை அம்மா
நீங்கள் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும்
எமை வழிநடத்தியதை மறக்க முடியவில்லை அம்மா

என்றும் உங்கள் பாசத்திற்காய் ஏங்கித் தவிக்கும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
077 117 7815/ 077 074 2649

## மைத்திரிக்குத்...

இல்லை. ஆனால் பன்னாட்டுச் சமூகத்துடன் இணைந்து அரச தலைவர் மீது சேறுபூசும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு மகிந்த சமரசிங்க மற்றும் தயாசிறி ஜெயசேகர ஆகியோர் தெரிவித்தனர்.

மகிந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய கொலைகள், ஆள் கடத்தல்கள் உள்ளிட்ட வழக்கு விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா, கடந்த சில தினங்களுக்கு முன்னர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார். இது பலத்த எதிர்ப்புக்களை உருவாக்கியிருந்தது. அதன் பின்னர் இடமாற்றம் நிறுத்தப்பட்டது.

சட்டம் ஒழுங்கு அமைச்சைச் சிறப்பு அரசிதழ் ஊடாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்திருந்தார். அவரின் கீழேயே இப்போதும் பொலிஸ் திணைக்களம் செயற்படுகின்றது.

இந்தநிலையில், நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் சந்திப்பில், இந்த இடமாற்றம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியாமல் இடம்பெற்றது என்று தயாசிறி ஜெயசேகர மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோர் கூறியுள்ளனர். "பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவின் இடமாற்றத்தில் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர முறையற்ற விதமாக நடந்திருந்தால் அவருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கும். நாட்டுக்கு எதிரான கருத்துகளை முன்வைத்து அரசியல் இலாபத்தை தேடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகள் அமைந்துள்ளது" என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

மூடீச் நிறுவனம் (பன்னாட்டு ரீதியில் நாணயங்களின் தரப்படுத்தலை வெளியிடும் அமைப்பு) இலங்கை குறித்து வெளியிட்டுள்ள சில கருத்துகளை வைத்துக்கொண்டு பன்னாட்டு ரீதியில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதார நிலமைகள் தொடர்பில் மூடீச் நிறுவனம் கூறியுள்ள கருத்துகளை இலங்கை மத்திய வங்கி நிராகரித்துள்ளது. அடுத்தாண்டு செலுத்த வேண்டிய கடனுக்கு மேலதிகமான பணமும் எமது கையிருப்பில் உள்ளது. ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்கள் அடுத்தாண்டின் ஆரம்பத்திலும், 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அடுத்தாண்டின் ஏப்ரல் மாதத்திலும் நாம் கடனாக செலுத்த வேண்டியுள்ளது. ஆனால், தற்போதே ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை கையிருப்பில் உள்ளது. உண்மையான நிலைமைகளை ஐக்கிய தேசியக் கட்சி மூடி மறைத்து அரசியல் இலாபம் தேடும் வகையில் கருத்துகளை முன்வைத்து வருகிறது. நாட்டின் மீது பற்றில்லாதவர்களே இவ்வாறு நடத்துகொள்வார்கள் என்றார்.

(ற-5,10)

## டட்லியின்...

வழங்கியிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ரஷ்யாவுக்கான இலங்கை முன்னாள் தூதுவரும், மகிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமானவருமான உதயங்க வீரதுங்க தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றை வைத்தே இந்தச் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

மைத்திரிபா சிறிசேனவின் சகோதார் டட்லி சிறிசேன. இவர் பொலனறுவையில் பிரபல அரிசி ஆலை வணிகராவார். அவர் அண்மையில் தனது 58ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார். அவருக்குத் தனது முகநூலில் வாழ்த்துத் தெரிவித்துள்ள உதயங்க வாழ்த்துடன் மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமிப்பதற்கு அரச தலைவரிடம் மொழிந்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தன்னையும், கோத்தபாய ராஜபக்சவையும் கொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமையால்தான் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கி, மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமித்தேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

எனினும் தற்போது உதயங்க இட்டுள்ள பதிவில் டட்லி சிறிசேனவின் பரிந்துரைக்கமையவே மகிந்த ராஜபக்ச பிரதமராக நியமிக்கப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

மிக் போர் விமானக் கொள்வனவு ஊழல் தொடர்பான வழக்கில் இலங்கையில் தேடப்படும் நபரான உதங்க வீரதுங்கவுக்கும் அரச தலைவரின் சகோதரருக்கும் இடையிலான நெருக்கம் குறித்தும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

(ற-10)

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 197
சீட்டிழுப்பு திகதி 22.11.2018 நீலம்
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 17 18 58
விதி எண் 04
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16,052, 220 /=
2018.11.24 ஆம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## இரு வேறு...

மடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உந்துருளியில் பயணித்த இளைஞர்களும் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொன்னாலைப் பாலத்தில் நடைபெற்ற விபத்தில் பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

காரைநகரில் இருந்து பொன்னாலை நோக்கி உந்துருளியில் பயணித்த பூசகர் முன்பாகப் பயணித்த துவிச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முற்பட்டார் என்றும், அதன்போது துவிச்சக்கர வண்டியுடன் விபத்துக்குள்ளானதுடன் எதிரே வந்த பேருந்துடனும் விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.


பூசகர் வீதியில் விழுந்து சிறிதுதூரம் இழுபட்டுச் சென்று படுகாயமடைந்தார் என்றும், துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர் கடலுக்குள் பாய்ந்த நிலையில் அவரும் காயங்களுக்குள்ளானர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நோயாளர் காவு வண்டி மூலம் பூசகர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

இந்த விபத்துக்கள் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

(ற-8,37,105)

# 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் கனகசபை சண்முகசுந்தரம்
(ஸ்தாபகர் சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)
தோற்றம்:- 03.11.1941


மறைவு 23.11.1995

அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன்
(மாணவன் - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)
தோற்றம்:- 18.08.1983

விருட்சமாய் நிழல்தந்து வாழ்ந்து மறைந்து
இருபத்துமூன் றாண்டுகள் உருண்டு முடிந்தும்
உருக்கமுடன் நாமின்று உங்களை நினைந்து
பொறுமையாய் புனிதமாய் பூசித்துத் துதிக்கின்றோம்

ஓட்டுமடம், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# தொப்பையைக் குறைக்க



தேன் - 1/2 கப்
தேங்காய் எண்ணெய் -3/4 கப்
பட்டை தூள் - 1 கரண்டி
கொக்கோ பவுடர் - 1 கரண்டி

தயாரிக்கும் முறை:

மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து பொருள்களையும் மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்து, பின் அதனை காற்றுப்புகாத கண்ணாடி சாடியில் போட்டு, தேவையான பொழுது பயன்படுத்த வேண்டும்.

பயன்படுத்தும் முறை:

தினமும் கோப்பி குடிக்கும் போது, தயாரித்து வைத்துள்ளதை ஒரு கரண்டி எடுத்து கோப்பியுடன் சேர்த்து நன்கு கலந்து பின் குடிக்க வேண்டும்.

# தாவரங்களுக்கு உணர்வு உண்டா?

உணர்வுகளின் அடிப்படைத் தன்மைகளைக் கொண்டு இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே உயிரினங்களை ஆறு வகைகளாக வகைப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர். குறிப்பாக ஓரறிவினை அவர் பின்வரும் அடிகள் மூலம் தெளிவுகொள்ள வைக்கிறார்.

*'ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே'*

(தொல். பொருள். மரபியல், 27)

என்றும் அதற்கு உதாரணமாக

*"புல்லும் மரனு மோரறி வினவே*
*பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"*

(தொல். பொருள். மரபியல், 28)

என்றும் குறிப்பிடுகிறார்.

அதாவது புல், மரங்களை ஓரறிவு உயிர்களாக வகைப்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. அந்தவகையிலே அறிவியலாளர்கள் புலன்களின் அடிப்படையில் உயிரினங்களை வகைப்படுத்தியுள்ளதை நாம் நோக்க வேண்டியிருக்கிறது. அறிவியல் கூறும் ஐம்புலன்கள் மெய், வாய், மூக்கு, கண், காது என்பனவே. இவற்றின் இயங்குநிலைச் செயற்பாட்டின் அடிப்படையிலே தொடுகை உணர்வு கொண்ட தாவரங்களும் மரங்களும் ஓரறிவு உள்ள உயிரிகளாக வெகு காலங்கள் முன்பே வகைப்படுத்தப்பட்டுள்ளமை ஆச்சரியத்தையும் வியப்பினையும் தருகின்ற தகவல்களாக விளங்குகின்றன. தாவரங்கள் இசை கேட்கும் ஆற்றலை கொண்டுள்ளன. இதனை ஏற்றுக்கொள் வோர் உள்ளனர். ஒரு சில அறிவியல் ஆய்வுகளும் இதனை வலியுறுத்தியுள்ள போதும் இக்கருத்தினை அறிவியல் உலகம் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தபோதிலும் அறிவியல் உலகம் என்பது தாவரங்களுக்கு தொடுகை உணர்வு உண்டு என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கான உதாரணமாக தொட்டாற் சிணுங்கி (மிமோசா புடிக்கா ரச்மீநொட் பிளாண்ட்) செடியினையும் பூச்சிகளை உண் ணும் தாவரத்தினையும் (டையோனியா மிசிப்பியுலா வீனஸ் பிளைராப்) கூறலாம்.

இவை தவிர கடுகு இனக் குழுமத்தைச் சாா்ந்த தாவரமான குதிரைப்புல்லில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஆய்வின் போது தாவரங்கள் மழை, காற்று போன்ற இயற்கையின் அசைவுச் செயற்பாடுகள் ஏற்படுத்தும் அதிர்வுகளை உணர்ந்து அதற்கேற்ப செயற்படுகின்றது என்பதான தகவலும் கண்டறியப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

# வெள்ளை உணவுகளை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்ன?

அன்றாடம் உணவுகளில் இயற்கையாகவே கிடைக்கக்கூடிய வெள்ளை உணவுகள் சத்துக்கள் நிறைந்தவை. அவற்றை தாராளமாகச் சாப்பிடலாம். ஆனால், செயற்கை முறையில் வெள்ளையாக்கப்பட்ட சர்க்கரை, உப்பு போன்ற உணவுகள்தான் உடலுக்குக் கெடுதியை ஏற்படுத்தக் கூடியவை. வெள்ளை உணவுகள் உடலுக்குக் கெடுதியானவை என்ற பரவலான கருத்தை நம்பி, சத்தானவற்றையும் சாப்பிடாமல் இருக்கக் கூடாது.





**பூ கோவா**

விற்றமின் பி, பி6, ஃபோலிக் அமிலம், பொட்டாசியம், நார்ச்சத்து நிறைந்துள்ளன. குறைந்த கலோரிகள் இருப்பதால், உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்களுக்கு ஏற்றது. இதில் உள்ள கொலைன் மற்றும் விற்றமின் பி, மூளைக்கு உதவுகின்றன.

விற்றமின் சி, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. பூ கோவாவை, மிதமாகவே வேக வைக்க வேண்டும். தற்போது, பூச்சிகொல்லிகள் தெளிக்கப்படுவதால், மஞ்சள் நீரில் போட்டு, சில நிமிடங்கள் ஊறிய பிறகு, சமைப்பது நல்லது.

**முள்ளங்கி**

விற்றமின் சி, இரும்புச்சத்து, பொட்டாசியம், ஃபோலிக் அமிலம், அன்டி ஒக்சிடன்ட், சல்ஃபோரோபேன் போன்ற சத்துக்கள் உள்ளன. மாா்பகம், பெருங்குடல், சினைப்பை புற்றுநோய்கள் வராமல் தடுக்கிறது. குருதி அழுத்தப் பிரச்சினையைச் சீராக்கும்.

மஞ்சள் காமாலை வந்தவர்கள் இதைச் சாப்பிட்டால், கல்லீரலில் உள்ள நச்சுக்களை நீக்கும். இதில் உள்ள நீர்ச்சத்து, மலச்சிக்கலைப் போக்கும். சருமத்துக்கும் நன்மைகளைச் செய்யும். தைறொய்டு நோயாளிகள், முள்ளங்கியை அளவோடு சாப்பிட வேண்டும். வேகவைக்காமல், சாப்பிடக் கூடாது. இதில் உள்ள சாலிசிலேட் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடும்.

**பூண்டு**


குருதி அழுத்தம், உடல் பருமன் உடையோர், புற்று நோயாளிகள் அவசியம் சாப்பிட வேண்டிய உணவு. கிருமிகள், வைரஸ், நுண்ணுயிரிகள் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்பிலிருந்து காக்கும். சுவாசப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும். தாய்ப்பால் சுரக்க உதவும். நீரிழிவு நோயாளிகள் தினமும் உண்ணலாம்.

இனிப்பின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக்கும், கணையத்துக்கு நன்மைகளைச் செய்யும். பூண்டு சாப்பிட்டால் துர்நாற்றம் வீசும் என்று, பூண்டை ஒதுக்கக் கூடாது. பெருங்குடல், நுரையீரல், மாா்பகம், மலக்குடல் புற்று நோய்கள் வராமல் தடுக்கும். கொழுப்பைக் கரைத்து, இதய நோய்கள் வராமல் காக்கும்.

**காளான்**

அசைவத்தில் உள்ள சுவையும், சத்துக்களும் காளானில் கிடைப்பதால், அசைவ உணவு சாப்பிடாதவர்கள் எடுத்துக் கொள்ளலாம். தாதுக்கள், அன்டிஒக்ஸிடன்ட், அமினோ அமிலங்கள், புரதம் போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. ஹார்மோன்கள் சுரப்பதற்கும், நரம்பு மண்டலத்துக்கும், பாண்டோதினிக் என்ற அமிலம் உதவுகிறது.

இதில் உள்ள செலினியம் உடலில் உள்ள செல்களுக் குக் கவசம். விற்றமின் டி இருப்பதால், எலும்புகள் வலுப்பெறும். கொழுப்பு இல்லை. கலோரிகளும் இதில் மிகக் குறைவுதான். இரண்டு நாள்களுக்குள் பயன்படுத்தி விடுவது நல்லது.





**தேங்காய்**

உடனடி ஆற்றலைக் கொடுக்கும் மிகச் சிறந்த உணவு. விற்றமின்கள், தாதுக்கள், கலோரிகள், நார்ச்சத்துக்கள், அமினோஅமிலங்கள் இதில் நிறைந்துள்ளன. வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்தும். தேங்காயில் நல்ல கொழுப்பு அதிகம். ஆதலால் கொழுப்பு என்று தேங்காயைத் தவிர்க்க வேண்டாம். பக்றீரியா, பூஞ்சை, வைரஸ் தொற்றுகளிலிருந்து சருமத்தைக் காக்கும். தேங்காய், இளநீரில் உள்ள தாதுக்கள், உடலுக்குக் குளிர்ச்சியை அளித்து புத்துணர்வைத் தருகின்றன.

**முட்டைகோவா**

விற்றமின் சி, நாா்ச்சத்து உள்ளன. அதிக அளவில் பீட்டாகரோட்டீன் உள்ளதால், கண்களுக்கு நல்லது. எடையைக் குறைக்க நினைப்பவர்கள், சூப் அல்லது சாலட்டாக சாப்பிடலாம். தாதுஉப்புக்கள் நிறைவாக உள்ளதால், எலும்பு மெலிதல் பிரச்சினையைப் போக்கும். இதில் உள்ள பொட்டாசியம் சத்து, குருதி அழுத்த நோயாளிகளுக்கு நன்மையைச் செய்யும்.

உடலில் கட்டிகள், புற்றுநோய் செல்கள் வராமல் தடுக்கும். பெருங்குடல், மாா்பகம், கா்ப்பப்பை, சினைப்பை புற்று நோய்கள் வராமல் காக்கும். வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்தும். வாயு அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால், அதிகம் சாப்பிட வேண்டாம்.

# கீரை உப்புமா



## தேவையான பொருள்கள்:

கீரை - 1 கட்டு
இட்லி அரிசி - 2 கப்
துவரம் பருப்பு -  கப்
தேங்காய் - ஒரு கைப்பிடி
மிளகாய் வற்றல் - 4
சீரகம் - 1 கரண்டி
உப்பு - சுவைக்கேற்ப
கடுகு, உளுந்து - 1 கரண்டி
மோர் மிளகாய் - 4
கறிவேப்பிலை - 1 ஈர்க்கு
எண்ணெய் - தேவையான அளவு

## செய்முறை:

இட்லி அரிசி, துவரம்பருப்பு இரண்டையும் 2 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். கீரையை (சிறு கீரை, அரை கீரை, தண்டு கீரை, பாலக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை இவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தலாம்.) நன்றாக சுத்தம் செய்த பின் பொடியாக நறுக்கிக்கொள்ள வேண்டும்.

இட்லி அரிசி, துவரம்பருப்பு, தேங்காய், மிளகாய் வற்றல், சீரகம் ஆகியவற்றை சேர்த்து கொரகொரவென்று ரவை பதத்தில் அரைத்துக்கொள்ள வேண்டும். அரைத்த [illegible]வில் பொடியாக நறுக்கிய கீரை, உப்பு சேர்த்து கல[illegible], இட்லி தட்டில் ஊற்றி வேகவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

இட்லி ஆறியவுடன் அதை கையினால் உதிர்த்துக்கொள்ள வேண்டும். சட்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு, உளுந்து, கறிவேப்பிலை தாளித்து, அதில் மோர் மிளகாய் சேர்த்து, பிறகு உதிர்த்த கீரை இட்லியை போட்டு உதிரியாக வரும் வரை மிதமான தீயில் வைத்து கிளற வேண்டும். கீரை உப்புமா தயார்.

இது மிகவும் ஆரோக்கியமான, சத்தான சிற்றுண்டியாகும். இந்த கீரை உப்புமாவை சாம்பார் மற்றும் தேங்காய் சம்பலுடன் சாப்பிடலாம்.

## கறிவேப்பிலையாக...

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க 'த ஹிண்டு' ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒடுக்குமுறை அரசுகளால் பாதிக்கப்பட்ட தரப்பினரை தெற்கிலும், வடக்கிலும் பிரதிநித்துவம் செய்கின்றன.

எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்று சமவுரிமையுடன் வாழ்வதற்கான வேலைத்திட்டங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட மக்கள் விடுதலை முன்னணி தயாராக உள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்துக்கு மத்தியில், ஆட்சிபீடமேறும் தரப்பினரை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது காணப்படுகிறது.

தலைமை அமைச்சர் மாற்றம் மற்றும் நாடாளுமன்ற கலைப்புக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதோடு, அதே நிலைப்பாட்டிலேயே மக்கள் விடுதலை முன்னணியும் உள்ளது.

எந்தத் தரப்புக்கும் ஆட்சியமைக்க ஆதரவு வழங்கமாட்டோம். நடுநிலையாகவே செயற்படுவோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் கொள்கையின் அடிப்படையில் பணியாற்றுகின்றன.

அவ்வாறான அணுகுமுறையை கொண்டுள்ள கட்சிகள் இணைந்து பணியாற்ற முடியும். சில விடயங்கள் தொடர்பில் எங்கள் மத்தியில் கருத்துவேறுபாடுகள் உள்ளபோதிலும் எதிர்காலத்தில் நாங்கள் இணைந்து பணியாற்ற முடியும். மக்கள் விடுதலை முன்னணியிடம் இரகசிய நிகழ்ச்சிநிரல் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் அவ்வாறான இரகசிய நிகழ்ச்சி நிரல் இல்லை.

இவ்வாறான வெளிப்படைத் தன்மை காணப்படுவதால் ஒருவருக்கு மற்றையவரின் நிலைப்பாடு தெரியும் என்பதால் நாங்கள் சிறப்பாக இணைந்து செயற்பட முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் மகிந்த ராஜபக்ச தரப்பினரும் பன்னாட்டுச் சமூகத்துக்கு காண்பிப்பதற்காகவும் தங்கள் பலத்தை காண்பிப்பதற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்தியுள்ளனர். இரு கட்சிகளின் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் நலனிற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்தினார்கள் - என்றார். (5,10)

## நாடாளுமன்றம்...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏழு உறுப்பினர்களை பிரேரித்துள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை கொண்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணி, தமக்கே அதிக உறுப்பினர்கள் உரித்துள்ளது என்று கூறிவருகிறது.

நாடாளுமன்ற அமர்வை குழப்பமடைய செய்யும் நோக்கத்துடனேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பெரும்பான்மை இல்லாத நிலைமையிலும் ஆளுங்கட்சி என்ற கோதாவில் ஏழு உறுப்பினர்களை நியமித்துள்ளது என்று தெரிகிறது. இதனால், நாடாளுமன்றத்தை ரணகளமாக்கும் முயற்சியில் மகிந்த தரப்பு இறங்குமெனத் தெரிகிறது.

நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னதாக, சபாநாயகர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டியுள்ளார். இதன்போது, நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களை கொண்ட கட்சியென்ற அடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கே அதிக உறுப்பினர்கள் என்ற நிலைப்பாட்டை சபாநாயகர் எடுப்பார் என்று தெரிகிறது. (5)

## தெரிவுக்குழுவுக்கு...

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் 12 பேர் இடம்பெறுவார்கள். இதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 உறுப்பினர்களின் பெயர்களை முன்மொழிந்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணி இருவரின் பெயரை முன்மொழிந்துள்ளது. (5)

## பிணையில்...

பிரிவின் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். பொலிஸ் தாபன கோட்பாடுகளின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரால் அவர் பழைய பதவி நிலைக்கே அமர்த்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர குறிப்பிட்டுள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் 27 கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மற்றும் மகசீன் சிறைச்சாலையின் முன்னாள் கண்காணிப்பாளர் எமில் ரஞ்சன் ஆகியோர் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டனர்.

தாம் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நியோமல் ரங்கஜீவ மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி நியோமல் ரங்கஜீவவை பிணையில் செல்ல அனுமதித்தது. தம்மை மீண்டும் சேவையில் அமர்த்த வேண்டும் என்று கடந்த 19ஆம் திகதி பொலிஸ்மா அதிபரின் உதவிப் பணிமனையில் நியோமால் ரங்கஜீவ மேன்முறையீடு செய்திருந்தார்.

அவர் தற்போது பணியில் இணைக்கப்பட்டுள்ளார். மேன்முறையீட்டை விசாரணை செய்த பொலிஸ்மா அதிபர் இந்த நடவடிக்கை எடுத்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. அதேவேளை, இவருடன் கைதுசெய்யப்பட்ட மகசீன் சிறைச்சாலையின் முன்னாள் கண்காணிப்பாளர் எமில் ரஞ்சன் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஞ-5)

## ஜே.வி.பி.,

தேவையில்லை. இவ்வாறு மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய அரசியல் நிலமையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 101 உறுப்பினர்கள் மட்டும் தான் இருக்கிறார்கள். எமக்கு 103 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு தேவையில்லை. அவர்களுக்கு எமக்கு எதிராக தீர்மானத்தைக் நிறைவேற்றிக்கொள்ளத்தான் 122 உறுப்பினர்களின் ஆதரவு இருக்கின்றதே தவிர, உறுதியான கூட்டணியொன்றை அமைக்க அல்ல. அத்தோடு அவர்கள் கூட்டணிக் கட்சியல்ல.

ஆனால், நாம் தனியான கூட்டணி எனும் வகையில் ஐக்கிய தேசிக் கட்சியை விடப் பலமான நிலையிலேயே இருக்கிறோம். அதனால்தான் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு நாம் 7 உறுப்பினர்களின் பெயரைப் பரிந்துரைத்துள்ளோம் - என்றார். (ஞ-5)

## தமிழ்...

பிரிவுகளுக்கு அரச தலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார். இதற்கமைய வழக்குத் தாக்கல் செய்யப்படாத தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவர்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசியல் கைதிகள் விடயங்கள் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து வணக்கத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளையும் விடுவிப்பது தொடர்பில், அமைச்சரவைக் கூட்டத்தின்போது அரச தலைவர் யோசனை முன்வைத்துள்ளார். பொதுமக்களுக்குச் சொந்தமான அனைத்து காணிகளும் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் விடுவிக்கப்படும் - என்றார். (ஞ-5)

## இடைக்கால...

றிக்கையைச் சமர்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. கணக்கறிக்கை சமர்பிக்கப்பட்டால் அதனைத் தோற்கடிப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருந்தது. ஆனால் நேற்றுக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் தயாசிறி ஜயசேகர அரசு கவிழாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது;

122 பேர் மகிந்த அரசுக்கு எதிராக உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. ஆனால், அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் உள்ளனர். குறித்த இருதரப்பும் அரசுக்கு எதிரானவர்களே மாறாக ஐக்கிய தேசியக் கட்சியின் அரசை அமைப்பதற்கு ஆதரவானவர்கள் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சியில் 101 உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர். ஆனால், எமக்கு 104 பேர் உள்ளனர்.

அவர்களை விட எமக்கே பெரும்பான்மை பலம் உள்ளது. எமது அரசை ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடித்து 101 உறுப்பினர்களுடன் எவ்வாறு ஆட்சியை அமைக்க முடியும்?. மீண்டும் இவ்வாறனதொரு நிலையே ஏற்படும். மகிந்த மீதுள்ள வைராக்கியத்தின் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு நடந்துக்கொள்கிறது.

இதேவேளை, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் இடைக்கால கணக்கறிக்கை தோல்வியடைந்தால் அரசு கலையாது. வரவு செலவுத் திட்டம் அல்லது இடைக்கால வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்தாலேயே அரசு கலையும். குறித்த இடைக்கால கணக்கறிக்கை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் - என்றார். (ஞ-5,10)

## நியமனம்...

தலைவர் செயலகம் அனைத்து அமைச்சுக்களும் அறிவித்துள்ளது. அரச தலைவர் செயலகம் நேற்று விடுத்துள்ள சுற்றறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அரச திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள் சபைகளில் வெற்றிடங்கள் காணப்பட்டால் அதற்காக அமைச்சின் மேலதிக செயலர் தகுதியில் உள்ள ஒருவர் அல்லது ஓய்வு பெற்ற தகைமை உள்ள அரச அதிகாரி ஒருவர் அல்லது மூத்த அதிகாரி ஒருவர் அரசியல் பின்புலம் எதுவும் இல்லாத வகையில் நியமிக்கப்பட வேண்டும் என்று அதில் குறிப்பிட்டுள்ளார். அனைத்து அமைச்சுக்களின் செயலர்கள், தலைமை அமைச்சர், அமைச்சரவை, பொதுநிர்வாக அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றின் செயலர்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த தரப்பு, நியமனங்கள் சிலவற்றை மேற்கொள்ள எடுத்த முயற்சிகளைத் தொடர்ந்தே இந்த அறிவித்தல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் விடுக்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. (ஞ-5)

## வாய்திறந்த...

யில், நீதிமன்றங்க ளில் நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பான விளக்கமில்லாது கட்சி உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

**சர்ச்சைக் கருத்து**

கொழும்பு தனியார் தேசியத் தொலைக்காட்சியில் அரசியல் நிகழ்வொன்றில் பங்கெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை அடுத்து இடைக்கால உத்தரவை 3 பேர் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் விதித்துள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை மீண்டும் எடுக்கப்படும்போது ஐவர் கொண்ட நீதியரசர் குழாம் நியமிக்கப்படவுள்ளது என்று அறிய முடிகின்றது. அவ்வாறு நியமிக்கப்படும்போது மூவரின் முடிவு இந்தப் பக்கமும் இருவரின் முடிவு அந்தப் பக்கமும் இருக்கும் என்றும், தற்போதைய இடைக்கால உத்தரவில் மாற்றம் ஏற்படும் என்றும் அறிய முடிகின்றது என்று ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அவர் கூட இருந்தவர்கள் இது நாடாளுமன்றம் அல்ல, அரசியல் நிகழ்ச்சி என்று சுட்டிக்காட்டியபோது, எனக்கு அந்த விடயம் தெரியும் என்று ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

**வழக்கு**

ரஞ்சன் ராமநாயக்கவின் இந்தக் கருத்துக்கு எதிராக வழங்குத் தொடர்வதற்கு மகிந்த ஆதரவு அணியினர் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்றுக் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு நடத்திய பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில இந்தக் கருத்தைத் தெரிவித்த ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது;

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பாக மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்ட அரசிதழ் தொடர்பில் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் நிலுவையில் உள்ள தருணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க உயர்நீதிமன்ற நீதிபதிகளை நிந்திக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மீது வழக்குத் தொடரவுள்ளேன்.

இந்த வழக்கில் 5 பேர் கொண்ட நீதியரசர்கள் இருந்தால் 3 பேர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகத் தீர்ப்பளிப்பார்கள் என்று ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். இந்த விடயத்தை எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் எவ்வாறு கூற முடியும்?. இது உயர் நீதிமன்றம் உட்பட நீதித்துறையையே அவமதிக்கும் செயற்பாடாகும். நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ரஞ்சன் ராமநாயக்க மீது வழக்குத் தொடரவுள்ளேன். இவரின் கருத்துக்களால் மக்கள் குழப்பமான நிலைமை அடைந்துள்ளனர். என்றார். செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்தே அவர் தொலைக்காட்சி நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்துள்ளார். இலங்கை வரலாற்றில் உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களை இவ்வளவு தூரம் அவமானம் செய்யவில்லை - என்றார்.

ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பெர்ணான்டோ தெரிவித்தாவது

ரஞ்சன் ராமநாயக்க பைத்தியக்காரர் என்பது வேறு விடயம் என்றாலும் அவருடைய கருத்துக்களைப் புறந்தள்ள முடியாது. காரணம் உயர்நீதிமன்றத்தில் தீர்க்கமான தீர்மானம் ஒன்று வெளிவர இருப்பதற்கு முன்னதாகவே அவர் இவ்வாறுதான் அது அமையப் போகின்றது என்று பகிரங்கமாகக் கூறுகின்றார். இது தொடர்பான முழுமையான விசாரணை ஒன்றை நடத்தவேண்டும். என்றார்.

**ரணில் வாய்ப்பூட்டு**

உயர்நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பில் முழுமையான தெளிவு இல்லாது கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சி உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று அவர் விடுத்துள்ள சிறப்பு அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில நாள்களாக ஊடக சந்திப்புகளிலும், ஏனைய நிகழ்வுகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துவரும் கருத்துக்களை அவதானித்துள்ளேன். ஏதாவது ஒரு விடயதானம் தொடர்பாகக் கருத்துக்களை முன்வைக்கும்போது அது தொடர்பாக முழுமையாக அறிந்து கருத்துக்களை முன்வைக்க வேண்டும். விடயதானம் தொடர்பில் தெளிவில்லாத சந்தர்ப்பங்களில் அது தொடர்பாகக் கருத்துக்கள் தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

(ஞ-31,10)



# போராடி வென்றது அட்ராக் போய்ஸ்!

யாழ்ப்பாணம், நவ. 23
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பொலிகை பாரதி பிறீமியர்லீக்கால்பந்தாட்டத்தொடரில்நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை அட்ராக் போய்ஸ் அணி வெற்றிபெற்றது.
பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட் டத்தில் பொலிகை அட்ராக் போய்ஸ் அணியை எதிர்த்து பொலிகைநோர்த் யுனைற்ரெட் அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் அட்ராக் போய்ஸ் அணி வெற்றி பெற்றது. (ம-23)

## பன்டின் ஆட்டமிழப்பே ஆட்டத்தின் திருப்பம்!


'தலைவர்' கோக்லி தெரிவிப்பு



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ரி20 ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தமைக்கு பன்டின் ஆட்டமிழப்பு முக்கிய காரணமாகவும் திருப்பு முனையாகவும் அமைந்தது என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.
ஆட்டத்தின் பின்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
இழுபறியாகச் சென்ற இந்த ஆட்டம் ரசிகர்களுக்கும், வீரர்களுக்கும் மிகவும் சிறப்பாக இருந்திருக்கும். ரசிகர்கள் உற்சாகம் அடைந்திருப்பார்கள். நாங்கள் சிறப்பான வகையில் விளையாடினோம். ஆனால் மத்திய வரிசை வீரர்கள் தடுமாறியதால் ஓட்டங்களைக் குவிக்கும் வேகத்தில் தடங்கல் ஏற்பட்டது. இறுதியில் பன்ட் மற்றும் டினேஸ் கார்த்திக் களத்தில் இருக்கும்போது வெற்றிபெற முடியும் என்று நினைத்தோம். ஆனால் பன்ட் ஆட்டமிழந்ததும் மீண்டும் பின்தங்கிவிட்டோம். பன்டின் ஆட்டமிழப்பு திருப்பு முனையாக அமைந்துவிட்டது - என்றார்.
இந்த ஆட்டத்தில் குருனல் பாண்டியா ஓட்டங்களை வாரி வழங்கினார். கோக்லி ரண் அவுட்களையும், பிடி யெடுப்புக்களையும் தவற விட்டார். இவ்வாறானதொரு நிலையில் ஆட்டத்தின் இறுதி 5 பந்துகளில் நடந்தவற்றை தோல்விக்குக் காரணமாக கோக்லி குறிப்பிட்டுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## கெல்த் ஸ்ரார் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 23
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பொலிகை பாரதி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை கெல்த் ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.
பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பொலிகை பயர் ஹப்ஸ் அணியை எதிர்த்து பொலிகை கெல்த் ஸ்ரார் அணி மோதியது.
இந்த ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் பொலிகை கெல்த் ஸ்ரார் அணி வெற்றிபெற்றது. (ம-23)



## மோசமான களத்தடுப்பு தோல்விக்குக் காரணம்

தவான் கணிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ரி20 ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தமைக்குக் காரணம் மோசமான களத்தடுப்பே என்று தெரிவித்தார் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான்.
களத்தடுப்பில் செய்த தவறுகளே தோல்விக்கு முக்கிய காரணமாகும். ஒரு சில பிடியெடுப்புக்களை நழுவ விட்டோம். இதேபோல் ரன் அவுட் வாய்ப்பையும் (மக்ஸ்வெலுக்கு) நழுவ விட்டோம்.
ஆனால்இதுவெல்லாம்விளையாட்டில் சாதாரணம். தோல்வி அடைந்தாலும் இந்த ஆட்டத்தில் கிடைத்த நம்பிக்கையை அடுத்த ஆட்டத்துக்குக் கொண்டு செல்வோம் என்று தவான் மேலும்தெரிவித்தார். (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 23
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



## ஆஸ்திரேலியாவின் பயிற்சியாளராக பொண்டிங் நியமிக்கப்பட வேண்டும்

வோர்ண் ஆலோசனை

ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராக பொண்டிங் நியமிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் வீரர் வோர்ண்.
ஆஸ்திரேலிய ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே வோர்ண் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆஸ்திரேலிய கிரிக்கெட்டில் கடந்த 25-30 ஆண்டுகளாக மிகப்பெரிய வீரர்கள் இருந்துள்ளனர்.
கிரேம் ஹிக் கடந்த சில ஆண்டுகளாக ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக இருந்து வருகிறார். ஆனால் செய்த தவறுகளையே மீண்டும் மீண்டும் செய்கின்றனர். மாற்ற வேண்டிய நேரம் இதுவே. மார்க் வாஹ், ரிக்கி பொண்டிங், மைக்கேல் கிளார்க், மைக் ஹஸி, ஆகியோர் நிச்சயம் துடுப்பாட்ட பயிற்சியாளர் பொறுப்புக்கு அவசியம். பொண்டிங்கைப் பரிசீலிப்பது தவிர்க்க முடியாதது - என்றார். (ம)

# பயிற்சிக்கு திரும்பினார் பாண்டியா

காயம் காரணமாக சுமார் 60 நாள்களுக்கு மேலாக களத்துக்குத் திரும்பாமல் இருந்த பாண்டியா தற்போது படிப்படியாக வலைப்பயிற்சியை ஆரம்பித்துள்ளார். "ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடிப்பதே எனது இலக்கு" என்று அவர் தெரிவித்தார்.
ஐக்கிய அரபு இராச்சியத்தில் அண்மையில் ஆசியக் கிண்ணத் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடருக்கான இந்திய அணியில் பாண்டியா இடம்பெற்றார். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் பந்துவீசிய போது அவருக்கு முதுகில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. காயம் வீரியமாக இருந்ததை அடுத்து அவர் தொடர்ந்து ஓய்வில் இருந்து வந்தார். இதனால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று வகைத் தொடர்களையும், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி20 மற்றும் டெஸ்ட் தொடரையும் பாண்டியா தவறவிட்டார். இந்த நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில்களமிறங்கும்நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார்.
"அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற இருக்கும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு உடற்தகுதி பெற கடுமையாக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். முழுமையான உடற்தகுதி பெற்றபின், மும்பையில் கடுமையான பந்துவீச்சுப் பயிற்சியை தொடங்குவேன். 60 நாள்களுக்குப் பிறகு இலேசான வகையில் பந்துவீசத் தொடங்கியுள்ளேன்" என்று பாண்டியா மேலும் தெரிவித்தார். (ம)



# இலங்கை - இங்கிலாந்து 3ஆவது டெஸ்ட் இன்று!

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் கொழும்பில் இன்று ஆரம்பமாகிறது.
இங்கிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலிரு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் அந்த இரண்டு ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. இதனால் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் இங்கிலாந்திடமே செல்லும். எனினும் சொந்த மண்ணில் வழித்துத் துடைக்கப்படாமல் கௌரவத் தோல்வியடைவதற்கு இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலை இலங்கைக்கு உள்ளது. (ம)

# இன்றும் இல்லை டினேஸ் சந்திமல்

இங்கிலாந்துக்கு எதிராக இன்று நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணியின் தலைவர் சந்திமல் களமிறங்கமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் சந்திமல் காயமடைந்தார். அதன் பின்னர் அவர் தொடர்ச்சியாகப் பயிற்சியைப் புறக்கணித்து வந்தார். காயத்தின் தன்மை தீவிரமாக இருந்ததை அடுத்து இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் சந்திமல் களமிறங்கவில்லை. பொறுப்புத் தலைவராக லக்மல் செயப்பட்டார். தற்போது மூன்றாவது ஆட்டத்திலும் சந்திமல் களமிறங்க மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தனது பந்துவீச்சு முறைமையை சோதனைக்கு உட்படுத்துவதற்காக தனஞ்சய ஏற்கனவே இந்த ஆட்டத்தில் இருந்து விலகியுள்ள நிலையில் சந்திமலும் விலகியுள்ளமை இலங்கை அணிக்குப் பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ம)





ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான தொடர் கடந்த சில நாள்களாக நடைபெற்ற நிலையில் கழகங்களின் செயற்பாடுகள் முடங்கியிருந்தன. இந்தத் தொடர் முடிவடைந்ததை அடுத்து தற்போது கழகங்கள் மீண்டும் தமது பயிற்சி முகாமை ஆரம்பித்துள்ளன. ஸ்பானியக் கழகமான பார்சிலோனா நேற்று பயிற்சி முகாமை ஆரம்பித்தது. (ம)

# மட்ரிட் - மார்செலோ ஒப்பந்தம் கைச்சாத்து

ஸ்பெய்னின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட்டின் செல்லப்பிள்ளையாக மார்செலோ தொடர்ந்தும் இருப்பார்.
பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான மார்செலோ, ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காகவும் விளையாடி வருகிறார். மட்ரிட்டின் முக்கியப் புள்ளிகளில் ஒருவராகவும் அவர் விளங்குகிறார். அணியின் வெற்றிக் கொண்டாட்டங்களில் மார்செலோவுக்கு முக்கிய இடம் வழங்கப்படும். இதனால் மார்செலோவை மட்ரிட்டின் செல்லப்பிள்ளை என்றே பன்னாட்டு ஊடகங்கள் பலவும் குறிப்பிட்டன. அவருக்கும் மட்ரிட்டுக்கும் இடையிலான ஒப்பந்தம் இந்த மாதத்துடன் முடிவுக்கு வரும் நிலையில் இருந்தது. எதிர்பார்க்கப்பட்டதைப் போல் மார்செலோவின் ஒப்பந்தம் நீட்டிக்கப்ப் டுள்ளது. அதுவும் அடுத்த 2022ஆம் ஆண்டு வரை இந்த ஒப்பந்த நீட்டிப்பு கைச்சாத்தாகியுள்ளது. (ம)




# அன்டர்சனுக்கு பதிலாக புரோட்

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் இன்று ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அன்டர்சனுக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.



முதலிரு ஆட்டங்களிலும் அன்டர்சன் மிகச் சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தினார். இங்கிலாந்து கிண்ணம் வெல்வதற்கு அன்டர்சன் முக்கிய காரணமாக இருந்தார். இதையடுத்து அன்டர்சனுக்கு பணிச்சுமை அதிகரித்துள்ளது என்றும் மூன்றாவது ஆட்டத்தில் அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட வேண்டும் என்றும் கிரிக்கெட் வல்லுனர்கள் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதையடுத்து அன்டர்சனுக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டு புரோட் பதில் வீரராகச் சேர்க்கப்பட்டார். (ம)

# பங்களாதேஷ் அணி வலுவான ஆரம்பம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் பங்களாதேஷ் அணி வலுவான ஆரம்பம் கண்டது. அந்த அணி 8 இலக்குகளை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் சிட்டகொங்கில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஆரம்ப வீரர்களாக கையிஸ் மற்றும் சர்கார். ஓட்டமெதையும் பெறாது றோச்சின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் சர்கார்.

ஓர் ஓட்டத்தில் முதலாவது இலக்கை இழந்தாலும் அதன் பின்னர் கையிஸ் மற்றும் ஹக்கியூ இணைந்து சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினார்கள்.

பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது பங்களாதேஷ். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அணி 105 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கையிஸ்.

மிதுனை 20 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் பிஸ்கூ. அபாரமாக விளையாடி சதம் கடந்தார் ஹக்கியூ. 34 ஓட்டங்களுடன் கபிரியேலின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் அணித் தலைவர் சகிப் அல் ஹசன். 120 ஓட்டங்களுடன் ஹக்கியூ பவிலியன் திரும்பினார்.





மத்திய வரிசையின் நம்பிக்கைகளான ரகிம், மகமதுல்லா இருவரும் முறையே 4, 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். மிராஸ் 22 ஓட்டங்களுடன் வரிக்கனின் பந்துவீச்சில் போல்ட் ஆனார்.

நஜீம் ஹசன், தயுல் இஸ்லாம் இருவரும் பின்வரிசையில் அணியைப் பலப்படுத்தினார்கள். பங்களாதேஷ் அணி 8 இலக்குகளை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய முதலாம் நாள் முடிவுக்கு வந்தது. ஹசன் 24 ஓட்டங்களுடனும், தயுல் இஸ்லாம் 32 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# வீராங்கனைகளுடனான தொடர்புகளை வலுப்படுத்த பன்னாட்டு பெண்கள் ரென்னிஸ் சம்மேளனம் முடிவு

பன்னாட்டு பெண்கள் ரென்னிஸ் சம்மேளனம் ஊக்கமருந்து விவகாரம் தொடர்பான தனது கட்டுப்பாடுகளையும் வீராங்கனைகளுடன் கொண்டுள்ள தொடர்பாடல்களையும் மேலும் இறுக்கியுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடருக்கான குருதி மாதிரிப் பரிசோதனையில் செரபோவா. மெல்டோனியம் என்ற தடைசெய்யப்பட்ட மருந்தை உட்கொண்டமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து உடனடியாக நடை முறைக்கு வரும் வகையில் 24 மாதங்கள் அதாவது 2 வருடங்கள் அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையை செரபோவா ஏற்கவில்லை. “மெல்டோனியம் கடந்த முதலாம் திகதியே (2015 ஜனவரி) தடை செய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டது. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை விளையாட்டு உலகில் அது அனுமதிக்கப்பட்டே இருந்தது. எனக்கு இருக்கும் ஒருவகை நோய்க்கான நிவாரணியாக நான் மெல்டொனியத்தைப் பயன்படுத்தினேன்'' என்று தெரிவித்து வாதிட்டார். தவிர தனக்கு மெல்டோனியம் தொடர்பாக மாற்றப்பட்ட சட்டங்கள் தொடர்பாக மின்னஞ்சல் செய்ததாக பெண்கள் ரென்னிஸ் சம்மேளனம் அனுப்பிய மின்னஞ் சலை பார்க்கவில்லை எனவும் மின்னஞ்சலை விடச் சிறப்பான முறையில் குறித்த தகவலை தனக்கு தெரியப்படுத்தியிருக்கலாம் எனவும் தெரிவித்தார். இதனையடுத்தே பன்னாட்டு பெண்கள் ரென்னிஸ் சம்மேளனம் ஊக்கமருந்து விவகாரம் தொடர்பான தனது கட்டுப்பாடுகளையும் வீராங்கனைகளுடன் கொண்டுள்ள தொடர்பாடல்களையும் மேலும் இறுக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்த நிலையில் அவை தற்போது நடைமுறைக்கு வந்துள்ளன என்று தெரிவித்துள்ளது. தடைசெய்யப்படும் மருந்துகள். வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக வீராங்கனைகளுக்கு அறிவிக்கும் விதத்தில் சில கூடுதல் தொடர்பாடலைப் பேணவுள்ளோம்.

இதன் பின்னர் எவரும் குறித்த விடயங்கள் தொடர்பாக தமக்கு தெரியாது எனத் தெரிவித்து தப்பிக்க முடியாது என அந்த சம்மேளனம் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(ம)

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்.
அதிபர்சேவை SLPS
(25.11.2018) Sun
9.00 am - 3.00 pm
உளச்சார்பும்
பொதுஅறிவும்
P. உமாசங்கர்
SLAS, SLEAS
ஏனைய வகுப்புக்கள்
P. உமாசங்கர் மற்றும் துறைசார் வளவாளர்களின் விரிவுரைகள்
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்.
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
077 4696 695

வேலையாள் தேவை
மின்னியல் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை.
★ ஆண்
★ 25 வயதிற்கு உட்பட்டவர்கள்
தொடர்பு - 075 5904 041



கட்டாரில் 2022ஆம் ஆண்டு கால் பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான கிண்ணம் நேற்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. (ம)

தெ◌ன்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கூடான யாத்திரை
ஆரம்பம் 20.02.2019 யாத்திரீகர் 10 நாள்கள் 16
இதுவரை சென்றிராத புதிய ஆலயங்கள்
உச்சிப்பிள்ளையார், திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, அகோபிலம் நரசிங்கப்பெருமாள், கொல்லி-மலை, ஈசா, ஸ்ரீ சைலம் ஜோதிலிங்கம், மந்திராலயம், ஸ்ரீ ராகவேந்திரர் ஜீவசமாதி, புட்டப்பத்திபாபா இஸ்கான் கோவில், மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், ஸ்ரீரெங்கநாதர் (1500 ஆண்டு பழமையான ஆலயம்), ஸ்ரீரெங்கப்பட்டினம், சிருங்கேரி, வித்தியாபீடம், சாங்காரபீடம், முறட்டீஸ்வராசிவன், கோடிலிங்கேஸ்வரர், சோமநாதர், காளபைரவர், கொள்ளூர் மூகாம்பிகை, உடுப்பி கிருஷ்ணா, தர்மசாலா, மஞ்சுநாதசுவாமி, கார்த்திகேயா (சுப்பிரமணியர்), மடிக்காவேரி, தலைக்காவேரி, மகாநதி, பெல்லூர் அன்னபூரணி, பொன்னியம்மன் கோயில், பிருந்தாவனம் காடின், மைசூர் பாலஸ், விருத்தாச்சலம், விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில், சிருங்கேரி (கேசேவ் கிராமம்), கமண்டல கணபதி மகாபல்லேஸ்வரர் மற்றும் வேறு இடங்களும் நேரமிருந்தால் காணலாம். **தரிசிக்கும் நாள்கள்** : கர்நாடகா 6 நாள்கள் **தரிசிக்கும் நாள்கள் :** ஆந்திரா 6 நாள்கள் மற்றும் இடங்களும் சொப்பிங்கும் 4 நாள்கள் மொத்தமாக 16 நாள்கள்.
**தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :-** இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.
மேலும் **விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு** செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். **(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)**
**வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.**
தொடர்புகளுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
sriranganathan1944@gmail.com / sriranganathan2601@gmail.com
T.P - 077 768 0102/ 077 736 2154



# பன்னாட்டு கிண்ணம் விரைவில் சாத்தியம்

## செரபோவா நம்பிக்கை

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணமொன்றை விரைவில் வென்றேதீருவேன் என்று தெரிவித்தார் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரிய செரபோவா.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின் போது செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகளில் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தான மெல்டோனியம் இருந்தமை கண்டறியப்பட்டது. இதையடுத்து இரண்டு வருடங்கள் அவருக்குத் தடை விதிக்கப் பட்டது. இந்தத் தடைக்காலம் முடிந்து மீண்டும் அவர் களம் திரும்பிய போதிலும் இதுவரை பன்னாட்டு அந்தஸ்து பெற்ற முக்கிய கிண்ணம் எதையும் கைப்பற்றவில்லை. இதையடுத்தே இவ்வாறு தெரிவித்தார் செரபோவா. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.